July ...34 No.

# செங்குந்த மித்திரன்

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே
ஒற்றுமை நீங்கிடி லனைவர்க்கும் தாழ்வே




—அடே! இந்தப் பிசாசைப் பாருடா!

...ரியர் :—பி. செ. மாணிக்கவாசக முதலியார்.
...ளர் :—தி. நா. ச...பதி முதலியார்.

A. JAGANNATHACHARI

N34.8.7
808447

# செங்குந்த மித்திரன்

(ஓர் உயரிய மாதாந்த வெளியீடு)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அநுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள்நாடு ரூ. 1—8—0 வெளிநாடு ரூ. 2—0—0

### சந்தாதாரர்களுக்கு

1. செங்குந்த மித்திரனுக்கு ஜனவரி மாதமே (தை௴) வருட ஆரம்பமாதலால் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி முதலாகவே பத்திரிகைகள் அனுப்பப்படும்.

2. புதிதாகச் சந்தாதாரராய்ச் சேர்வோர் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்.

3. சந்தாதாரர் விலாசம் மாறினால் சந்தா நெம்பரைக் குறித்து இங்லிஷ் மாதம் 10-ந் தேதிக்குள் தெரிவித்து விட வேண்டும்.

4. கடிதம் எழுதும்போதும், சந்தாத் தொகை அனுப்பும்போதும் தவறாமல் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டும். பத்திரிகையின்மீது சுற்றப்பட்டுள்ள விலாசத்திற்கு முன் குறிக்கப்பெற்றிருப்பதே சந்தா நெம்பராகும்.

## விளம்பர விகிதம்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினாங்கு, தென்னாப்பிரிகா முதலிய வெளி நாடுகளிலும் சென்றுலவுவதுமாகிய உயர்ந்த தமிழ் மாதப் பத்திரிகை 'செங்குந்த மித்திர'னில் உடனே உங்கள் வியாபாரத்தைப்பற்றி விளம்பரஞ் செய்யுங்கள்.

ஒரு தடவைக்கு முழுப்பக்கம் ரூ. 10

அரைப்பக்கம் ரூ. 5 கால்பக்கம் ரூ. 3


# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாத வெளியீடு

ஆசிரியர்: பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

| தொகுதி—அ | பவ௵ ஆடி௴ | பகுதி எ |
|---|---|---|


## உள்ளடக்கம்


பத்திரிகாசிரியர் முன்னுரை ... 366
நினைவுக் குறிப்புகள் .... 372
செங்குந்தர் கல்விநிதி உபகாரச் சம்பளம் ... 378
மதிப்புரை ... 380
பரசுராம முதலியார் அல்லது பகல்வேஷ பகதூர் ... 381
இன்று போய் நாளை வா ... 384
வைசூரி அல்லது அம்மை ... 387
கமலா அல்லது விதவா விவாஹம் ... 389
விகடத் துணுக்குகள் ... 393
சாந்தி, சாந்தி, சாந்தி ... 396
முகூர்த்தம், பலகாரம் ... 398
விநோத விளம்பரங்கள் ... 402
நமது தபால் பெட்டி ... 405
அதிசயம், அற்புதம், ஆச்சரியம் ... 407
[illegible] வியோகம் ... 409
கயிலாசலக் குமரேசர் பிள்ளைத்தமிழ் ... 410
செங்குந்த யாத்திரைவாசி .... 413
வர்த்தமானம் ... 416
பண்டைத் தமிழ்ப் பெண்கள் ... 420
நன்கொடை ... 422
வளர்ச்சி ... 424
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கக் கூட்டம் ... 427
கல்விநிதிக் கூட்டம் ... 428



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JUL 1934

208447

ட

ஓம்

# பத்திரிகாசிரியர் முன்னுரை

உலகபசு பாச தொந்த மதுவான
உறவுகிளை தாயர் தந்தை மனைபாலர்
மலசலசு வாச சஞ்ச லமதாலென்
மதிநிலைகெ டாம லுன்றன் அருள்தாராய்
சலமருகு பூளை தும்பை யணிசேயே
சரவணப வாமு குந்தன் மருகோனே
பலகலைசி வாக மங்கள் பயில்வோனே
பழனிமலை வாழ வந்த பெருமாளே.

—ஸ்ரீ அருணகிரிநாதர்.

---

## மாணவர்களை வெருட்டும் சிக்கனப் பிசாசு

'என்னடா! ஏன் இப்படி வெருண்டு ஓடுகிறீர்கள்? பள்ளிக்கூடத்தை பகிஷ்கரித்து விட்டீர்களா? உபாத்தியாயரிடத்தில் கோபித்துக் கொண்டீர்களா? ஆங்கிலப் படிப்பே வேண்டாமென்று வெறுத்து விட்டீர்களா? அல்லது உங்கள் கால்களே பள்ளிக்கூடத்தில் நுழைய மறுத்துவிட்டனவா? ஆத்திரப்படாதீர்கள்; பயமில்லாமல் சொல்லுங்கள்.'

'ஆமாண்டா. இவன் ரொம்ப சமர்த்தன். அங்கே போய்ப் பார்த்தால் தெரியும். நமக்கு முந்தி ஓடுவான். அதைப் பார்த்தால் பாதி உயிர் அங்கேயே போய்விடுகிறது.'

'எங்கேடா இருக்கிறது? எனக்குச் சொல்லேண்டா. நான் கொஞ்சம் பார்க்க வேண்டாமாடா ?

'போய்ப் பார். பள்ளிக்கூட கேட்டிலேயே இருக்கிறது. எவ்வளவு பெரிசு தெரியுமா? சிக்கனப் பிசாசாம். ஜி. ஓ. நெம்பர் நாற்பத்தி யேழாம்.

'ஓ ஹோ! அதுவா? வந்துட்டுதா? எங்கப்பாகூட சொன்னுங்கடா, வரப்போவுதுன்னு. அது பணக்கார



பசங்களை உட்டுட்டு ஏழைப் பசங்களை தான் விரட்டுமாம். நீ பார்த்தாயாடா ?'




—அடே! இந்தப் பிசாசைப் பாருடா!

இந்த சம்பாஷணை என்னவா யிருக்குமென நினைக்கிறீர்கள். விஷயம் இன்னதெனப் புலப்படா விட்டாலும் அது சிறு பிள்ளைகள் சம்பாஷணை என்பதும் அதுவும் மாணவர்கள் சம்பாஷணை என்பதும், நிச்சயமாய்த் தெரிகிறது.

ஆம். மாணவர்களின் பேச்சுத் தான். சென்னை அரசாங்கத்தார் கல்வியில் பிற்போக்கான சமூக ஏழை மாணவர்களுக்கு இதுவரை கொடுத்து வந்த உபகாரச் சம்பளத்தில் சிக்கனம் செய்திருக்கிறார்கள். சிக்கனம் என்பதும் கொஞ்சமல்ல. எந்தப் பள்ளிக்கூடத்திலும் ஒரு ஆண்டில் வழங்கப்படும் உபகாரச் சம்பளம், அந்தப் பள்ளிக்கூடத்தின் முந்திய வருடத்திய சம்பள வருமானத்தில் நூற்றுக்கு ஏழரை விகிதத்துக்கு மேல் எந்த விதத்திலும் அதிகப்படக் கூடாதாம்.

இதன்படி பார்த்தால், ஒரு உயர்தர பாடசாலையில் இவ்வாண்டில் நூறு மாணவர்கள் வாசிப்பார்களாயின் அடுத்த ஆண்டில் பதினைந்து பிற்போக்கான சமூக மாணவர்கள்தான் அப்பாடசாலையில் வாசிக்கக் கூடும். அப்பொழுதுதான் பதினைந்து பேருக்கும் அரைச் சம்பள வீதம் பார்த்தால் நூறு மாணவர்களுடைய சம்பளத்தில் ஏழரை விகிதமாக இருக்கக் கூடும். ஆனால், இதுவரை ஒவ்வொரு பாடசாலையிலும் பிற்போக்கான சமூகத்தைச் சார்ந்தவர்கள் சராசரி நூற்றுக்கு நாற்பத்தைந்து மாணவர்கள். வரையில் அரைச் சம்பளம் பெற்று வாசித்து வந்திருக்கிறார்கள். எனவே, நூற்றுக்கு முப்பது மாணவர்கள் வீதம் ஒவ்வொரு பாடசாலையிலும் உயர்தரச் சம்பளம் கொடாமல் நிறுத்தப்பட வேண்டிய அவசியம் இந்த உத்தரவினால் ஏற்பட்டிருக்கிறது. இதன் பலன் என்னவாகும்? பிற்போக்கான சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி அபிவிருத்தி அடியோடு தடைப்படுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

கல்வியில் மற்ற சமூகங்களைப்போல் முற்போக்கடையாத சமூகங்களென அரசாங்கத்தினரால் கருதப்பட்டு இதுவரை உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டு வரும் சமூகங்கள் கைக்கோளர், லிங்காயதர், நாயக்கர், படையாட்சி, கம்மாளர், இடையர், வண்ணார், அம்பட்டர், பள்ளர், பறையர் முதலிய இந்து சமயத்தவர்களும், முகம்மதிய கிருஸ்தவ சமயத்தினருமாவர். மேலே சொல்லப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஏழை மாணவர்கள் எத்தனை பேர்கள் இருப்பினும் அத்தனை பேர்களும் உயர்தர வகுப்புகளில் இதுவரை அரைச் சம்பளம் பெற்று வாசித்து வர முடியும். பெண்களா யிருந்தால் 3-வது பாரம் வரையில் சம்பளமே இல்லாமலும் அதற்கு மேல் பாதிச் சம்பளத்துடனும் வாசித்து வரலாம். ஆனால், தற்போது அரசாங்கத்தார் பிறப்பித்துள்ள 1934-ம் வருடத்து 47-ம் நெம்பர் உத்தரவானது பிற்போக்கான சமூக ஏழை மாணவர்களை எல்லாம் விரட்டி யடிக்கிறது.

மேலே காட்டப்பட்ட சமூகங்களில் அநேகமாய் அனைவரும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களே. கைத்தொழிலையும், விவசாயத்தையும் நம்பியவர்கள். இந்த இரண்



டின் நிலையும் இப்பொழுது எப்படி இருக்கிறதென்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. விவசாயத்தை நம்பினோர் பருவமழை இன்மையாலும், விலைவாசிகள் தலை கீழாய்ப் புரண்டுவிட்டதாலும் விரை முதலும் கிடைக்காமல், வாய்தா செலுத்த வகையற்று வாடிக் கிடக்கிறார்கள். கைத்தொழிலாளர்களோ ஒரு நாளெல்லாம் ஓய்வு சிறிதுமின்றி வேலை செய்தாலும் ஒரு அணா கூலி பெறுவதும் அருமையாயிருக்கிறது. இந்த சொற்ப கூலியைக் கொண்டு ஒரு குடும்பமே பிழைக்கவேண்டும். அவர்கள் வயிறார இந்தக் கூலியில் உண்ண முடியுமா என்பது சிந்திக்கத் தக்கது. இது போதாக் குறைக்கு பொன்னியம்மாள் குறை யென 47-ம் நெம்பர் உத்தரவு ஒன்று 'நீங்கள் உமது மக்களுக்குப் பூராச் சம்பளமும் செலுத்தித்தான் தீரவேண்டும்' எனக் கூறுமாயின் அது அவர்களால் சாத்தியப்படத் தக்கதா?

ஏழை மாணவர்களில் எத்தனையோ பேர் பிற்காலத்தில் அதி மேதாவிகளாய் விளங்கத் தக்க அறிவு நுட்பம் வாய்ந்தவர்களா யிருக்கிறார்கள். ஏழைகளிலிருந்தே உலகப் பெரியார்களில் அநேகர் உதித்திருப்பதாகச் சரித்திரங்களும் கூறுகின்றன. அரசாங்கத்தாரின் உபகாரச் சம்பளம் மறுக்கப்படுமாயின் ஏழை மாணவர்கள் கண்டிப்பாய்த் தமது படிப்பை நிறுத்த நேருமாதலின், பிற்போக்கான சமூகத்தவர்களின் கல்வி யபிவிருத்தி அதனால் தடைப்படுவது மட்டுமன்றி பொதுவாகவே தென்னிந்தியாவின் அறிவு வளர்ச்சிக்கே இடையூறு நேரக் கூடுமென நினைக்கிறோம்.

எனவே, அரசாங்கத்தார் வரவு செலவை நேர் செய்யும் பொருட்டு சிக்கனக்கோடரியை உபயோகப்படுத்தும்போது அது மாணவர்கள் கழுத்தில் விழாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றே நாம் சென்னை அரசாங்கத்தினரைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நமது செங்குந்தர் சமூகமானது முற்றும் நெசவுத் தொழிலையே நம்பி உயிர்வாழ்வது. கைத்தறி நெசவுத் தொழிலின் நிலை எத்தகையதெனக் கூறவேண்டியதில்லை. கைத்தறிகளில் உற்பத்தியாகும் சரக்குகள் ஜப்பான் போட்டியினால் நூல் முதலுக்கும் குறைவாகச்

சில சமயங்களில் தள்ளிக் கொடுக்கவேண்டி யிருக்கிறது. இவ்வாறாயின், நமது இளைஞர்களைப் படிக்க வைக்க சிறு தொகையேனும் நம்மால் செலவு செய்யமுடியுமா? 7 லட்சம் செங்குந்தர்களில் கல்லூரிப் படிப்பை முடித்து பட்டம் பெற்றவர்களைப் பார்க்கும்போது 40-க்கும் குறைவாகவே இருக்கிறது. இந்த நாற்பது பேர்களில் 30 பேர்கள் உபகாரச் சம்பளத்தின் உதவியினால் படித்தவர்களே. இவ்வுபகாரச் சம்பளமில்லையேல் இந்த 30 பேர்களும் படித்திருக்க முடியாது. எனவே, படித்தவர்களின் தொகை மிகக் குறைவா யிருக்கிற நமது சமூகத்திற்கு—வருமானக் குறைவினால் ஜீவனோபாயத்திற்கே வகையற்று துன்பத்தில் மூழ்கித் தத்தளிக்கும் நமது செங்குந்த ஜாதியினருக்கு, அரசாங்கத்தாரின் உபகாரச் சம்பளம் எவ்வளவு அவசியமானதெனச் சொல்லவேண்டியதில்லை.

நமது நிலையைத் தெளிவாக அரசாங்கத்திற்கு விளக்கிக் காட்டி உபகாரச் சம்பளத்திற்கு மன்றாட வேண்டியதும், 47-ம் நெம்பர் உத்தரவை அடியோடு ரத்து செய்ய முயற்சிக்க வேண்டியதும் மிக அவசரமான கடமையாகும். இதைப்பற்றி நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்திலும் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றிருப்பதை இதே இதழில் 427-ம் பக்கத்தில் பார்க்கலாம். எனவே உபகாரச் சம்பளம் அளிப்பதை குறைக்கக் கூடாதென்றும், அடுத்த ஏப்ரல் மாதம் வரையில் தள்ளிவைக்கப் பெற்றுள்ள 47-ம் நெம்பர் உத்தரவை ரத்து செய்து விட வேண்டுமென்றும் செங்குந்தர்கள் வதியும் ஒவ்வொரு கிராமத்திலும், கூட்டங்கள் கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றி சென்னை கவர்ன்மெண்டாருக்கும், (The Secretary, The Minister for Education, Madras Government) கல்வி இலகாத் தலைவருக்கும் (Director of Public Instruction, Madras) அந்தந்த ஜில்லா கல்விக் கழகத்திற்கும் District Educational Council,......) உடனே அனுப்பி வைக்க வேண்டுமென்றும், இவ்வாண்டு இறுதிவரை சோர்வின்றி இத்தகைய தீர்மானங்களை அடிக்கடி அனுப்பிவர வேண்டுமென்றும் செங்குந்த ரனைவரையும் நாம் வேண்டிக் கொள்ளுகிறோம்.



## சைதாப்பேட்டை ஸ்ரீ சு. சடையப்ப முதலியார் பிரிந்தார்

சென்னை, சைதாப்பேட்டை திரு. சு. சடையப்ப முதலியார் அவர்கள் 22-6-34-ந் தேதி காலை 4½ மணிக்கு மண்ணுலகம் நீத்தமை கேட்டு மிக வருந்துகிறோம். இவர், சிறிது காலமாகவே நீர் வியாதியினால் உடல் நலமின்றி இருந்தாராயினும், இவ்வாறு அகால மரண மடைவரென எவரும் கருதவில்லை.



22-6-34-ந் தேதி காலஞ்சென்ற சைதாப்பேட்டை முனிசிபல் சேர்மனும் நமது தலைச்சங்க உபதலைவர்களுள் ஒருவருமாகிய ஸ்ரீ சடையப்ப முதலியார் அவர்கள்

தமது சொந்த ஊராகிய சைதாப்பேட்டையில் அநேக ஆண்டுகளாக கௌரவ மாஜிஸ்டிரேட்டாகவும், பின் சைதாப்பேட்டை முனிசிபல் அங்கத்தினராகவும் இருந்து பொது நலத் தொண்டாற்றி இருக்கிறார். கடந்த இரண்டு ஆண்டுகளாக முனிசிபல் சேர்மனாகவும் இருந்து வந்தார். அவ்வூரில் செங்குந்தர் ஐக்கிய நாணய சங்கம் அமைக்கப்படுவதற்குக் காரணமா யிருந்தவரும் இவரே. இதுவரையில் அதன் தலைவராகவும் இருந்து வந்தார்.

சமீபத்தில் நெசவுத் தொழிலாளருக்குக் குறைக்கப்பட்ட கூலியின் காரணமாக செங்குந்தர்கள் வேலை நிறுத்தம் செய்திருந்தபோது வேலை நிறுத்தக்காரர்களுக்கு உணவு அளிப்பதிலும், கூலியைச் சிறிது உயர்த்தித் தரவும், அதன் மூலம் வேலை நிறுத்தக்காரர்கள் மீண்டும் தொழில் புரியவும் ஏற்பாடு செய்வதிலும் நிறைந்த ஊக்கங் காட்டியவர். நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் துணைத் தலைவர்களில் ஸ்ரீ சடையப்ப முதலியாரும் ஒருவர்.

இவர் செல்வாக்கான குடும்பத்தில் உதித்து தமது வாழ்நாளை மிக கவுரவமாகவே கழித்து வந்தார். இவருக்கு இரு புதல்வர்கள் இருக்கிறார்கள். இவர் அகால மரணமடைந்தது சைதாப்பேட்டை வாசிகளுக்கும், செங்குந்தர்களுக்கும் ஒரு கஷ்டமேயாகும்.

இவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு நமது வருத்தத்தை இவரது புதல்வர்களுக்கும், உறவினர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

# நினைவுக் குறிப்புகள்

**கண்ணும் காதும் காட்டும் மந்திரிகள்.**

பிரிட்டிஷ் மந்திரிகளின் சாதுரிய புத்தி வேறு எவருக்கும் வராது. பல்லவிகளை மாற்றிப் பாடுவதில் வெகு சமர்த்தர்கள். அவர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அந்தரார்த்தம் வேறு; பகிரார்த்தம் வேறு. சீர்திருத்தம் வழங்கப்படும் என்றால் உள்ள சீர்திருத்தம் பிடுங்கப்படும் என்பதே கருத்து.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ ராம்சே மாக்டொனால்டு கண் கோளாறு காரணமாக மூன்று மாத ரஜாவில் போகிறார். போகிறவருக்கு வழிகூட்டி அனுப்ப நாம் தயாராக இல்லை. ஆனால், அவர் கண்ணைக் காட்டி ரஜா பெறுவதுதான் வருத்தமாயிருக்கிறது. 'அவருக்கு உண்மையில் கண்ணோய் இருக்கிறதா, அல்லது தேசிய சர்க்காரில் சில மாறுதல் செய்யவேண்டி கன்சர்வேடிவ்கள் இவரை விரட்டுகிறார்களா?' என, எல்லாப் பத்திரிகைகளும் சந்தேகப்படுவதைப் பார்த்து யார்தான் வருந்தாமலிருக்க முடியும்?

உண்மையில் கண்ணோய் இருக்கிறதோ, இல்லையோ. ஏதோ ஒரு நோய் இருப்பது உண்மை. அது கண்ணோயாக இருந்தாலென்ன? மன நோயாக இருந்தாலென்ன? அதை ஏன் இந்த பத்திரிகாசிரியர்களெல்லாம் பிரமாதப் படுத்தவேண்டும்.

"நான் கண்ணையும், காதையும் காட்டி ராஜினாமாச் செய்து விடுவேன். ஆனால் நீங்கள் உண்மைக் காரணங்களைக் கூறித்தான் வெளிவர வேண்டும்" என முன்பு மந்திரியாக இருந்து விலகிய கிளாட்ஸ்டன் பிரபு மற்ற மந்திரிகளிடம் கூறினாராம். இந்த முன்னோர்வழியை ஸ்ரீ மாக்டொனால்டு இப்போது ஒருக்கால் பின்பற்றக்கூடும். யார் ஆத்தாள் செத்தாலும் பொழுது விடிந்தால் தெரிகிறது. இந்தக் கண் காட்டும் வித்தை மூன்று மாதம் கழித்தால் வெளிச்சமாகாதா? அதற்குள்ளவா அவசரம்?

**உங்களுக்கு வேண்டாமா?**

"இதோ, பாருங்கள். எவ்வளவு அழகான பிரதேசம்! காடும் மலையும் நிறைந்து மனதுக்கு ரம்மியமாயிருக்கிறது. இந்த இயற்கைக் காட்சியை வேறு எங்கே காண முடியும்? நீங்கள் செய்த உதவிக்கு உங்களை இந்த பிரதேசத்தில் குடியேற்றி விடுகிறோம். அதன்பிறகு உங்கள்பாடு" என்று தென் ஆப்பிரிக்கா யூனியன் சர்க்கார் இந்தியர்களிடம் கூறுகிறது.





தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் குடியேறுவதற்கு கமிட்டி சிபார் செய்துள்ள காட்டுப்பிரதேசம். கமிட்டியின் கருணையே கருணை!

காடுகளா யிருந்த தென் ஆப்பிரிக்காவை பொன் விளையும் பூமியாக்கியது இந்தியர்களே. அவர்கள் இரத்தம் சிந்த, வியர்வை கொட்ட உழைக்கவில்லையாயின் தென் ஆப்பிரிக்கா இன்றும் சீந்துவா ரற்ற பழைய தென் ஆப்பிரிக்காவாகவே இருக்கும். அது மனித சஞ்சாரத்திற்கு ஒவ்வாத காடாய்க் கிடந்தபோது இந்தியர்களை வெள்ளையர் வருந்தி வருந்தி அழைத்தார்கள். ஆனால், இப்பொழுது அவர்களையெல்லாம் மூட்டை கட்டி கூட்ஸ் வண்டியில் ஏற்றி எங்கேயாவது கொண்டுபோய்த் தள்ளிவிட முயற்சிக்கிறார்கள். அந்த முயற்சிக்கு ஏற்ற யோசனைகளை அறிவிக்கும்படி யூனியன் ஸர்க்கார் ஒரு கமிட்டியை நியமித்தது. அந்தக் கமிட்டியார்க்கோ இந்தியாவின் மீது அபார கருணை ஏற்பட்டுவிட்டது. இந்தியாவின் கஷ்டத்தைப் பார்த்து அவர்களது அந்தக் கரணங்களெல்லாம் அப்படியே உருகிப்போய்விட்டன. அவர்கள் செய்யும் சிபார்சைப் பாருங்கள்.

முதலைக் கண்ணீர்.

"இந்தியாவின் ஜனத் தொகை அதிகரித்து வருகின்றது. அதிகரித்து வரும் ஜனத் தொகையை வெளியில் அனுப்ப இந்தியாவுக்கு இடம் வேண்டும். அதிகரித்து வரும் ஜனத் தொகையையும், பொருளாதார நிலையையும் கவனிக்கையில் மற்ற நாடுகளைப்போல் இந்தியாவிற்கும் குடியேற்ற நாடு வேண்டியது அவசியமேயாகும்.

ஆனால், இக்காலத்தில், கஷ்டமும், சிரமமுமின்றி குடியேறுவதற்கு எந்த மூலையிலும் நாடு கிடையாது. ஆகையால் இந்தியர் குடியேறுவதற்குத் தக்க இடம் பார்ப்பதாயிருந்தால், அபிவிருத்தியடையாத—இக் காலத்திலும் காட்டுமிராண்டி நாடுகளாயிருப்பவைகளையே பார்க்கவேண்டும்.

இதன்படி இந்தியர் இப்போது குடியேறத் தக்க நாடுகளாயிருப்பவை பிரிட்டிஷ் கயானா, பிரிட்டிஷ் கினியா, போர்னியோ இவைகளேயாகும். இவ்விடங்களில் ஜனங்களு மதிகமில்லை. இவை சுகாதாரத்திற்கு ஏற்ற இடமில்லை எனக் கூறப்பட்டாலும் கிராம வாழ்க்கை சுமாராக இருக்கிறது. இந்நாடுகளின் அபிவிருத்தி காடுகளைத் திருத்தி அமைப்பதிலேயே இருக்கிறது. இதற்கு அவ்விடங்களில் பொருளும், ஆட்களுமில்லை. இந்தியர்களுக்கும் வேலைவேண்டுமல்லவா? அவர்களைக் குடியேற்றிவிடலாம். பணம் வேண்டுமானால் நீயும் கொஞ்சம்; நானும் கொஞ்சமாகப் போட்டுக்கொள்ளலாம்" என இந்திய ஸர்க்காரிடம் தெரிவிக்கிறது.

ஐயோ, பாவம்! இந்தியரிடம் இவ்வளவு கருணை எதற்கு! எவருடைய உழைப்பினால் தென் ஆப்பிரிக்கா தங்க பூமியாக்கப்பட்டதோ, அதே இந்தியர்களை வெளிக் கிளப்புவதற்காகத்தானே!



ஐயா, யூனியன் ஸர்க்காரே! நிரம்ப நமஸ்காரம். இந்தியருக்காகத் தாங்கள் உருகவும் வேண்டாம். முதலைக் கண்ணீர் வடிக்கவும் வேண்டாம். இந்தியாவுக்குக் குடியேற்ற நாடு அவசியமென்றால் அதை நாங்கள் தேடிப் பிடித்துக்கொள்ளுகிறோம். பொருளாதார நிலை சீர்கெட்டிருந்தால் நாங்கள் பட்டினி கிடந்து சாகத் தயாராக இருக்கிறோம். எங்கள் இரத்தத்தை எல்லாம் உருஞ்சிக்கொண்டு யாதொரு ஆதரவுமின்றி, சுதந்தரமுமின்றி வாழ வைக்கும் நாடுகள் இனி எங்களுக்கு வேண்டாம். அவசியமானால் சுதந்தரமுள்ள நாடாக நாங்களே தேடிக்கொள்ளுகிறோம். தயவு செய்து நீர் எங்களுக்குக் காட்டையும் கரம்பையும் காட்டாதீர். உமது தேசத்திலுள்ள இந்தியர்களில் அங்கேயே பிறந்து வளர்ந்த 100-க்கு 80 வீதமுள்ளவர்களுக்காவது நியாயப்படி உமது தேசத்தில் வழங்கவேண்டிய உரிமையை நீர் அளித்துவிடும். அதுவே எங்களுக்குப் போதுமானது.

சபாஷ்! பவ நகர்!!

"கடன் பட்டார் நெஞ்சம் போலும் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற கம்பரது வாக்கியம் பழைய காலத்திற்கு ஏற்றதோ, இல்லையோ; இந்தக் காலத்திற்கு—அதிலும் இன்றைய நிலைக்கு மிகப் பொருத்தமான தென்பதில் சந்தேக மில்லை. அரசாங்கமெல்லாம் யுத்தக் கடனைத் தவணைப்படி செலுத்த முடியாமல் திருதிருவென விழிக்கின்றன. விவசாயிகள் விரை முதலுக்கு வாங்கிய கடனையும் திருப்பித்தர முடியாது தயங்குகிறார்கள். வர்த்தகர்கள் ஏட்டைப் பார்த்துப் பார்த்து, கொடுத்த கடன் ஒன்றேனும் வருவதாக இல்லையே என ஏங்குகிறார்கள். உலகமே கடன் தொல்லையால் தத்தளிக்கிறது. ஆனால், பவ நகர் சமஸ்தானப் பிரஜைகளோ எவருக்கும் கடன்காரரா யிராமல் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கி ஆநந்தப்படுகிறார்கள்.

இதைக் கேட்டதும் நீங்கள் நம்பவே மாட்டீர்கள். கடன் இல்லாத ஜீவன் உலகத்தில் இருக்கிறதா என்று ஆச்சரியப்படுவீர்கள். உண்மையில் இன்று பவ நகர் குடியானவர்களுக்கு ஒரு செல்லாக் காசேனும் கடன் கிடையாது. அது அவர்கள் செய்த பூஜாபலன்.

அந்த சமஸ்தான ஏழைக் குடியானவர்களும், 80 லட்ச ரூபாய் முதலாளிகளிடம் கடன்பட்டே இருந்தனர். வருஷந்தோறும் வட்டி மட்டும் 21 லட்சம் ரூபாய் வீதம் வளர்ந்துகொண்டே வந்தது. இதோடு சமஸ்தான வரி 26 லட்ச ரூபாய்...

குடியானவர்கள் என்ன செய்வார்கள்? எப்பொழுது வாரண்ட் வருமோ? எப்பொழுது ஜப்தி வருமோ என ஏங்கிக்கொண்டிருந்தனர். அவர்கள் முதலாளிகளின் அடிமைப் புழுக்களாக இருந்து தவித்துக்கொண்டிருந்தார்கள்.

## இப்படி எங்கேனும் நடக்குமா?

இப்போது சமஸ்தான அரசர் ஒரு இளைஞர். அவரது பிரதிநிதியாக ஸர். பிரபா சங்கர பட்டாணி இருந்து அரசு செலுத்துகிறார். குடிகளின் கஷ்டங்களை அவர் ஏற்படுத்திய ஆராய்ச்சிக் கமிட்டியார் மூலம் அறிந்தார். அவரது உள்ளம் அதைக் கேட்டு உருகிவிட்டது. உடனே இவ்வருடத்து வரி முழுதையும் தள்ளிவிட்டார். முதலாளிகளிடம் குடியானவர்களின் சார்பில் பேரம் பேசி கஜானாவிலிருந்து 21 லட்ச ரூபாய் கைமேல் கொடுத்து தம்படியும் கடன் இல்லாமல் குடியானவர்களை மீட்டுவிட்டார். குடியானவர்களின் ஆநந்தத்தைச் சொல்லவேண்டுமா? பிரிட்டிஷ் அரசாங்கமோ, மற்ற சமஸ்தானங்களோ இப்படிச் செய்யுமா? வாழ்க பவ நகரம்! வாழ்க பிரபா சங்கர்!!

## யார் கேட்டார்கள்?

எல்லாப் பழங்களிலும் கொட்டைகள் உள்ளே இருக்கின்றன. ஆனால் முந்திரிக் கொட்டையோ பழத்திற்கு மேலே வந்து இளித்துக்கொண்டு நிற்கிறது. மனிதர்களிலும் அநேகர் இந்த முந்திரிக் கொட்டையைப்போல் எல்லா விஷயங்களிலும் முன் வந்துவிடுகிறார்கள்.

ஜெர்மன் மன்னராயிருந்து நாடு கடத்தப்பட்ட மாஜி கெய்ஸர், வேண்டா உபதேசம் செய்யப் புறப்பட்டிருக்கிறார். 'இந்தியாவில் அமைதி நிலவி வரும்படி செய்யும் சாமர்த்தியம் பிரிட்டிஷாருக்கு இருக்கிறது. பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுப் போய்விடும் பட்சத்தில், முஸ்லிம்களுக்கும், இந்துக்களுக்கும் பெரும் பிளவு ஏற்பட்டுத்தான் தீரும். முஸ்லிம்கள் பலம் பொருந்திய சமூகத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பதுடன் மிகவும் ஒற்றுமையுடனும் இருந்து வருகிறார்கள். தற்போதுள்ள நிலையில் இந்துக்கள் கீழான நிலையில்தான் இருக்கும்படி நேரும். இந்தியாவுக்குத் தன்னைத் தானே ஆட்சி செய்துகொள்ள சாமர்த்தியமில்லை" என்று கூறினாராம்.

ஐயா! கெய்ஸரே! எங்கள் சாமர்த்தியம் எப்படிப்பட்டதென்பதை நாங்கள் அறிவோம். உமது சாமர்த்தியத்தை நீர் அறிந்து நடந்திருந்தால் இவ்வாறு நாடு கடத்தப்பட்டிருக்க மாட்டீரே. உமது சாமர்த்தியத்தை அளந்து கொள்ளக் கருவி பெறாத நீர், மற்றவர்களின் சாமர்த்தியத்தை எப்படி அளந்து



விட்டீர். வெகு நாளாய் உலக விவகாரங்களிலிருந்து விலகி இருப்பதனால் வாய் ஊறல் தாங்க முடியவில்லையோ?

## கருப்பும் சேகப்பும்.

ஜெர்மனியில் நாஜியர் ஆட்சி நடைபெறுகிறது. இதாலி சர்வாதிகாரி முசோலினியின் பாஸிஸ்ட் கட்சியைப் பின்பற்றியே நாஜியர் இயக்கம் ஜெர்மனியில் முளைத்தது. ஆனால், இருகட்சித் தலைவர்களின் குணங்களும் கருப்பும் செகப்புமாயிருப்பது விந்தையாகவே இருக்கிறது. முஸோலினியின் உள்ளத்தில் அன்பு தாண்டவமாடுகிறது ஹிட்லர் உள்ளத்தில் கடுமையான எண்ணமே வேர் வீழ்த்தி இருக்கிறது. முசோலினி இத்தாலியை அன்பினால் ஆள்கிறார். ஹிட்லர் ஜெர்மனியை துப்பாக்கி முனையில் ஆட்சி செய்கிறார். இதற்கு உதாரணங்கள் சமீபத்திலேயே நடந்திருக்கின்றன.

ஜூன் மாதம் 30-ந் தேதி ஜெர்மனியில் எமதர்மனது தர்பார் நடைபெற்றது. அங்கு மாஜி பிரதம மந்திரி ஷிலீச்சர், அவரது மனைவியார் உள்பட அநேகர் ஹிட்லர் உத்தரவின்படி சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஹிட்லருக்கு விரோதமாக ஏதோ சதி செய்தார்கள் என்பதே இவ்வாறு சுடப்பட்டதற்குக் காரணமாகும். உதவி பிரதம மந்திரியாக இருந்த வான் பேபன் கைது செய்யப்பட்டார். ஒரே மனிதன் மாலை 4 மணிக்கு மந்திரிப் பதவியும், 5 மணிக்கு சிறைவாசமும், 6 மணிக்கு விசாரணை முடிவும், 7 மணிக்கு துப்பாக்கிக்கு இரையும் ஆக நேர்வது ஜெர்மனியைத் தவிர வேறு எங்கும் பார்க்க முடியாது. ஜெர்மனியில் அவ்வளவு கடுமையான நாஜியர் ஆட்சி நடக்கிறது. ஆனால், இந்த நாஜியர் கட்சி தோன்றுவதற்குக் காரணமாயிருந்த பாஸிஸ்ட் கட்சியோ இத்தாலியை அன்பினால் ஆட்சி செய்கிறது. அதன் தலைவர் முஸோலினி தன்னை ஒரு சர்வாதிகாரியாக நினைக்கவே இல்லை. தானும் குடிகளில் ஒருவன் என்றே எண்ணி நடக்கிறார். குடியானவர்களோடு சேர்ந்து வெய்யிலில் உழைக்கிறார்.

ஸாபிடியாவில் புதிய வெள்ளாமைப் பிரதேசத்தில் முதன் முதலாக விளைந்த கோதுமைப் பயிர்களை சமீபத்தில் ஸ்ரீ முஸோலினியே களத்தில் அடித்துக் கோதுமையைப் பிரித்தார். 94 டிக்ரி வெய்யிலில் வேலை செய்து, மற்றவர்களைப்போல் தானும் 26 பென்ஸ் கூலியும் பெற்றார். பின்பு குடியானவர்களோடு ஆடம்பரமற்ற உணவை அருந்தினார்.

இரண்டு சர்வாதிகாரிகளுக்கும் கறுப்புக்கும், செகப்புக்கும் உள்ள ஒற்றுமை இருக்கிறதல்லவா?

# செங்குந்தர் கல்விநிதி

## உபகாரச் சம்பளம்

சென்ற வருஷம் போலவே இவ்வருஷமும் உயர்தரக் கல்வியை நாடும் சில ஏழைச் செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளமளிக்க நமது கல்விநிதி தீர்மானித்திருக்கிறது. உபகாரச் சம்பளத்தை நாடும் ஏழைச் செங்குந்த மாணுக்கர்களின் பெற்றோராவது பாதுகாப்பாளராவது அடியில் கையொப்ப மிட்டிருப்பவருக்கு ஜூலை 31-ந் தேதிக்குள் மனு எழுதி யனுப்பவேண்டும். ஆகஸ்டு மாதத்திய செங்குந்த மித்திரனில் கல்விநிதிக் காப்பாளர் சபையின் தீர்மானம் வெளியிடப்படும்.

மனுவில் குறிப்பிட வேண்டியவை:—

1. பிள்ளையின் பெயர்
2 பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் பெயரும் விலாசமும்
3. பிள்ளை பிறந்த இடமும் தேதியும்
4. பிள்ளை படிக்கும் வகுப்பும் கலாசாலையும்
5. சென்ற பரீக்ஷையில் பெற்ற மார்க்குகள்
6. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் தொழில், வருமானம், சொத்து முதலியன
7. மனுதாரர் குடும்பத்து நபர்களின் தொகையும் அவர்களின் ஜீவனோபாயங்களும்
8. அவர் குடும்பத்தில் படிக்கும் இதர பிள்ளைகளின் தொகையும் வகுப்பும்
9. நாடும் ஒத்தாசையின் தன்மையும் அளவும்
10. ஏற்கெனவே வேறு ஒத்தாசை பெற்றிருந்தால் அதன் தன்மையும் அளவும்
11. உதவிக்குப் பாத்திரர் என்பதை நிரூபிக்கக்கூடிய இதர விவரங்கள்
12. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் கையொப்பம்.
13. பள்ளிக்கூடத்துத் தலைவரின் சிபார்சுக் குறிப்பும் கையொப்பமும்

மனு செய்துகொள்வோர் கவனிக்கவேண்டிய முக்கியமான நிபந்தனைகள்

1. (a) மேற்குறிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் உண்மையென்பதற்கு அத்தாட்சியாக மாணவர் படிக்கும் கலாசாலை அதிகாரியின் கைச்சாத்திட்ட சிபார்சுக் குறிப்பு ஒன்று ஒவ்வொரு மனுவுடனும் வாங்கி யனுப்புதல் வேண்டும்.

(b) உண்மைச் செங்குந்தர் சங்கங்கள் உள்ள இடங்களிலிருந்து மனு அனுப்புவோர் தம் மனுவோடு அவ்வச் சங்கத்தின் தலைவர் சிபார்சையும் காரியதரிசி சிபார்சையும் தனித்தனியே வாங்கி யனுப்புதல் வேண்டும்.

2. இதுவன்றி, ஒவ்வொரு பிள்ளைக்கும் மனுவோடு இரண்டு பிரபலமான கனவான்களுடைய சிபார்சுக் கடிதங்கள் வாங்கி அனுப்புதல் வேண்டும். சங்கமில்லாத இடங்களிலிருந்து மனு அனுப்புவோர்கட்குச் சிபார்சு செய்பவரில் ஒருவர் உண்மைச் செங்



குந்தராகவும், மற்றொருவர் வேறு சாதியினராகவும் இருத்தல் வேண்டும்.

3. உபகாரச் சம்பளத்தை நாடும் மாணுக்கர்கள் சம்பளம் பெற்று இடையில் அசிரத்தையினாலோ தப்பு நடத்தையினாலோ படிப்பை நிறுத்திவிட நேரிடில், அவர்கள் அதுவரை பெற்ற சம்பளத்தைக் கல்வி நிதிக்குத் தாம் ஈடுகட்டித் தருவதாகச் சிபார்சு செய்யும் கனவான்களில் ஒருவரிடமிருந்து ஜாமீன் கடிதம் ஒன்று வாங்கி மனுவுடன் அனுப்புவதோடு, மனு செய்துகொள்ளும் பெற்றோராவது பாதுகாப்பாளராவது தாமும் அவ்விதம் ஈடுகட்டித் தருவதாக ஒப்புக்கொள்ளல் வேண்டும். கையொப்ப மிடுவோர் மாணவர் நின்ற மூன்று மாதங்கட்குள் வாங்கிய பணத்தைக் கல்விநிதிக்கு ஈடுகட்டித் தரத் தவறினால் அத்தொகை ஜாமீன் கொடுத்தவரிடமிருந்து வசூலிக்கப்பெறும்.

4. உபகாரச் சம்பளம் பெறும் மாணுக்கர்கள் தமது கலாசாலை அதிகாரிகளால் எப்போதாவது துர்நடத்தைக்காகத் தண்டிக்கப்படுவரேல் அன்னவர்களுக்கு உபகாரச் சம்பளம் அதுமுதல் நிறுத்தப்படும். அதுவரை கொடுத்துள்ள பணமும் மேற்கூறிய முறையில் வசூலிக்கப்பெறும்.

5. உபகாரச சம்பளம் பெறும் மாணுக்கர்கள் நமது தலைச்சங்கத்தையாவது கிளைச்சங்கங்களையாவது, அவற்றின் நோக்கங்களையும் தொண்டுகளையுமாவது, பொதுவில் உண்மைச் செங்குந்தர் இயக்கத்தினையாவது தாக்கி அவற்றிற்குப் பாதகமாக நடந்துகொண்டாலும் அவர்களுக்கு அது முதல் உபகாரச் சம்பளம் நிறுத்தப்படும்.

6. கல்வி நிதியிலிருந்து உபகாரச் சம்பளம் பெறும் ஒவ்வொரு மாணுக்கரும் தான் பெறும் உதவிக்குப் பிரதி யுபகாரமாகக் கீழ்க்கண்ட விதங்களில் தம் குலாபிமானத்தை விளக்குவதாக ஒரு தனிக் கடிதத்தில் எழுதித் தரவேண்டும்:—

(a) தலைச்சங்கத்தின் நோக்கங்களையும் செயல்களையும் பாமர ஜனங்களுக்கு அறிவித்து அவர்கள் குல முன்னேற்ற விஷயத்தில் ஈடுபடுமாறு பிரசாரஞ் செய்து, தமது கல்வி தம் ஆயுள் பரியந்தம் பொது நலத்துக்கு உபயோகமாகும்படிச் செய்ய வாக்குறுதி தரவேண்டும்.

(b) தாம் வாழ்க்கையில் ஈடுபட்டுச் சம்பாத்தியம் செய்யும் சமயத்தில் தாம் கல்வி கற்ற சமயம் கல்வி நிதியிலிருந்து பெற்ற உதவிக்கு நன்றியறிதலாகச் செங்குந்தர் கல்விநிதிக்குத் தமது வருமானத்தில் குறைந்தது ரூபாய்க்குக் காலணாவாவது இடைவிடாது நன்கொடையாக வழங்கிவர வாக்குறுதி செய்யவேண்டும்;

(c) நமது 'மித்திரன்' ஓங்குமாறு ஒத்தாசை புரிய வேண்டும்.

7. மனுவில் மேற்குறித்த விவரம் எதுவேனும் விடுபட்டிருந்தாலும் உண்மைக்கு மாறாக இருந்தாலும் அம்மனு தள்ளிவிடப்படும்

உதவி பெறுவோர் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்:—

I. உபகாரம் பெறும் ஒவ்வொரு மாணவர்க்கும் அனுமதிக்கப் பெற்றுள்ள தொகை செட்டம்பர் முடிவில் ஒன்றும், பிப்ரவரி

முடிவில் ஒன்றுமாக இரண்டு தவணைகளில் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்பெறும்.

II. முதல் தவணைக்கு, மாணவர் அனுப்பும் மனுக்கள் பேரில் தேர்ந்தெடுத்தவர்களுக் கெல்லாம் பணம் அனுப்பப்படும். இரண்டாவது தவணைக்கு இரண்டு வாரம் முன்னதாகவே ஒவ்வொரு மாணவரும் தமது கலாசாலை அல்லது கல்லூரித் தலைவரிடமிருந்து தமது மார்க்குகளையும், தமது நடத்தையையும், தாம் படிப்பில் அடைந்துள்ள விருத்தியையும் குறித்து ஒரு நற்சாட்சிப்பத்திரம் வாங்கி அனுப்பவேண்டும். இந்த நற்சாட்சிப் பத்திரமின்றிப் பண மனுப்பப்படமாட்டாது.

III. புத்தகச் செலவுக்கு உபகாரம் பெறுவோர் தாம் வாங்கிய புத்தகங்களின் பில்களைத் தமது கலாசாலைத் தலைவர்களது அங்கீகாரக் கையெழுத்தோடு அனுப்பிய பிறகே பணங் கொடுக்கப் பெறுவர்.


☞ முக்கிய கவனிப்பு: மேற்காணும் விஷயங்க ளெல்லாம் வேண்டியபடி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள மனுக்களே அங்கீகரிக்கப்படும்.

151, பவழக்காரத் தெரு, சென்னை. 1934ௌ ஜுலை 15உ } S. T. நடேச முதலியார், அமைச்சர்.

---

## மதிப்புரை

சென்னை, கனகேசம் கம்பெனியார் தயாரித்துள்ள கனகேசம் பாம், வென்லோட், வைடாலிங் கஸ்தூரி மாத்திரை ஆகிய அரிய மருந்துகளில் சில நமக்கு அனுப்பப் பெற்றுள்ளன. அவை மிகச் சிறந்தவையென நாம் அனுபவத்தில் கண்டு மகிழ்கின்றோம். கனகேசம்பாம் எல்லாவித தலைநோய்களையும் இரண்டொரு வேளை உபயோகத்தினாலேயே குணப்படுத்தி விடுவது பிரத்தியட்சம். வென்லோட் ஒரு அபூர்வ தைலம் என்பதில் சந்தேகமே இல்லை. தலையில் தேய்த்ததும் கண்கள் ஜில்லெனக் குளிர்ச்சி யுறுவதைப் பார்த்தால் அதனைத் தொடர்ந்து சில நாட்களுக்கு உபயோகிப்போர்க்கு எத்தகைய வெட்டை நோயையும் தணித்து, சரீரத்திற்குநல்ல ஆரோக்கியத்தை வழங்குமென்பது நிச்சயமென நம்புகிறோம். வைடாலின் மலச் சிக்கலை நீக்குவதில் சிறந்து விளங்குவதாலும் நோய்களெல்லாம் அநேகமாய் மலச் சிக்கலினாலேயே ஏற்படுவதாலும் அது எல்லா நோய்களையும் கண்டித்து தாது விருத்தியை வழங்கக் கூடுமென்றே பூரணமாய் எண்ணுகிறோம். கஸ்தூரி மாத்திரையின் குணத்தைப் பொதுவாக வாசகர்கள் அறிவார்களாயினும், இந்த கஸ்தூரி மாத்திரைகள் மற்ற கஸ்தூரி மாத்திரைகளைக் காட்டிலும் சிறந்தவையாக உள்ளவை என்பதையும், குழந்தைகளின் பலவித நோயையும் நிவர்த்திப்பதில் சிறந்து விளங்குகிறதென்பதையும், ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியதென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வேண்டுவோர் கனகேசம் அண்டு கோ, சென்னை என்ற விலாசத்திற்கு எழுதித் தருவித்துக் கொள்ளலாம்.




## பரசுராம முதலியார் அல்லது பகல்வேஷ பகதூர்

(வா. போன்னம்பலம்)

பரசுராம முதலியாரை அவர் காலத்தில் அறியாதார் ஒருவருமில்லை. அவர் எல்லாவிடங்களிலும் எல்லாரையும் போலிருப்பார். இது விளங்காவிட்டால் விளக்கமாகக் கூறுகிறேன். கலெக்டர் கச்சேரியில் கலெக்டரைப்போலவே இருந்து அதிகாரஞ் செலுத்துவார். போலீஸ் ஸ்டேஷனில் டிஸ்ட்ரிக்ட் சூபரிண்டெண்டென்டைப்போலிருந்து மிரட்டுவார். கவர்னர் மாளிகையில் வெங்கடகிரி மகாராஜாவைப் போலவோ, திவான் பகதூர். சர். தேப்பெருமாள் பிள்ளையைப் போலவோ இருந்து கவர்னர் துரையோடு கைகுலுக்கிப் பல ராஜரீக விஷயங்களைப்பற்றிப் பேசுவார்.

ஆனல் எப்படிப்பட்டவரா யிருந்தாலும் அவரை அப்போது பரசுராம முதலியார் என்று மாத்திரம் கண்டுபிடிக்க முடியாது. கலெக்டர் வேஷம்போட்டால் கலெக்டர் துரைதான். இங்கிலீஷ் உச்சரிப்பு, நடை, உடை, முடிக்கு முதலிய எல்லாம் அசல் இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த மிஸ்டர் சி. ஆர். ராபர்ட்சன் (ஐ. சி. எஸ்) துரையவர்கள் தான். இப்படி எல்லாம் பல பெரிய மனிதர்களை ஏமாற்றி சந்தோஷப் படுவது அவருக்கு வேடிக்கையான பழக்கம். இத்தகைய அரிய சாமர்த்தியம் அவருக் கமைந்திருந்தும் திருட்டு, புரட்டு, மோசம் முதலிய தீமைகள் அறவே இல்லாது பரிசுத்தமான பெரிய மனிதராகவே இருந்து வந்தார்.

கவர்னரும் ஏனையோரும் முதலியாரையும், அவர் மாறு வேஷம் தறிக்கும் பழக்கத்தையும் பற்றி நன்கறிவார்கள். என்றாலும், அவர் வேஷந் தறித்திருக்கும் காலத்தில் அவரைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று வெகு ஜாக்கிரதையா யிருந்தவர்களெல்லாம் ஒவ்வொரு தடவையும் ஏமாற்றமடைந்து கொண்டே வந்தார்கள். சில நெருங்கிய நண்பர்கள் " அவர் தான் ஏமாந்து போனார்; நானா யிருந்தால் கண்டு பிடித்துவிட் டிருப்பேன் " என்று சொல்லிக்கொள்வது மாத்திரம் உண்டு. இப்படிச்சொல்லியவர்களுள் சென்னை கவர்னரும் ஒருவர்,

ஒருநாள் கவர்னர் துரைக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் 'நான் தங்கள் மாளிகைக்கு 3-ந்தேதி பகல் வருவதா யிருக்கிறேன். உஷாரா யிருந்து கொள்ளுங்கள்' என்று எழுதி அதனடியில் 'பரசுராம முதலியார்' என்ற கையெழுத்தும் இருந்தது. கவர்னர் குறித்த தேதியில் வெகு ஜாக்கிரதையா யிருந்தார். அன்று கவர்னர் மாளிகையில் ஒரு விசேஷ சம்பவம் நடந்தது. ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி ஆலோசிக்க கவர்னர் ஒருவருக்கு பேட்டி யளிக்க சம்மதித் திருந்தார். அதன்படி அந்த கனவான் அன்று காலை குறித்த நேரத்திற்குச் சிறிது முன்பே கவர்னரைப் பேட்டி கண்டு விஷயத்தைத் தீர்க்கமாய் ஆலோசித்துச்சென்ற பின் அதே மனிதர் மீண்டும் வந்ததும், தான் சற்று நேரத்திற்கு முன் வரவில்லை யெனக்கூறியதும் கவர்னருக்கும் அங்குள்ள காவலருக்கும் பேராச்சரியமாய் விட்டது. எல்லாம் ஒரே குழப்பமாய் இருந்தபோது பரசுராம முதலியார் ஒரு ஆள் மூலமாக ஒரு கடிதம் எழுதி அனுப்பி யிருந்தார். "தாங்கள் ஏமாந்து விட்டீர்கள். நான் தங்களுடன் நெடுநேரம் பேசிவிட்டு வந்திருக்கிறேன். அடையாளம் வேண்டுமாயின் தங்கள் பவுண்டன் பேனாவின் கிளிப் பேனாவில் இருக்கிறதா என்று பாருங்கள். இல்லையானால் தபால் பார்சலை எதிர்பாருங்கள்" என்று எழுதி யிருந்தது. கீழே கையெழுத்தைப் பார்த்தார். பரசுராம முதலியாரின் கையொப்பம் இருந்ததைப் பார்த்து, வந்த கனவானும் கவர்னரும் மற்றவர்களும் திகைத்துப்போனார்கள். ஒரு முறையல்ல. இதுபோன்று பல முறைகளில் கவர்னர் ஏமாந்து போனார். இவரது வேஷத்தை எவரும் கண்டுபிடிக்க முடியாது என்ற முடிவுக்கு வந்த கவர்னர் "பரசுராம முதலியார் இனி எந்த வேஷத்தோடு எங்கு என்ன செய்தாலும் குற்றமாகப் பாவிக்கப்படக்கூடாது. அவை எல்லாம் வேடிக்கையின் பொருட்டே யாகும்" என்று ஒரு உத்தரவு போட்டு விட்டார்.

ஒரு நாள் சைதாப்பேட்டை கலெக்டர் தாம் வழக்கமாய் வரும் நேரத்திற்குச் சிறிது முன்பே வந்து 'சிரஸ்ததார்' முதலியவர்களுக்குச் சில உத்தரவுகள் போட்டதோடு தஸ்தாவேஜுகளைக் கவனித்துக் கையெழுத்தும் வைத்துவிட்டு அவசர வேலையாக வெளியில் போய் வருவதாகக் கூறிவிட்டுச் சென்றார். சென்றவர் சில நிமிஷங்களில் மீண்டும் திரும்பி வந்ததைப் பார்த்து அனைவரும் திடுக்கிட்டுப் போய்விட்டனர். தஸ்தாவேஜுகளைப் பார்த்த கலெக்டர், அவற்றில் அதே தேதியில் தமது கையெழுத் திடப்பட் டிருப்பதைப் பார்த்துத் திகைத்து விட்டார். பின்பு விசாரித்துப் பார்த்ததில் முன்பு வந்தவர் பரசுராம முதலியாராக இருக்கலாமென முடிவுசெய்து கொண்டார்கள்.

பரசுராம முதலியாரின் நண்பர்களில் அஷ்டாவதானம் சபாபதி முதலியாரும் ஒருவர். இவர் ஒருநாள் ஒருவீதியில் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். ஏராளமான கூட்டம் இருந்தது. இரவு சுமார் 11-மணிக்கு போலீஸ் கமிஷனர் குதிரைமீது வந்து 'ஏ! தம்ளக்கை திங்கோ, ஒங்களுக்கு புத்தி இல்லே? ஊரெல்லாம் கால்ரா, நீங்க இங்கே கும்பகூடி தூக்கங் கெட்றிங்கோ. எல்லாம் போய்த் தூங்குங்கோ' என்று உத்தரவு போட்டு விட்டு 'இவன்மாத்திரம் என்னோடு



போலீஸ் ஸ்டேஷனுக்கு வரட்டும்' என்று அஷ்டாவதான முதலியாரை அழைத்துச் சென்றார். இருட்டில் கொஞ்சதூரம் சென்ற பிறகு கமிஷனர் துரை குதிரையினின்றும் கீழிறங்கி 'அஷ்டாவதானம் சபாபதி முதலியாரே! பார்த்தீர்களா பரசுராமன் வேலையை' என்று சொல்லி குலுங்கக் குலுங்க நகைத்தார். சபாபதி முதலியார் திடுக்கிட்டு 'அடப்பாவி! நீயா இந்த கோலஞ்செய்தாய்' எனச்சொல்லி தானும் சேர்ந்து சிரிக்கலானார்.

இவ்வாறு இவர் பெயர் எங்கும் அடிபட்டுக்கொண் டிருக்கையில் ஒருநாள் அவர் மனைவியார் அமிர்தம்மாள் 'ஊரில் எல்லோரையும் ஏமாற்றுகிறீர்களே என்னை ஏமாற்ற முடியுமா' என்று வேடிக்கையாகக் கேட்டார்கள். முதலியார் பதிலுரைக்காது தலையசைத்துக் கொண்டிருந்தார். பின் சில நாட்கள் கழித்துத் தஞ்சாவூருக்குப் போவதாய்ச் சொல்லிவிட்டு புறப்பட்டுச் சென்றார். மறுநாள் காலை அமிர்தம்மாள் வழக்கப்படி தெருவைக் கூட்டிக் கொண்டிருக்கையில் ஒரு மகமதியன் அங்குவந்து அம்மையாரைப் பார்த்து 'அடியே, பரசுராமன் வீட்டி லிருக்கிறானடி' என்று அதட்டிக் கேட்டான். பெரிய மனிதர்களால் நன்கு மதிக்கப்பெற்ற தம் வீட்டுக்காரரை அலக்ஷியமாய்ப் பேசுவதன்றிப் பெண்ணாகிய தன்னையும் அவமதித்துப் பேசுவதைக் கண்டு அமிர்தம்மாள் ஒன்றுந் தோன்றாதவராய்த் திகைத்து நின்றார்கள். வந்த முரடன் மறுபடியும் அதட்டி 'என்னடி கைதே! கேட்கிறேன், குட்டிச்செவர் போல் நிற்கிறே' என்றான். அமிர்தம்மாள் இதைப்பொறுக்க முடியாது மனதைத் திடப்படுத்திக்கொண்டு 'இது என்ன அநியாயம். இப்படியும் மரியாதையின்றிப் பேசலாமா' என்றார்கள். வந்தவன் கொஞ்சங் கொஞ்சமாகப் பேச்சை வளர்த்திக் கடைசியாய்க் கோபத்தோடு கை நீட்டி அடிக்கவும் வந்தான். அம்மையார் பயந்து உரத்திக் கூச்சலிட்டார்கள். கூட்டம் சேர்ந்து விட்டது. மகம்மதியன் கொஞ்சமும் பயப்படாதவனாய்ப் பேச்சை அதிகமாகவே விட்டுக் கொண்டிருந்தான். கூட்டம் பெருகிற்று. அப்போது மகம்மதியன் தன் பொய்த்தாடியையும், தலைப்பாகையையும் சடக்கென்றெடுத்து விட்டு குலுங்கக் குலுங்க நகைத்தான். இப்போது சாயபு யாரென்று எண்ணுகிறீர்கள். பரசுராம முதலியாரைத் தவிர வேறு யார்? அமிர்தம்மாள் வெட்கித் தலைகுனிந்து சடேரென்று வீட்டிற்குள் நுழைந்து மறைந்தார்கள்.

பரசுராம முதலியாரிடம் ஏமாறாத ஆட்களே சென்னையில் இல்லை. இன்னும் அவரைப்பற்றி எழுதிக்கொண்டேபோக என் பேனாவும் அஞ்சுகின்றது. இத்துடன் எனது பேனாவுக்கு விடை கொடுத்தனுப்புங்கள்.

---

சுருக்கமா யில்லாத கிளைச்சங்க அறிக்கைகள் இனி கண்டிப்பாய் பிரசுரிக்கப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப-ர்)

# "இன்று போய் நாளை வா"

(S. இராமலிங்கம், நெல்லை)

" பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றத னெஃகு "

என்றார் தமிழ்த் தெய்வமாம் திருவள்ளுவர். 'இரக்கமின்றிப் பகைவரைப் போரில் இறந்துபடச் செய்யும் வன்மையைப் பெரிய ஆண்தன்மை யென்பர்; அப்பகைவருக்குத் தாழ்வு வரின் உடன் உதவி புரிதல் அதற்குக் கூர்மையாகும் என்பர்' என்பது இப்பொய்யா மொழியின் பொருளாகும். அமரில் சிறிதும் அச்சமின்றிப் பகைவரைக் கொன்று வீழ்த்தல் வீரர்க்குத் தகுதியே யாயினும் அப்பகைவர் ஏதாவது ஓர் இடையூறு எய்தித் தளர்ந்து விடுவராயின், ஆண்மையுடைய அவ்வீரர் அருளுடையவராய் அவருக்கு வேண்டும் உதவிகளைச் செய்யவேண்டும் என்பதே மேற்கண்ட குறளின் சிறந்த நோக்கம். இப்பொய்யா மொழியின் பொருளுரைக் கிலக்காக, பண்டை நாள் சிறந்த போர்வீரர்கள் பலர் இருந்து வந்தார்கள். கன்னன் போரில் தளர்ந்த நிலைகண்டு, காண்டீபன் கண்ணோட்டஞ் செய்து " நீயின்றுபோ யினி நாளைவா " என்று கூறுவானாயினன். அதுபோன்று இராமர் இராவணனிடத்திற் காட்டிய இரக்கத்தைச் சிறிது இங்கு கூறுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

இராமரது படைக்கும், இராவணனது பெரும்படைக்கும் இலங்கையில் போர் நிகழ்கின்றது. இணையில் வீரனும் இலங்கை வேந்தன் தனது நால்வகைச் சேனைகளோடு கடல்போல் வளைந்து சுக்கிரீவன், அங்கதன், அனுமன் முதலிய அளவிடற்கரிய ஆற்றல் வாய்ந்த வீரர்களோடு அடலமர் செய்து, இறுதியில் இராமரை யணுகிவந்து அவரோடு அமராட ஆரம்பிக்கிறான். இவனது நால்வகைச் சேனைகளையும் இராமர் தனது வில் வலியால் ஒன்றன் பின் ஒன்றாக விண்ணுல கேற்றினார். இங்கு இராக்கத வீரரனைவரும் தேர் இழந்து, வெஞ்சிலைகளுமிழந்து, வன் கவசமுமிழந்து, இறுதியில் தம் தம் தலைகளையும் இழந்து தத்தளித்தார்கள். இந்நிலை யறிந்த இராவணன் கடுஞ்சினங் கொண்டவனாய் வில் வளைத்துப் பகழிதொடுத்து கோதண்ட வீரனோடு கொடுஞ் சமர் செய்தான். விடுத்த வெஞ்சிலைகள் எல்லாவற்றையும் விலக்கி அவன் வெய்துயிர்த்து விழிக்க இராகவர் தனது வில் வலி காட்டி நின்றார். அவ்வமயம் அமர்க்களத்தில் ஆர்ப்பாட்டஞ் செய்யும் அரக்கர்களது வாய்களும், அழற்கொழுந் தொழுகப் பார்க்கும் அவர்களது கண்களும், கூரிய ஆயுதங்களையும் கூசாது மாரிபோல் வாரி வீசுங் கைகளும் அடங்கி விட்டன. முரசு முழக்கம் போயின.

இங்ஙனம் உரனெலாம் போயும் இலங்கேசன் ஊக்கங் குறையாமல் நின்று அமராடினான். ஆனால் இராமரோ அவன் ஏறிவந்த தேரை யுடைத்தார்; எடுத்துநின்ற வில்லையுந் துணித்தார்; அடுத்து



நின்ற அனைத்தையும் அழித்தார். அதனால் அவன் வெட்கித் தலை குனிந்தான்; உடல் தளர்ந்து ஒன்றுஞ் செய்யாது நின்றான். அன்று அவன் நின்ற நிலையைக் கவியரசராய கம்பர்,

" அறங்க டந்தவர் செயலிதென் றுலகெலா மார்ப்ப
நிறங்க ரிந்திட நிலம்விரல் கிளைத்திட நின்றான்
இறங்கு கண்ணினன் எல்லழி முகத்தினன் தலையன்
வெறுங்கை நாற்றினன் விழுதுடை ஆலன்ன மெய்யன். "

என்று அழகுறக் கூறியுள்ளார். அறங்கடந்தவர் அடையுங் கதியிது தான் என்று அனைவருங் கண்டு ஆரவாரிக்கும்படியாக நிறங் கரிந்திட, நிலம் விரல் கிளைத்திட, இறங்கு கண்ணினனாகவும், எல்லழி முகத்தினனாகவும் கைகளைத் தொங்கவிட்டுக் கொண்டு விழுதுகள் தொங்கும் ஆலமரம்போல் அன்று அவன் நின்றனனாம். மெலிவுற்ற மேனியோடும், பொலிவற்ற முகத்தோடும், பரந்துவிரிந்த பத்துத் தலைகளுக்குக் கீழ் வெறுங்கைகள் இருபதையும் தொங்கவிட்டுக் கொண்டு அன்று அவன் நின்ற நிலை, விழுதுகள் தொங்கும் ஆலமரம்போல்வதாகும் என்று கூறுகின்ற கம்பரின் உவமைத் திறங் கற்போர் மனதைக் கவர்வதாகும்.

இவ்வாறு விழுதுடை ஆலன்ன நிற்கும் இராவணனது நிலை நோக்கிய இராமர் அவனைக் கொல்லக் கருதினாரல்லர். வெட்கித் தலை குனிந்த அவ்வீரனை " வீராவரும் புவிக்கெல்லாம் வேதமே யன்ன " இராகவர் வெட்டி வீழ்த்த நினைத்தா ரல்லர். தண்ணளி மிகுந்த தாசரதி தனிமை கண்டிரங்கினார். உடன் போரை நிறுத்தி, இராவணனை நோக்கி " நிராயுதனான நின்மேல் கணைதொடுத்து நின்னைக்கொன்று வீழ்த்த நான் நினைக்கவில்லை. நினைப்பது நியாயமுமில்லை. அறத்தினாலன்றி மறத்தினால் அமரருக்கும் அருஞ்சமர் கடத்தல் அரிது என்பதை அறிந்துகொள். இனியாவது நன்மார்க்க நெறியினை நீ நலமுறப் புரிவாயாகவும். அல்லது இனிமேலும் அமராட விரும்புவாயேல், ஆயுதம் ஒன்றுமின்றித் தன்னந் தனியனாய்த் தயங்கிநிற்கும் " நீ இன்று போய் போர்க்கு நாளை வரலாம் " என்று இன்னனைய அன்பளாவிய இன்மொழி பலகூறி உபசரித்து அனுப்பினார். இதனைக் கவி,

" அறத்தி னாலன்றி அமரர்க்கும் அருஞ்சமர் கடத்தல்
மறத்தி னால்அரிது என்பது மனத்திடை வலித்தி
பறத்தி நின்னெடும் பதிபுகக் கிளையொடும் பாவி
இறத்தி யானது நினைக்கிலென் தனிமைகண் டிரங்கி.

ஆளை யாஉனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாஎன நல்கினான் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல். "

என்ற இருகவிகளால் அழகுற அமைக்கின்றார்.

அருமைக் காதலியை - ஆவியனைய தேவியை - கற்பினுக் கணியினைக் கவர்ந்து சென்று சிறை வைத்திருக்கும் இராவணனை இறந்துபடும்படி செய்யாது தனிமை கண்டிரங்கிய இராமரது மனப்பான்மை பொன்னேபோல் போற்றத் தக்கது. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்து யெண்ணி யுரைக்கும் புண்ணியத் தூதர் சிலர் நீதிமொழி பலகூறியுங் கேளாது "ஆவியை விடினும் தேவியை விடேன்" என்று கூறி, நெடுஞ்சமர் விளைத்த தன் பகைவனை, நிலைதிரிந்த வுடனேயே கொலைபுரிந்து விடாமல், போரை நிறுத்திப் பொருள்கொண்டு உறுதி பலகூறி உபசரித்ததோ டமையாது "பெருங் காற்றிற் பட்ட சிறு பஞ்சுபோல் மென்மையாகிய நீ, யின்றுபோய் உன் உடம்பைத் தேற்றிக் கொண்டும், ஆயுதங்கள் சேகரித்துக்கொண்டும் உறுதியோடு நாளை வருவாயாக" என்றும் கூறிய இராகவரது தன்மையின் மேன்மை இணையற்றதே யாகும்.

---


## தெய்வீக ஜோதிஷம்

உங்கள் ஜனன கால விவரம் அல்லது ஜாதக நகல் எதாவதொன்றை குறிப்பிடவும்; அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரமும், சுமார் வயதும் தெரிவித்தால் எதிர்காலத்தில் நடைபெறப்போகும் பலன்களை சாஸ்திரீயமாக எழுதி அனுப்புகிறோம்.

| | | |
|---|---|---|
| ஒரு வருஷம் மாதவாரி பலன் எழுத | ... ரூ. | 2-0-0 |
| 5-வருஷங்களுக்கு மாதவாரி | ... ரூ. | 7-8-0 |
| ஒரு வருஷம் வாராந்திர பலன் | ... ரூ. | 10-0-0 |
| எதிர்கால சம்பந்தமான 5-கேள்விகளுக்கு பதில் எழுத | ... ரூ. | 1-0-0 |
| மேல் ஒவ்வொரு கேள்விக்கும் | ... ரூ. | 0-4-0 |
| வி. பி. செலவு | ... ரூ. | 0-4-0 |

சென்னை ஆந்திர பத்திரிகை எழுதுவதாவது :—"இவரது ஜோதிஷத் திறமையை நாம் மனப்பூர்வமாக விஞ்ஞாபனம் செய்துகொள்ளுகிறோம்."

சென்னை சுதேசமித்திரனில் ஸ்ரீமான் மணி எழுதுவது:—"எதிர்காலத்தை அறிந்து சொன்ன இந்த ஜோதிஷருக்கு வந்தனம் செலுத்தவேண்டும்."

வெளி நாடுகளுக்கு முன் பணம் அனுப்பிப் பெறவும்.

ஹனுமத் உபாசி வி. கே. சடகோபாச்சாரியார்

ஹனுமான் ஜோதிஷ ஆபீஸ், திருத்தணி, S. இந்தியா.


# வைசூரி அல்லது அம்மை

(M. நாகேஸ்வரன், ஆரணி)

வைசூரி என்பது ஒரு பயங்கரமான தொத்து வியாதி என்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயமே யாயினும் அனேகர் அது மாரியம்மன், காளியம்மன் முதலிய தேவதைகளால் ஏற்பட்டன வென்று நம்பி வருகிறார்கள். அப்படி யெண்ணுவது மூடத்தனமே யன்றி வேறில்லை. உண்மையில் அது உஷ்ண மிகுதியினால் உற்பத்தியாகும் ஒருவித விஷக் கிருமிகளால் ஏற்படக்கூடிய வியாதி என்பது நிச்சயம். அது உஷ்ண தேசங்களில்தான் விசேஷமாய் பரவும். அது பரவுவது காற்றினாலேதான். எப்படி யெனின், அவ்வியாதியஸ்தர்கள் விடும் காற்றின் மூலமாக அனேக நுண்ணிய விஷக் கிருமிகள் வெளிவருகின்றன. அக்கிருமிகள் மற்றவர் சுவாசிக்கும் காற்றின் வழியாய் உட்சென்று அவர்களுக்கும் அந்நோயை உண்டாக்குகின்றன. இந்த வியாதியால் பீடிக்கப்பட்டவர்களில் இறப்பவர் அதிகம், பிழைப்பவர் சிலர். அச்சிலரிலும், குருடர்களாகவும், கூனர்களாகவும், முடவர்களாகவும் பலர் ஆகின்றனர். இதனால் ஏற்படும் தழும்பினால் சிலருக்கு அழகு குன்றிவிடுகின்றது. எனவே இவ்வியாதியின் காரணம், லக்ஷணம், சிகிச்சாமுறை, தடுக்கும் வழி இவைகளை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும்.

**காரணம்:**—இந்நோய் தோன்றுவதற்கு மூளையும், தேகமும் தாங்காத அதி உஷ்ணமே காரணமாகும். ஆனால் அனைவருக்கும் உண்டாவதில்லையே யெனின் அது அவர்களின் தேகப் பிரகிருதியின் கூறும், குளிர்ந்த உணவுகளும், மனோதிடமுமே காரணமாகும்.

**இலட்சணம்:**—குளிர், தாமஜ்வரம், இருமல், நாவறட்சி, தோலின் மெதுவின்மை, நாடிகளின் துடிப்பு, வாந்தி, தலை வலி முதலியன ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றுவதே இந்நோய் உண்டாவதன் குறிகளாகும். ஜ்வரம் கண்ட மூன்றாம்நாள் முத்துக்கள் கிளம்பி கழுத்து முதல் பாதம் வரை படிப்படியாய் பரவும். நாள் மூன்று முதல் எட்டு வரை முத்துக்கள் கிளம்பிக்கொண்டே இருக்கும். எட்டாவது தினத்தன்று அக்கொப்புளங்கள் பழுத்துப் பொருக்குக் கட்டும். அதன் பிறகு அவை உதிரும். அக்காலங்களில் தான் அதிலுள்ள விஷக் கிருமிகள் பிறரைத் தொத்தும் தன்மை யடைகின்றன.

**சிகிச்சா முறை:**— நம்முடைய முன்னோர்கள் ஞானமில்லாதிருந்த சாமான்ய ஜனங்களுக்கு அறிவைப் போதிப்பதில் வெகு சமர்த்தர்கள். அவர்கள் இவ்வியாதிக்குச் சில சிகிச்சைகளைச் செய்து வந்தனர். பார்வைக்குச் சிகிச்சையாகத் தோன்றாதாயினும் உண்மையில் சிறந்த சிகிச்சா முறைகளே யாதலின் இன்றும் அவை வழக்கத்தி லிருக்கின்றன. அவைகளாவன:— அவ்வியாதி கண்டவனை ஒரு தனி அறையில், கழுவப்பட்ட ஒரு பாயில், வேப்பிலையை நிரப்பி அதில் அவனைப் படுக்க வைப்பார்கள். அடுத்த வீட்டிலுள்ள குழந்தைகளாவது, மற்றவர்களாவது அவ்வீட்டிற்குள் வரக்கூடாது. இதை அறிவிக்க அந்த வீட்டு வாயிலில் வேப்பிலைக்

கொத்தை சொருகி வைப்பார்கள். வைசூரி கண்டிருக்குங் காலத்தில் புதிதாக எந்த சாமானையும் வாங்குவது மில்லை; தன் வீட்டில் இருக்கும் சாமான்களை விற்பது மில்லை. விசேஷ பண்டிகைகளை அவர்கள் கொண்டாடக் கூடாது. சுருங்கச் சொல்லின் பிணியாளிக்கு உபத்திரவத்தை உண்டு பண்ணக்கூடிய எவ்வித காரியத்தையும் செய்யக்கூடாது. அப்பிணியாளனுடைய மனதில் பரபரப்பாவது, உத்வேகமாவது, உணர்ச்சியாவது ஏற்படாவண்ணம் யாதொரு சமாச்சாரத்தையும் அவனிடம் அறிவிப்பதில்லை. தவிர அம்மை பூட்டி இருக்குங் காலத்தில் ஒருவரும் ஊர்ப்பிரயாணம் செய்வது மில்லை; ஊரிலிருந்து வந்தவர்களைச் சேர்ப்பது மில்லை. மேலும் பிணியாளர் உள்ள அறையையும் அதைச்சார்ந்த இடங்களையும் வாறுகோலால் சுத்தம் செய்யாமல் வேப்பிலைக் கொத்துகளைக் கொண்டே சுத்தம் செய்வார்கள். அம்மை வார்த்துள்ளவர்களுக்கு உடைத்த அரிசிக் கஞ்சியாவது அல்லது இருமுறை வடிக்கப்பட்ட சாதத்தையாவது கேழ்வரகின் கூழையாவது தயிரைவிட்டுக் கொடுப்பர். மத்தியான நேரங்களில் பானகமும் இளநீரும் கொடுப்பார்கள். தேகத்திற்குக் குளிர்ச்சியை யுண்டாக்கும் பழத்தையும், முக்கியமாய் நாரத்தம் பழம் பேயன் பழம் இவற்றையே கொடுப்பார்கள். அம்மை இறங்கிய பின் வேப்பிலையையும் மஞ்சளையும் அரைத்துப் பூசுவார்கள். இவைகளே தமிழர்களின் சிகிச்சா முறை. வேறு மருந்துகள் உள்ளுக்கோ வெளிக்கோ உபயோகிப்பதே இல்லை.

வைசூரி வந்தவரின் உஷ்ணத்தைத் தணித்து நோயின் வேகத்தைக் குறைக்கவும், மற்றவர்களி லிருந்து வைசூரி கண்டவரைப் பல வகையிலும் தனிப்படுத்தி விஷக் கிருமிகள் மற்றவர்களுக்குப் பரவாதிருக்கச் செய்யவும், வேப்பிலை உபயோகத்தால் விஷக் கிருமிகளைச் சாகடிக்கவும் எவ்வளவு தூரம் இந்த சாதாரண பழக்கங்களின் மூலமாகவே ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிற தென்பதை நினைக்கும் போது முன்னோர்களின் அறிவுத் திறமையை என்னென்று வியப்பது.

ஆங்கிலேயரின் சிகிச்சை இந்த நோய்க்கு இத்தமிழ் முறையைக் காட்டிலும் இதுவரை யாதொரு விசேஷ பயனும் அளிக்க வில்லை. ஆனால், வைசூரி வார்ப்பதைத் தடுக்க அவர்களால் எடுக்கப்பட்டுள்ள அம்மை குத்தும் முயற்சி பயனுடைய தென்றே நன்கு விளங்குகின்றது. எனவே ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைகளுக்குத் தாங்களே வலிந்து சென்று அம்மை குத்திக்கொள்ள வேண்டும். அவசியம் நேரும்போது மீண்டும் மீண்டும் சிறியவர்களும் பெரியவர்களும் அம்மை குத்திக்கொள்வதற்குச் சற்றும் பின்னடையக் கூடாதென்றே தெரிவித்துக் கொள்ளுகிறேன். இது பொதுவான சிகிச்சா முறை.

* * *

(மிஸஸ் டாக்டர் கண்ணுசாமி, முனிசிபல் கவுன்சிலர், திருவாரூர்.)

அம்மையில் பலவகை உண்டு. அவை ஒவ்வொன்றுக்கும் தனித் தனி இலட்சணங்களும், சிகிச்சா முறைகளும் உள்ளன.

அம்மையின் வகை:—பனைமுகரி, பாலம்மை, வரகுதரி, கொள்ளம்மை, கல்லுதரி, கடுகம்மை, மிளகம்மை, கரும்பனிச்சை, வெந்தய அம்மை, பயரம்மை, உப்புதரி என்னும் பதினொரு வகை அம்மைகள் உண்டு. இவைகளின் குணமும் சிகிச்சாமுறையும் பின்புவெளி வரும்.

---

# கமலா அல்லது விதவா விவாகம்

(பால்யன்)

லட்சுமண முதலியார், முதலியார் வகுப்பிற்கே புரோகிதர் போன்றவர். அவர் என்றால் வைதீகம், வைதீகம் என்றால் அவர் என்போர் அந்நகர் வாசிகள். சுந்தரி அவருடைய அழகிய மனைவி. அவளுக்கு அழகே உருவெடுத்த சிறுமி ஒருவள் உதித்தாள். அவள் பெயர் கமலா. கமலா இரண்டு வயதாய் இருக்கும் போதே அவள் தாயார் இறந்தனள். புரோகிதத் தொழிலுக்கு மனைவி யற்றவன் உதவான். ஆகையால் மறுமுறை மணம் செய்து கொண்டார். ஆனால் உலக வழக்கம் போலவே அவர் அதன்பின் மனையாட்டி தாசர் ஆனார். கமலாவிற்கு அவள் மாற்றாந்தாயின் கொடுமை சகிக்க முடியவில்லை. தன் தந்தையிடம் முறை யிட்டதின் பேரில் அவள் பாட்டி வீட்டிற்கு அனுப்பப் பட்டாள். தனது வாழ்வை அங்கு வெகு சந்தோஷத்துடன் போக்கினாள்.

வருடங்கள் கழிந்தன. கமலாவுக்கு வயது பதினான்கு ஆயது. அவள் குயில் போன்ற குரலும், அன்ன நடையும் எல்லோருள்ளத்தையும் கவர்ந்தது. அக்கம் பக்கத்துள்ள சிறுமியர் அனைவரும் இவள் அழகாய சூரிய வெள்ளொளியில் மங்கிய நட்சத்திரங்களை ஒத்தனர்.

முதலியாருக்கோ, 'நமது புதல்விக்கு எப்போது விவாகம் செய்வது, ஊரார் ஏதாவது சொல்லுவரோ,' என்பதே கவலையாக இருந்தது. தனது சுத்த சைவ மதத்தில் ஒரு பட்டதாரிக்குக் கொடுக்க முடிவு செய்தார். நமது சமூக கல்யாண விஷயம் உலகறிந்ததே. தாய்க்கும் தந்தைக்கும் மணமகன் பிடித்திருந்தால் போதும். பிறத மணமகன் இஷ்டமும் வேண்டாம்; மணமகள் இஷ்டமும் வேண்டாம்.

கமலா அப்போது மணம் என்றால் பூவின் வாசனை, அல்லது நாற்றம் என்றறிவாளே ஒழிய கல்யாணம் என்றறியாள். ஆனால் அவள் வசித்த எதிர் வீட்டு தேவராஜ முதலியாரின் ஜேஷ்ட புத்திரன் சங்கர் குமாரிடத்தில் சகோதரத்துவம் போன்ற பிரேமை கொண்டிருந்தாள். மற்று 'காதல், கீதல்' என்றால் என்னவென்று தெரியாது. அவள் யாரை நேசித்தாலும்—நேசிக்கா விட்டாலும், தந்தை சொல்லை மீறி அவளால் நடக்க முடியுமா? அல்லது இந்த சமுதாயம்—ஜாதிக் கட்டுப்பாடுகள்—இடம் கொடுக்கிறதா?

அவள் தந்தை கல்யாணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு விஷயத்தை அறிவித்தார். அதுமுதல் அவள் முகவிலாசம் மங்கியது. மனதில் பாரமாக என்னமோ இருந்ததைப் போல் இருந்தது.

* * *

இரண்டு ஆண்டுகள் சொல்லிக் கொள்ளாது சென்றன. ஆ! ஒரு நாள் கமலாவின் கணவன் இறந்து விட்டான்! என்னே வாழ்வு! என்னே உலகம்!!! இன்னும் புஷ்பவதி யாகாது தனது தந்தை வீட்டில் இருந்த கமலாவிற்கு இச்செய்தியைக் கேட்டதும் மனது சொல்லொண்ணாத் துக்கத்தை அடைந்தது. மூர்ச்சித்து வீழ்ந்தாள்; விம்மினாள். பால்ய விதவை கமலாவின் துக்கத்தை—ஆற்றொணாத் துயரத்தை எழுதினால் ஏடு ஏடாக ஏடு நீருமே ஒழிய அவள் துக்கம் தீராது. அவளது ஆழ்ந்த குழந்தை மனத்துயரை மாற்ற எவரால் முடியும்?

துரதிர்ஷ்டமும், துன்பமும் வந்தால் ஒருமையில் எப்போதும் வருகிறது இல்லை. இந்தத் துயர் போராக் கொடுமைக்கு அவள் சிற்றன்னையும் மாண்டு போனாள்.

புரோகிதர் மறுமணம் செய்துகொள்ள வேண்டியவ ரானார். இல்லாவிடில் பட்டினி கிடக்கவேண்டும். அவரும் பல விடங்களில் பெண்ணுக்காக அலைந்து திரிந்தார்.

*　　　*　　　*

## 2

தென்றல் காற்று மெள்ளென வீசி கமலா வீட்டு மேஜைமேல் பிரிக்கப்பட்ட,—அப்போதுதான் டெலிவரான,—அம்மாதத்திய மித்திரனை ஆட்டி விளையாடியது. கமலா ஆழ்ந்த யோசனையுடன் சாய்வு நாற்காலியில் அமர்ந்து இருந்தாள்.

யாரோ கதவை மெல்லத் தட்டுவது போன்றிருந்தது. 'சட்' கென்று எழுந்து கமலா கதவைத் திறந்தாள். மேல் நாட்டு உடையணிந்த அந்நியர் ஒருவர் நிற்பதைக் கண்டு நாணிய கமலா, தனது தந்தை வெளியே சென்றிருக்கிறார் என்றும், வர சிறிது நேரம் பிடிக்கும் என்றும் சொன்னாள்.

"கமலா! என்னை யாரென்று உன்னால் அறிந்துகொள்ள முடியவில்லையா? உன்னோடு சிறு வயதில் விளையாடிய சங்கரல்லவா இங்கே நிற்பது! ஏன் இவ்வளவு வெட்கித் தலை குனிகிறாய்?" என்றார் வந்த ஆசாமி.

கமலாவிற்குத் தான் தினந்தோறும் சிரித்து விளையாடிய அழகிய முகம் அப்போது புலப்பட்டது; சங்கரைக் கண்டுகொண்டாள். பேச வாயெடுத்தாள்; நாக்கு எழவில்லை. வாய் குளறியது.

"கமலா! விஷயம் பூராவும் அறிந்தேன். கவிழ்ந்த—கொட்டிய பாலை நினைந்து மனமுருக வேண்டாம். எதற்கும் நீ அஞ்சாது மறுமணம் செய்துகொள்ள வேண்டும்" என்று முடித்தார்.

கமலாவின் முகத்திற்கு சரேலென்று ரத்தம் ஏறியது; வெட்கினாள்.

குமாரர் விதவா விவாகத்தைப்பற்றி எடுத்துரைத்துவிட்டு "நீ மறுவிவாகம் செய்துதான் ஆகவேண்டும். நானே உன்னை மணந்து



கொள்ள விரும்புகிறேன்; நான் தற்போது ஒரு டாக்டராக இருக்கிறேன். நல்ல வரும்படி கிடைக்கிறது. கவலை யற்று வாழலாம். உனது தந்தையும் நம்முடன் சந்தோஷமாய் இருக்கலாம்," என்றார்.

கமலா: "சரி ஒருக்கால் நான் எனது சம்மதத்தைக் கொடுத்து விட்டால் என் தந்தை அதை அநுமதிக்க வேண்டாமா?" என்றாள்,

## 3

பெண்காரியமாக வீட்டை விட்டுப் போன கமலாவின் தந்தை திரும்பி வந்தார். "வெற்றி தானா அப்பா?" என்று புன்னகையுடன் கேட்டாள்.

"நமது சுய சைவத்தில் ஒரு பெண்தா னிருக்கிறது. அதற்கும் வரதட்சிணை வேண்டுமாம்! சேலத்தில் இந்த அநியாயம் நடக்குமென்று கனவிலும் கருதவில்லையே! பிராமணர் குலத்தில் அல்லவோ வரதட்சிணைப் பேச்சு. நமது குலத்தில் ஏது? நம்மிடமோ கல்யாணத்திற்கே போதுமான பணம் இல்லை" என்று வருந்திய ஈனசுரத்துடன் சொன்னார்.

இவர் இவ்வாறு பேசிக்கொண் டிருக்கையில் யாரோ கதவைத் தட்டினார்கள். உள்ளே வந்தவர் 'நீர்தான் லட்சுமண முதலியாரோ?" என்றார்.

லட்சுமண முதலியார்:— "ஆம், நான் தான். என்னைத்தான் லட்சுமண முதலியார் என்பார்கள்."

வந்தவர்:— "நீர் ஒரு பெண் தேடிக் கொண்டிருப்பதாகக் கேள்வி; வேண்டுமானால் உமக்கு சுலுவில் பெண் முடித்து வைக்கிறேன். நான் ஒரு தரகன்," என்றார்.

முதலியார் மனம் பூரித்துப் புளகாங்கித மடைந்தது; முகம் மலர்ந்தது.

"எல்லாம் என்ன செலவாகும்?" என்று ஆவலுடன் வினவினார் முதலியார்.

"அதிக மில்லை; மூன்று முழுநோட்டு சுத்தமாய் இருப்பின் சரி" என்றார்.

"ஆ! சரி சரி! ஐந்து நோட்டு ஆனாலும் பரவாயில்லை; ஆனால் அதற்குள் முடிக்கவேண்டும்" என்றார் முதலியார்.

## 4

ஒரு வாரம் கழிந்தது. லட்சுமண முதலியாரும், கமலாவும் 106, ஒப்பணக்கார வீதிக்குத் தரகரால் அழைக்கப் பட்டனர். தரகர் அவர்களை வரவேற்றார். அங்கிருந்த மற்றொருவரை தனது உறவினர் என்று அவர்களுக்கு அறிமுகப் படுத்தினார்.

அடுத்த நாள் காலை ஆடம்பர மின்றி தரகர் சிநேகர்களிடையே முதலியாருக்கு மூன்றாவது மணம் நடந்தது.

அன்றைய சாயந்திரம் முதலியாருடைய அறையில் மேஜையின்மேல் ஒரு கடிதம் இருந்தது. அதில் கீழ்க் கண்டவாறு எழுதியிருந்தது:—

கோவை, 10—6—34

அன்பார்ந்த மாமா!

நீர் என்னைக்கண்டு நெடுநாளாய் விட்டது. அதனால் தான், நான் நரகவேடத்தில் வந்தபோது தாங்கள் என்னைக் கண்டுகொள்ளவில்லை. நான் தங்கள் குமாரத்தி கமலாவை நேசிப்பது தாங்கள் அறியாதது அல்ல. கமலா இப்போது விதவையாக இரக்கப் படத்தக்க நிலையில் இருக்கிறாள். நீர் என் அவளை மணம் செய்து கொடுக்கக் கூடாது? நான் எப்படியும் அவளை மணக்க விரும்புகிறேன். அவளும் அதற்கு சம்மதிக்கையில் தடையென்ன. தவிர, இன்று காலை தாங்கள் மணந்து கொண்டது எனது சிநேகிதையான மிஸ். மார்ட்டன் என்னும் கிருஸ்தவ மாது. இது ஒருவருக்கும் தெரியாது. பொது ஜனங்களுக்கு இந்தவிஷயம் தெரிந்தால் உமது பாடு திண்டாட்டந்தான். எங்கள் இருவர் விவாகத்திற்கு அனுமதி யளிக்காவிடில் விஷயத்தை மித்திரனிலும், பல தினசரிகளிலும் “பப்ளிஷ்” செய்து விடுவேன். ‘யோசித்துப்பதில் எழுதவும்.’

இப்படிக்கு,
மருமகனாகப்போகிற,
சங்கர்குமார்.

இதைப் படித்ததும் வைதீகக் குடுக்கை லட்சுமண முதலியாருக்கு இடி விழுந்த மாதிரி இருந்தது. ‘ஜனங்களுக்கு விஷயம் எட்டினால், வைதீக புரோகிதர் கிருஸ்தவ குலப் பெண்ணை மணந்து கொண்டார் என்று எள்ளி நகை யாடுவரே! பிழைப்புக்கு ஆபத்து வருமே!’ என்று பலவாறு மனங் குழம்பினார். முடிவில் சங்கர் ஜெயித்தார்.

அடுத்த மாதத்தில் டாக்டர் சங்கர் குமாருக்கும் கமலாவுக்கும் திருமணம் நடந்தது.

அன்று இரவு சங்கர், கமலா, லட்சுமணமுதலியார் மூவரும் பல விஷயங்களைப்பற்றி பேசிக்கொண் டிருந்தனர். குமார், முதலியாரைப் பார்த்து,’ “மாமா! நீர் கிருஸ்தவப் பெண்ணை மணந்து கொண்டோமே என்று கவலைப்படவேண்டாம். நீங்கள் விவாகம் செய்து கொண்டது பெண்ணே அல்ல—எங்கள் காலேஜில் பெண்ணாக, ஆக்ட்! செய்த—அதோநிற்கும்—எனது நண்பர் கோபாலனே!” என்றார்.

எல்லோரும் சேர்ந்து வயிறு வெடிக்கக் கக்கடக்கட—கொல்——ஹிஹி! என்று சிரித்தனர்.

அவர்களுடன் நாமும் ஏன் சேர்ந்துகொள்ளக் கூடாது!

---

## விகடத் துணுக்குகள்

வந்தவர்: மானேஜர் உள்ளே இருக்கிறாரா?
பையன்: உள்ளே இல்லை என்று வருத்தத்துடன் தெரிவிக்கிறேன்.
வந்தவர்: ஏண்டா தெரிவிக்க வருந்துகிறாய்?
பையன்: மனசாட்சிக்கு விரோதமாய் சொல்லவேண்டி இருக்கிறதே என்று தான்.

—ஈ. வே. ப. வேலு, கோவை.

---

எஜமான்: டே, உனக்கு மூளை இருந்தா இப்படி யெல்லாம் கன்னா பின்னா என்று பேச மாட்டாய்.
வேலைக்காரன்: இருந்துதுங்க. பொடிபோட்டுப் போட்டு இதுமாதிரி ஆயிட்டதுங்க.

—மா. அரிபத்ர முதலியார், கடலாடி.

---

ஒரு கிராமவாசி: தபால்கார ஐயா! எனக்கு ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா?
தபால் பியூன்: உமது பெயரென்ன?
கிராமவாசி: அதிலேயே எழுதி இருக்கும், பாருங்கோ.

—A. குப்புசாமி, சென்னை.

---

ஐயர்: டே வண்ணான். இந்தக் கழுதைமீது ஏண்டா இவ்வளவு சுமை ஏற்றி யிருக்கிறாய்?
வண்ணான்: இதற்குக் கூன் ரொம்ப இருக்குதுங்கோ. அது நிமிரதுக்கு இப்படிச் செய்தேனுங்கோ.

—கா. சி. சண்முக சுந்தரம்.

---

மகள்: அம்மா! மாமியார் இருக்கிற வீட்டில் என்னைக் கொடுப்பதென்றால் நான் கல்யாணமே செய்து கொள்ள மாட்டேன்.
தாய்: அது ஏண்டி?
மகள்: மூச்சு விடுவதற்கெல்லாம் முன்னூற்றெட்டு குற்றங் கண்டு பிடித்து அண்ணியை அடிக்கடி அடித்துத் தொந்தரவு செய்கிறாயே. எனக்கும் மாமியார் இருந்தால் இப்படித்தானே என்னையும் அடிப்பாள்.

—ஏ. முனுசாமி, கலவை.

முருகனும் சுப்பனும்) ஒரு தோட்டத்திற்குப் போய் மாம்பழம் பறித்தனர். அச்சமயம் தோட்டக்காவலாளி வருவதைக்கண்ட முருகன் தான் மரத்தின்மேல் இருப்பதைச் சொல்லவேண்டாமென சுப்பனிடம் சொன்னான்.

காவலாளி : அடே, மடையா ; யாரடா பழங்களை அறுத்தது?

சுப்பன் : நானல்ல, முருகன்.

காவலாளி : அவன் எங்கே இருக்கிறான்?

சுப்பன் : (மேலே பார்த்து) முருகா ! நீ எங்கே இருப்பதாகச் சொல்லட்டும்.

—G. கதிர்வேலு, ஆரணி.

---

ஓர் சைவப் பிரசங்கி : பாவத்தைச் செய்தவர்களின் பற்கள் நரகத்தில் பிடுங்கப்பட்டு வேதனைப் படுவார்கள்.

குறும்பன் : பற்கள் இல்லாத கிழவர்கள் ?

பிரசங்கி : அவர்களுக்குப் பற்கள் தரப்படும்.

—T. வேலுப்பிள்ளை, கோளும்பு.

---

மனைவி : நான் பாடும்போதெல்லாம் தாங்கள் ஏன் தெருவில் சென்று நிற்கிறீர்கள் ?

கணவன் : நான் உன்னை அடிப்பதாகப் பக்கத்து வீட்டார் நினைத்துவிடப் போகிறார்கள் என்றுதான்.

—N. R. கிருஷ்ணன், ஆரணி.

---

தகப்பன் : பையா ! உன் வாழ்நாளில் நீ மிகவும் சிக்கனமாயிருக்க வேண்டும். 'குந்தி தின்றால் குன்றும் மாளும்.' ஏதாவது வேலைசெயது பிழை.

பிள்ளை : ஆமப்பா ! குந்தி தின்றால் தானே எல்லாம் போய் விடும். நான் நின்றுக்கொண்டே சாப்பிடுகிறேன் : அப்போ ...?

—M. நாகேஸ்வரன், ஆரணி.

---

ஒருவர் : ஏனையா ! நேற்று நீர்தானே பிரசங்கம் செய்தவர், ஏன், பண்ணி என்ற வார்த்தையை கணக்கில்லாமல் உபயோகித்தீர்?

பிரசங்கி : நானு அப்படி பிரயோகம் பண்ணி பிரசங்கம் பண்ணினேன்? நன்றாக ஞாபகம் பண்ணிப் பாருங்கள்.

—சு. தானப்ப முதலியார், மாறும்பதி.

---

சீட்டாட்டத்தில் தோல்வியுற்றவர் : நீ முதலிலேயே துருப்பை அடித்து வாங்கவேண்டும்.

மற்றவர் : டேய், மெதுவாகப் பேசு, துருப்பை அடித்தால் துரைத்தனத்தார் நம்மை சும்மா விடுவார்களா ?

—த. வே. பழநியப்பன், சேங்குந்தபுரம்.

---

ஆசிரியர் : டே, சுப்பா! மது என்றால் மாது என்று எழுதி இருக்கிறாயே, நீ உருப்படப் போவதில்லை.



சுப்பன் : என்ன சார் ! இரண்டும் ஒன்றுதானே ?

ஆசிரியர் : தடியா ! எப்படி ஒன்றாகும்.

மாணவன் : இரண்டும் மனிதர்களை வசீகரிக்கின்றன. இரண்டும் முதலில் இன்பம்போல் தோன்றித் துன்பம் தருகின்றன. இரண்டும் மனிதர்களின் புத்தி ஸ்வாதீனத்தை இழக்கச் செய்கின்றன. இரண்டுக்கும் என்ன சார், வித்தியாசம்.

—R. வீரபத்திரன், காஞ்சீபுரம்.

---

ஒரு வீட்டின்மீது காய்த்திருந்த கல்யாண பூஷணிக்காயை அறுத்துக்கொண்டு ஒரு திருடன் இறங்கும்போது தவறி வீட்டிற்குள் விழுந்து விட்டான். குடியானவன் விழித்துக்கொண்டு விளக்கேற்ற திருடன் ஒரு யுக்தி செய்துகொண்டு 'இதுதானா பூலோகம்' என்றான்.

குடியானவன் பூஷணியின் சாம்பல் உடலெல்லாம் இருந்ததைப் பார்த்து கைலாசத்திலிருந்து சாமியார் இறங்கி வருவதாக எண்ணி 'அரகரா மகாதேவா,' என்று விழுந்து விழுந்து கும்பிட்டான்.

கள்ளன் 'சௌக்கியமாயிருங்கள்' என்று ஆசீர்வதித்து விட்டுக் கம்பி நீட்டினான்.

—A. K. குப்புசாமி முதலியார், தே. புதுப்பாளையம்.

---




உபாத்தியார்: (ஓர் பையனைப்பார்த்து) கெட் அவுட் மடையா! எப்படிப் பார்த்தாலும் பாடம் ஒப்பிக்கிறதில்லை.

பையன் : யூ கெட் அவுட் சார்.

உபாத்தியாயர் : (கோபமாக) நானா போகவேண்டும்?

பையன் : ஆம். நான் சம்பளம் கொடுக்கிறேன். நீங்கள் சம்பளம் வாங்குகிறீர்; அதனால் தான் ஸார்.

—N. கிருஷ்ணசாமி, கடலாடி.

பெரியவர் : ராமா! ஏன் அழுதுகொண்டிருக்கிறாய் ?

பையன் : எங்கம்மாவை அப்பா முண்டேன்னு திட்டறாங்களே.

பெரியவர் : திட்டினால் என்னடா?

பையன் : அப்போ, எங்கம்மாவுக்கு வேறே ஒரு ஆம்படையான் செத்துப்போய் இருப்பாரே. நான் கையெழுத்து போட்டா இவர்கள் ரெண்டு பேரில் யார் பேரை முன்னே போடாது என்று தெரியலையே.

—*M. R. பத்மநாபன், விநாயகபுரம்.

---

வேலைக்காரன் : ஏனப்பா வேலை செய்யாமல் திரிகிறாய்.

சோம்பேறி : எனக்காக எத்தனைபேர் செய்கிறார்கள். நான் வேறேயா ?

ச. நா. குமாரகுரு, கல்லாலம்பூண்டி.

---

*பரிசுபெற்ற விகடம் அனுப்பியவர் விலாசம்:-தேசூர் P.O, வந்தவாசி

# சாந்தி! சாந்தி! சாந்தி!

(T. வேலுப்பிள்ளை, கொளும்பு)

'சாந்தி, சாந்தி, சாந்தி' இவைகளே இலங்கைக்கு விஜயம் செய்த கவியரசர் ரபீந்திரநாத் தாகூர் உச்சரிக்கும் மந்திரம். தொங்கிய உடையும், நீண்ட வெண் தாடியும், புருவத்திற்குள் மறைந்த கண்களும் வயோதிகரை கவிஞராக மட்டுமன்றி அவரினு மேலாக ஒரு யோகியெனவே கொள்ளுமாறு செய்கின்றன. கனிந்த உள்ளத்துடனும் ஆழ்ந்த எண்ணத்துடனும் மிகவும் ஈன சுரத்தில் அவர் 'சாந்தி, சாந்தி, சாந்தி' என உச்சரிப்பது கேழ்ப்பாருள்ளத்தைப் பிணித்து சாந்தியுறச் செய்கிறதென்பதில் சந்தேகமில்லை. அவருடைய குரல் மிகவும் தளர்ந்திருந்தபோதிலும் கேட்டறியாத ஓர் இனிய இராகம் உரையோடு கலந்து வருவது கேட்போர்க்கு மிக்க இன்பம் பயக்கின்றது. இவை வெறும் கற்பனைகளன்று. கவியின் இனிமையையும் இன்பத்தையும் எடுத்துரைக்கும் உண்மை மொழிகளாகும்.

தாகூர் ஒரு கவிஞர். நபி என்றும், யோகி என்றும், குருவென்றும் பலர் பலவிதமாக அவரை அழைக்கிறார்கள். ஏழாம் பிராயத்தில் கவி இயற்றத் தொடங்கிய தாகூர் இன்று 70-ம் வயதில் உலகம் போற்றும் கவியரசராக விளங்குகிறார். அவரது கவிகளை வாசிப்போரது மனம் அக்கவிகளிலேயே தோய்ந்து படிந்து விடுகின்றது. அவரது பாக்களைப் படிக்குந்தோறும் அவை படிப்போரது மனத்தில் அவரை ஓர் உயரிய ஞானியாக உருவகப்படுத்தி விடுகின்றன. ஒவ்வொரு பாட்டிலும் ஒருவகை இன்பம் மிளிர்கின்றது. சொல்லின் அழகு, செய்யுள் நடை, கருத்துச்செறிவு, இராக அமைப்பு எல்லாஞ்சேர்ந்து அவர் பாக்களுக்கோர் உயர் நிலை கற்பிக்கின்றன.

இத்தாலியில் முசோலினியையும், ஜெர்மனியில் ஹிட்லரையும், துருக்கியில் கமால் பாட்சாவையும் நினைக்கும்போது இந்தியாவில் காந்தியையும் தாகூரையும் நினைக்க வேண்டியவர்களாகின்றோம். இவர்களனைவரும் தேச புனருத்தாரணத்தின் அவதார புருஷர்களாகக் கருதப் படுகிறார்கள். ஆனால் முன்னே கூறப்பட்ட மூவருக்கும் பின் கூறப்பட்ட இருவருக்கும் புனருத்தாரண அமைப்புத் திட்டத்தில் ஏற்றக்கோலுக்கும் ஏணிக்குமுள்ள வித்தியாசம் இருக்கிறது. முன்னவர்கள் பலாத்காரத்தில் பற்றுடையவர்கள்; பின்னவர்களோ அதனை அறவே வெறுப்பவர்கள். முன்னவர்கள் துப்பாக்கி முனையில் பகைவர்களை வெல்லும் சுபாவமுடையவர்கள். பின்னவர்கள் சாந்தி, சத்தியாக்கிரகப் படைகளால் பகைவர்களை பணியச் செய்யும் இயல்பினர். மகாத்மா காந்தி இந்தியாவை உலகெங்கும் பிரசுரப்படுத்தி வருகிறார். அவ்வாறு இந்தியாவை பிரசுரப் படுத்துவதற்கான உயர் நிலையில் அதனை வைத்திருப்பவர் ரபீந்திரநாத் தாகூர் எனக்கூறலாம். மங்கிக்கிடந்த கலை நூல்களை உயிர்ப்பித்து இந்தியாவின் இயற்கை எழிலை பாட்டோவியத்தால் மேல் நாட்டார் உணரும்படி தாகூர் செய்து வருகிறார். அவர் உணர்ச்சியும் புகழும்



நிறைந்த புதிய இந்தியாவை ஸ்தாபித்து வருகிறாரெனக் கூறுதல் மிகையாகாது.

தாகூர் ஓர் இளங்குழந்தையாகவும், பெருங் காதலனாகவும், சங்கீத மந்திரவாதியாகவும் விளங்குகின்றார். இம்மூன்று குணங்களை அவருடைய "வளர் பிறை" (crescent moon), "தோட்டக்காரன்" (The gardener), "கிஜந்தலி" (Gijantali) என்னும் மூன்று கவிகளால் முறையே அறியலாம். அதிக அறிவால் முடி நரைக்கும்; அதிக பார்வையால் கண்ணொளி குறையும். ஆனால் தாகூர் வயோதிகராகக் காணப்பட்ட போதிலும் அவர் ஒவ்வொன்றையும் ஆச்சரியத்துடன் நோக்கும் குழந்தையாகவே காணப்படுகிறார். 'வளர் பிறை' என்னும் பாடலில் இது நன்கு விளங்குகிறது. இதைப் போன்ற ஓர் கவியை இன்னும் ஒருவரும் இயற்ற முடியவில்லை !!

"தோட்டக்காரன்" தாகூரை ஓர் பெருங் காதலனாக கூறுகிறது. காதலின் பாக்கியத்தையும், கஷ்ட துன்பங்களையும், காதலின் பீடத்தில் இடப்படும் பலிகளையும் இது துலம்பரமாக விளங்கப் படுத்துகிறது. அவர், நல்லெண்ணங்களையும், வாசனை நிறைந்த புஷ்பங்களையும், நற்சொற்களையும், இனிய சத்தங்களையும், நல்ல வர்ணங்களையும், சந்தோஷத்தையும், சிரிப்பையும் விரும்பிய பெருங் காதலர்!!!

"கிஜந்தலி" யை வாசித்த மாத்திரத்தில் எவரும் மெய்ம்மறந்து சிரித்து விடுவார்கள். கஷ்ட நினைவுகளும், தொந்தரவான எண்ணங்களும் அவர்களை விட்டகன்று விடும். இப்பாடலை வாசிப்பவர்கள் தாகூரை ஓர் யோகியென எண்ணவே முடியாது; ஏனெனில் யோகிகளிடத்தில் அவ்வளவு நளினம் கிடைப்பதில்லை. இங்கிலாந்தில் கற்றறிந்த அனேகர் கூடிய ஓர் கூட்டத்தில் ஓர் தேவாரம் பாடும்படி தாகூரைக் கேட்டபோது அவர் "தோட்டக்காரன்" என்ற கவியிலுள்ள ஓர் காதற்பாட்டைப் பாடிச் சபையோரை சிரிக்கச் செய்தாரென அறியப்படுகிறது.

தாகூர் ஓர் ஆங்கிலக் கவிஞரானது மிகவும் விந்தையே! அவர் ஓர் வங்காளி; இயற்றிய பாடல்களெல்லாம் வங்காளியில். ஆனால் அவைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பாடினதால் அவர் ஆங்கிலக் கவிஞரானார். ஐரோப்பிய ஆங்கிலக் கவிஞர்களே அவரைப் போற்றுகிறார்களென்றால் அவர் ஆங்கிலக் கவிஞரே யென்பதில் ஆட்சேபனையு முண்டோ? ஆங்கிலம், வங்காளமாகிய இருபாஷைகளிலும் கவியரசராக விளங்கும் தாகூரின் மேன்மை இந்திய மக்களுக்கு மட்டுமன்றி கீழ் தேசத்தோர் எல்லோருக்குமே உரியதாகும்.

இந்தியாவிலன்றி மற்றும் பூகோளத்தில் எல்லா மூலைகளிலும் தாகூரின் கவிகள் காற்றலைகளில் சுழல்கின்றன. பாடல்களை இயற்றியவரின் பெயர் தெரியாமலேயே அனேகர் பாடிவருகின்றனர்.

சமய ஜனனத்திற்காக இந்தியாவின்கண் உதிக்கும் செல்வப் புதல்வர்களில் பெரும்பான்மையோர் வங்காளிகளே! இலங்கைச் சரித்திரத்திற்கும் ஆதாரமாயுள்ளது வங்க தேசமே. ஆகையால், தன்வரதயதில் இலங்கை மக்களின் வேண்டுகோளுக் கிணங்க சமுகந்தந்து இந்தியரின் மேன்மையையும், இலங்கை வாசிகளின் அபாய நிலைமையையும் தெரிவித்த வங்க சிங்கத்தின் கற்பனைகளை ஆட்கொள்வதே நாம் அவருக்குச் செய்யும் நன்றியறிதலாகும்.

# பதார்த்தம், பலகாரம்

"கீரன்"

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். ஒவ்வொரு பொருளுக்கும் பெயராக இடப்பட்டு வழங்கப்படும் சொற்கள் யாவும் காரண முடையனவே யென்பது இதன் கருத்து. ஆயினும், நுண்ணுணர் வுடையோர்க்கன்றி மற்றைய மக்களுக்குப் பெயர்க் காரணம் தெற்றென விளங்காதென்பார் "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்ற" என்றுங் கூறிப்போயினர்.

இவ்வாறு எளிதிற் காரணம் விளங்காத சொற்களை வைத்துக்கொண்டு சாதாரண மக்கள் இடருறா திருத்தற்குப்போலும் நன்னூலார், பெயர்களை இடுகுறிப் பெயரென்றும் காரணப் பெயரென்றும் இரண்டாகப் பகுத்துக் கூறுவாராயினர். இது நிற்கத் தொல்காப்பியர் கூற்றுப்படி நுணுகி யாராயுமிடத்துப் பலசொற்களுக்குக் காரணம் பெறப்படுகின்றது. எடுத்துக் காட்டாகச் சில சொற்களைத் தருகின்றேன்.

மீன், ஆடு. வீடு, நாடு என்னு மிவற்றை யாராய்வோம். இவற்றுள் மீன் என்னுஞ் சொல், மின் என்னுந் தாதுவினடியாகப் பிறந்ததாகத் தோற்றுகிறது. மின்னுவது மீன். இம்மீனெனுஞ் சொல்லால் இரு வேறு பொருள்கள் குறிக்கப் படுகின்றமையைக் கருதிப் பார்க்குமிடத்து மின்னுவது என்னும் பொருளை அடிப்படையாகக்கொண்டே இச்சொற்கள் எழுந்தனவென்பது பெரிதும் விளக்கமாகின்றது.

கிணறு, குளம், ஏரி முதலிய நீர் நிலைகளில் இருந்தாற்போலிருந்து திரளான மீன்கள் துள்ளிப் பொறியும்போதும், சரேலெனத் தாவித் திரியும்போதும் கூர்ந்து நோக்குவோர்க்கு இவ்வுண்மை இனிது விளங்கும். நீரி லிவ்வாறு மின்னும் பொருளைக் கண்டு அதற்கு மீனெனப் பெயரிட்ட முன்னோர்கள், நிமிர்ந்து விண்ணை நோக்கியபொழுது அங்கும் மின்னும் பொருள்களைக் கண்டார்கள். நீரில் மின்னும் பொருளின் வேறாக உணர்தற் பொருட்டு இதற்கு "விண் மீன்" எனப் பெயரிட்டனர்.

ஆடு: இஃது அடு என்னுந் தாதுவி னடியாகப் பிறந்ததெனக் கருதுதல் பொருத்த முடைத்தாகின்றது. அடுத்திருப்பது ஆடு. யாரை? மக்களையெனல் கூறாமலே யமையும். 20-ம் நூற்றாண்டுக் கவிஞராய சி. சுப்பிரமணிய பாரதியார், பாப்பா பாட்டில்,



"வண்டி யிழுக்கு நல்ல குதிரை நெல்லு
வயலில் உழுது வருமாடு நம்மை
அண்டிப் பிழைக்கு மந்த ஆடு"

எனக் கூறியுள்ளமை ஈண்டு கருதத்தக்கது.

***வீடு :*** இச்சொல் விடு என்னும் தாதுவினடியாகப் பிறந்ததெனலாம். "வீடென் றறைதரு சொற்குப் பொருளது விடுதலே" யென்பது ஓர் பாட்டு முத்தியை வீடென்றனர் பிறவியினின்றும் விடுதலை யடைந்து நிற்கு மிடமாதலின். நாம் வாழும் வீட்டை வீடென்றமை தொழின் முயற்சியினின்றும் விடுதலை யடைந்து நிற்கும் இடமென்பது குறித்தற்குப் போலும்.

நாடு : (மக்களால்) நாடத்தக்கது நாடு. "நாடென்ப நாடா வளத்தன" என்றனர் தெய்வப் பாவலர். நாடா வளமுடையதை மக்கள் நாடுவது இயற்கையே யன்றோ. இதுகாறும் கூறிய இவற்றால் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்னும் உண்மை ஒருவாறு விளங்கி யிருக்கும் என்று கருதுகின்றேன். இனிப் பதார்த்தத்திற்கும் பலகாரத்திற்கும் வருவோம்.

பதார்த்தம் என்னுமிச் சொல்லின் கருத்துப் "பாதியுணவு" என்பதாகும். இதனைக் கண்ணழிக்கப் பதம் + அர்த்தம் என்றாகும். பதம் என்றால் சோறு (உணவு), அர்த்தம் என்றால் பாதி. இதன் பொழிப்புச் சோற்றிற் (உணவிற்) பாதி என்பதாகும். இனி அகலவுரை வருமாறு;

பதம், அர்த்தம் என்னு மிவ்விரு சொற்களும் வடமொழிப் பலபொரு ளொரு சொற்களாகும். பதம் என்பது, சொல், பதவி, அடி என்னும் பொருள்களைக் குறிப்பதோடு சோறு என்னும் பொருளையும் குறிப்பதாகும். மாயை, அழகு முதிர்ந்து பக்குவமான பருவத்தை யுடையளா யிருந்தன ளென்பதை கூற வந்த சிவப்பிரகாசர் "பாகமாகப் பொங்கி யெழும் பதமே போலப் பொங்கு மெழின் மோக மாயை தன் பருவம்" எனக் கூறியுள்ளனர். "பக்குவமாகப் பொங்கி வழிகின்ற சோற்றினைப்போல் முதிர்ந்து வழிந்தொழுகும் அழகினளாய மயக்கம் விளைக்கும் மாயையின் பருவம்" என்பது இதன் பொருள். எனவே பதம் என்பது சோறென்னும் பொருளில் அறிஞரால் ஆளப்பட்டிருத்தல் கண்டாம். பதம் என்பது அச்சொல் எழுந்த நாட்டைப் பொருத்து சோறு என்று கொள்ளப்படினும் அதன் கருத்துப் பொருள் பொதுவாக உணவு என்பதேயாகும்.

அர்த்தம் என்பது பொருள் செல்வம் என்பனவற்றைக் குறிப்பதோடு, பாதி என்பதையும் குறிப்பதென்பது வெளிப்படை. ஆகவே, பதார்த்தம் என்னுமிச் சொல்லிற்குப் "பாதி

யுணவு" என்னும் பொருள் பொருத்த முடைத்தாகின்றது. இப் பதார்த்தம் என்னும் சொல் தற்பொழுது துணையுணவாகிய கறியைக் குறிக்க வழங்குவதென்பது அனைவரும் அறிந்ததொன்றேயாம். கறி என்பது, குடிப்பன, தின்பன என்பனவற்றைப் போல் "கூரெயிற்றினாற் கடிப்பன" என்பது குறித்ததாகும். கறித்தல் எனினும் கடித்தல் எனினும் ஒன்றேயாம். கறியைக் கடிப்பான் என்று சிலர் வழங்குவதும் இது கொண்டேயாம்.

கறிக்கு மூணவாக நம் நாட்டிற் பெரும்பாலோர் கொண்டுள்ளது காய், கிழங்கு கீரை முதலிய மரக்கறிப் பொருள்களாகும். பண்டை நாளில் இக்காய் கிழங்குகளையே முழு வுணவாக உண்டு வந்தார்கள். நாளடைவில் மக்கட்டொகை பெருகப் பெருக அவ்வளவு பேருக்கும் முழுவுணவாகக் காய் கிழங்கு கிடைத்தல் கூடா தாயினமையின் பாதி யுணவு மற்றைப் பொருள்களும், பாதி யுணவு காய் கிழங்குமாகக் கொள்ளத் தொடங்கி அவற்றிற்குப் பதார்த்தம் என்றும் பெயரிட்டு வழங்குவாராயினர். இவ்வாறு கொண்ட இவ்விரு பகுதி யுணவில், பாதி யுணவாகிய காய் கிழங்குணவு உடல் வன்மைக்காகவும், மற்றைப் பாதியுணவாகிய மற்றைப் பொருளுணவு வயிற்றை நிரப்புதற்கும் போலும்.

இஃதிவ்வாறாக, இற்றை ஞான்று சிலர், பதார்த்தம் என்பதன் பொருளும், காரணமும் அறியாராய்ச் சோற்றை யுட்செலுத்துவதற்காகவே இப்பதார்த்த வுணவு கொள்ளப்பட்டதென மயங்கி, இதனைத் "தொட்டுக்கொள்ளுவது" எனக் கூறுகின்றனர். மற்றுஞ் சிலர், அதிகமாகக் காய்கறி யுண்பது அநாகரீகம் என்றும், சும்மா கொஞ்சம் தொட்டுக் கொள்வதே செயற்பாலதென்றும், இதனை ஓர் பெரிய நாகரீகமாகவும் கருதியுள்ளனர். என்னே! பேதை மதி.

முடிவாகக் கூறுமிடத்து இக்காய் கிழங்குகளே சிறந்த வுணவு; முழுவுணவாகக் கொள்ளத் தக்கது. முடியாமை காரணமாகவே அரை யுணவாகக் கொள்ளவேண்டுவ தாயிற்று. முடிந்தோர் அதனையே முழுவுணவாகக் கொள்ளல் சிறந்ததென்க.

பலகாரம்:—கட்டுரை நீண்டு விட்டதாகலின் ஒருவாறு சுருக்கமாகக் காட்டி முடித்து விடுகின்றேன். விளக்கம் வேண்டுவோர் ஆங்காங்குள்ள அறிஞர்பால் கேட்டுத் தெளிந்து கொள்க. பலகாரம் என்றால் பழவுணவு என்பதாகும். கண்ணழிப்பின், பலம் + ஆகாரம் என்றாகும். பழத்தாலாய வுணவு என்பது பொழிப்பாகும். பலம் என்பது பழம் என்னும் பொருளில் பல பாட்டுக்களில் பயின்றுள்ளது. ஆகாரம் என்றால் உணவு என்பது



இ08447

வெளிப்படை. பண்டை நாளில், விரதம் (பட்டினி) கிடந்தோர் விரதத்தை முடித்தவுடன் பழவுணவு அருந்துதல் மரபு. விரதமிருந்து ஓய்வு கொண்ட குடருக்கு உட[illegible] தாக்க[illegible] பொருந்திய வுணவு பழ வுணவே யென்பதை இன்[illegible] விரதப் பெரியரான மகாத்மா காந்தி யடிகளின் விரத முறையில் வைத்துணர்ந்துகொள்க.

நாளடைவில் இதன் பொருளறியாமற் போன மக்கள் இதற்குப் பற்பலவாறு விந்தைப்பொருளுரைப்பாராயினர். பலவிதமான உணவு என்பது கருதி பல + ஆகாரம் என்கின்றனர் சிலர். மிளகாய்க்காரம், வெங்காயக்காரம் போன்ற பல காரங்கள் சேர்ந்ததாகலின் பல + காரம் என்கின்றனர் சிலர்.

இட்டிலியையோ, வடையையோ, மற்றெதையோ தனித்துண்ணும்போதும், பல காரப் பொருள்களின்றி ஓரே காரம் சேர்த்துச் செய்யும்போதும் இப்பொருள் பொருத்த மற்றதாய்ப் போகின்றது. ஆகவே, பலகாரம் என்பதற்குப் பொருத்தமான பொருள் பழவுணவு என்பதேயாகும். இவ்விரு சொற்புணர்ச்சியும், 'அ. ஆ. முன்னர் அவ்வொன்று வந்தால் அவ்விரண்டும் கெட ஓர் ஆகாரம் தோன்றும்' என்னும் வடமொழிப் புணர்ச்சி விதியைக் கொண்டதாகும்.

இதுபோன்று இன்னும் எத்தனையோ சொற்களின் உண்மைப் பொருளுணரும் அறிவிலாராய் மக்கள் தமக்குத் தாமே இழைத்துக்கொள்ளும் இன்னல்கள் மிகப் பல ஆதலினாலேயே

"அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது"

எனத் தெய்வப் பாவலர் கூறியருளினார் போலும். எனவே மக்கள் நலனெய்தவேண்டுமாயின் ஒவ்வொரு சொல்லின் காரணத்தையு முணர்ந்து அதன்படி நடத்தல் வேண்டும். இற்றை ஞான்று, பதார்த்தம், பலகாரம் என்னும் இவ்விரு சொற்களின் பொருள்களும் ஒவ்வொருவருக்கும் தெரியவேண்டியது மிகவும் அவசியமாகும். பொது மக்கள் இவற்றின் பொருளை உணர்ந்து அதன்படி ஒழுகுவார்களாக.

குறிப்பு:—இக்கட்டுரையைப் படித்து மூளைக் கலக்கமுற்றோர் ஒரு வேளை வெண்டைக்காயைப் பதார்த்தமாகக்கொண்டுண்ணின், நலனெய்தப் பெறுவரென மருத்துவன் தாமோதரனார் கருதுகின்றார்.

# விநோத விளம்பரங்கள்

[R. வீரபத்திரன், காஞ்சீபுரம்]

நான் ஒரு பத்திரிகைப் பிரியன். மாதவெளியீடுகள், மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகைகள், வாரப் பதிப்புகள், தினசரிகள் முதலிய பலவிதமான பத்திரிகைகள் என் படிப்பறையின் மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும். அப்பத்திரிகைகளை ஆதிமுதல் அந்தம் வரையில் விடாமல் வாசிப்பது என்றால் இயலாத காரியம். ஆனால் அவ்வளவு பத்திரிகைகள் வரவழைப்பது எதற்கு என்று நீங்கள் கேட்கலாம். அதைத்தான் நானும் கூறப்போகிறேன்.

நான் அவ்வளவு பத்திரிகைகள் வரவழைப்பதற்குக் காரணங்கள் முக்கியமாய் இரண்டுள்ளன. அப்பத்திரிகைகள் என் மேஜையின் மீது வைக்கப்பட்டிருப்பதைக் காண்பதே எனக்குப் பேரானந்தமாயிருக்கும். இரண்டாவதாக அப்பத்திரிகைகளிலுள்ள விளம்பரங்கள் என் மனதிற்கு ஒருவித உற்சாகத்தையும் குதுகலத்தையும் அளிக்கும். உங்களில் சிலர் அரசியல் குறிப்புகளை வாசிக்க ஆவலுடையவர்களாயிருப்பீர்கள். சிலர் தேசீய நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள விரும்புவீர்கள். பெரும்பாலோர் விகடத் துணுக்குகளைப் படிக்க இஷ்டப்படுவீர்கள். மற்றும் சிலர் மார்க்கட் நிலவரம், மாகாண விஷயங்களை வாசிக்க அபிப்பிராயப்படுவீர்கள். ஆனால் நான் முதன் முதலில் விளம்பரங்களைத்தான் வாசிப்பேன். நான் பத்திரிகையிலுள்ள விஷயங்களைப் படிக்காவிட்டாலும், அவைகளிலுள்ள விளம்பரங்களிலொன்றைக்கூட வாசிக்காமல் விடுவதில்லை. ஒவ்வொரு விளம்பரமும் என் மனதிற்கு ஒருவகைக் களிப்பை உண்டாக்கும்.

விளம்பர வேட்டையாடுவது பொழுது போக்குக்கு ஏற்ற வேலை என்பது நீங்கள் அதன் இன்பத்தை அனுபவித்தீர்களானால் உங்களுக்கு நன்கு புலப்படும். அதன் பின்பு, உங்கள் உள்ளத்தை, ஊசி முனையைக் காந்தம் இழுப்பதுபோல் விளம்பரங்கள் வசீகரித்துக் கொள்ளும்.

பலவகையான பத்திரிகைகளிலுள்ள விளம்பரங்களைக் கத்திரித்து அவைகளைச் சேமித்து வைப்பதற்காக என்னிடத்தில் ஒரு ஒட்டுப் புத்தகம் உளது. அதில் நான் இதுவரையில் வாசித்த விளம்பரங்களில் சுவாரஸியமானவைகள் யாவும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்விளம்பரங்கள் அப்புத்தகத்தில் இருந்தபோதிலும், என் மனதிலும் அவைகள் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கின்றன. நீங்கள் அப்புத்தகத்தைப் பார்ப்பீர்களானால் உங்களுக்கு ஒருவித நகைப்பும் உற்சாகமும் ஏற்படுவது திண்ணம். நீங்கள் பார்க்க முடியாததால் அவைகளில் சிலவற்றை ஈண்டு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.



விளம்பரங்களில் அநேகம் மருந்து விளம்பரங்களே. அவைகளில் மாதிரிக்கு இங்கு ஒன்றைக் குறிப்பிடுகிறேன்.

* * *

“நீ..........பீடிக்கப்பட்டிருக்கிறாயா? நீ உபயோகித்த மருந்துகளினால் ஒன்றும் குணம் ஏற்படவில்லையா? உன் வியாதியைத் தீர்க்க முடியாதென்று வைத்திய நிபுணர்களால் கைவிடப்பட்டாயா? அப்படியானால் எங்கள் ஒரு புட்டி..........கட்டாயம் குணப்படுத்தும். வாங்கி அனுபவியுங்கள். ஒரு புட்டி விலை ரூ. 2. 3 புட்டிகள் (மொத்தமாய் வாங்கினால்) ரூ. 5.

இந்த விளம்பரம் ஒருவிதக் களிப்பை யூட்டுகின்றது. ஒரு புட்டி மருந்து அப்பிணியைக் கட்டாயம் போக்குமானால், மூன்று புட்டிகள் ஏன் வாங்கவேண்டும்?

இன்னும் சில தெய்வீக மருந்து விளம்பரங்கள் இருக்கின்றன. அவைகள், தாங்கள் வைதீகர்கள் என்று கனவுகாணும் மருந்து வியாபாரிகளால் விற்கப்படுகின்றன. மற்றும் சில, தாங்கள் சந்நியாசிகள் என்று சொல்லிக்கொள்ளும் சாமியார்களால் விற்கப்படுகின்றன. இவ்வகை விளம்பரங்கள் சொல்வதை நாம் நம்புவதானால், இந்த மருந்துகள் தீராப் பிணிகளையும் தீர்த்துவிடுமாம். மலடிகளுக்கும் மக்கட்பேறு வழங்குமாம். என்னே இவ்வுலகப் போக்கு!

* * *

எதிர்கால பலன்களைச் சொல்லும் சில சோதிட விளம்பரங்கள், மாந்திரீக கவச விளம்பரங்கள் முதலியவைகளும் கவனிக்கத் தக்கவையாகும். இந்த கவசத்தை உன் மனைவி தரித்துக்கொண்டால் நல்ல தைரியமுள்ள ஒரு குழந்தை பிறக்கும். இந்த தாயத்தை (Talisman) நீ தரித்துக்கொண்டால் உன் மனைவி உன்னை விட்டுப்பிரிய விரும்பாள். அந்த மாந்திரீக கவசத்தை அணிந்துகொண்டால் உன் பிணிகளையெல்லாம் போக்குவதன்றி உனது வெற்றியடைய முடியாத வியாஜ்யங்களனைத்தையும் வெற்றிபெறச் செய்யும். இன்னும் இவ்வாறு பல விளம்பரங்கள் உள.

ஊன்றி கவனிப்பின் கொஞ்சமாவது பொது அறிவுடையோர் இவைகளை நம்புவார்களா என்பதை நினைக்க எனக்குப் பெரும் வியப்பு உண்டாகின்றது. “இந்த கவசத்தை நீ அணிந்தால் உனது பரீட்சையில் வெற்றி பெறுவாய்” என்று ஒருவர் விளம்பரம் செய்கிறார். அஃது உண்மையாயின் வாசக புத்தகங்களும், குறிப்புப் புத்தகங்களும் வைத்திருப்பதின் பயன் யாது? மாணவன் அந்த கவசத்தைத் தரித்துக்கொள்ள வேண்டியதும், பிறகு பரீட்சையின் முடிவைத் தெரிந்துகொள்ள வேண்டியதுந்தானே? அவர்கள் “பிரைவேட் டியூஷன்” வைத்துக்கொள்ள வேண்டியது எதற்கு? அவர்களுடைய பெற்றோர்கள் புத்தகத்திற்கும், டியூஷனுக்கும் அனாவசியமாக ஏன் செலவு செய்யவேண்டும்? “இந்தக் கவசத்தைப் பூண்டால் நீ கட்டாயம் உயர்ந்த சம்பளமுடைய ஒரு வேலையைப் பெறுவாய்” என்று ஒரு விளம்பரக்காரர் கூறுகிறார். இஃது நிஜமானால், அந்த விளம்பரக்

காரர் அந்தக் கவசம் விற்கும் தொழிலை நீக்கி, நல்ல உயர்ந்த உத்தியோகத்தை ஏன் அடையக்கூடாது?

நிற்க, வெற்றியடைய முடியாத வியாஜ்யங்களை, வெற்றியடையச் செய்யும் அதே கவசங்களை வாதி, பிரதிவாதி ஆகிய இரண்டு பேரும் தரித்துக்கொண்டால் அந்த வியாஜ்யம் எப்படி முடிவடையும். ஒரு வேளை அவ்விருவர்களுக்கும் வெற்றி ஏற்படுமாறு அந்தக் கவசம் செய்யுமோ என்பதைத் தெரிந்துகொள்ள நான் அதிக ஆவலுடையவனா யிருக்கின்றேன்.

*   *   *

ஒரு விளம்பரம் என்னை யறியாமல் எனக்குச் சிரிப்பு ஏற்படும் படிச் செய்துவிட்டது. "குதிரைப் பந்தயத்தில் வெற்றி யடையும் வழி" என்ற இந்த புத்தகத்தை வாங்கினால் நீங்கள் நிச்சயமாய் வெற்றி யடைவீர்கள் என்று அதில் இருந்தது. அது மெய்யாகில், ஏன் அவர் இந்தப் புத்தக வேலையை விட்டுவிட்டு குதிரைப் பந்தயங்களிற் சேர்ந்து மிகுந்த ஊதியத்தை யடையக்கூடாது? மற்றொருவர், இந்தப் "பிழைக்கும் வழி" என்ற புத்தகத்தை வாங்கி வாசித்தால் மாதம் ரூ. 500 முதல் ரூ. 1000 வரையில் சம்பாதிக்கலாம் என்று விளம்பரம் செய்கிறார். வாசகர்களே! அவர் சொல்லும் கூற்று உண்மையாகில், அவர் இந்தத் தொழிலைவிட்டு நல்ல சம்பாதனையடைய மாட்டாரா?

*   *   *

மணமகன் தேவை, மணமகள் தேவை என்ற விளம்பரங்களும் கவனிக்கத்தக்கவையே. ஒருவர் தன் யோக்கியதைகள் (Qualifications) எல்லாவற்றையும் வெளியிட்ட பிறகு "என்னை மணந்து கொள்ள விரும்புவோர் தங்கள் போட்டோ படங்களை யனுப்பவும்" என்கிறார். யாரொருவர் தனக்கு வியாபாரம் செய்வதற்குப் பொருள் கொடுப்பாரோ அவரின் புதல்வியை மணம் செய்துகொள்கிறேன் என்கிறார் மற்றொருவர், நேயர்களே! இவர் கலியாண மூலமாக வியாபாரம் ஆரம்பிக்கலாமென யோசிக்கிறார். முடியுமானால் இவர் பெண்ணை மணந்து கொள்வதைவிட பணத்தையே மணந்து கொள்வார் போலும்.

பணவாசை பிடித்த ஒரு வாலிபர், "மணமகளின் யோக்யதைகள் எப்படி யிருந்தாலும் சரி, சீதனமாக திரண்ட செல்வம் கொடுத்தால் மணந்து கொள்கிறேன்" என்கிறார். இது ஒரு வெட்கமான காரியமல்லவா? ஆதலால் தன் பெயரைத் தெரிவிக்காமல் நெ......C/o...... (பத்திரிகையின் பெயர்) என்று பத்திரிகையில் விளம்பரம் செய்கிறார்.

இன்னும் அநேக விநோத விளம்பரங்களுள்ளன. எல்லாவற்றையும் எழுத மித்திரன் இடந்தரமாட்டான். இனி பத்திரிகைகளை வாங்கினால் முதலில் விளம்பரங்களைப் படித்துப் பாருங்கள். எவ்வளவு விநோதமும், புரட்டும் உங்கள் மூளைக்கு விருந்து அளிக்கிறதென்பதை அதன் பின்பு நீங்களே தெரிந்து கொள்ளுவீர்கள்.

---

# நமது தபால் பெட்டி

கேள்வி:—தென் அமெரிக்காவில் 'பிரிட்டிஷ் கயானா' போன்ற இடங்களில் நமது சமூகத்தவர்க ளிருக்கின்றனரென சென்ற தைத் திங்கள் வெளியீட்டில் குறிப்பிட் டிருக்கின்றீர்கள். அப்படியாயினவர்கள் எங்கிருந்து எவ்வாறு போய் குடியேறினர்? அங்கே அவர்கள் நிலைத்திருக்கின்றனரா? அவர்களையும் மாதந்தோறும் நம்குலச் செல்வனாகிய மித்திரன் தரிசித்து வருகிறானா? அவர்களுக்குள்ளும் கல்வி கேள்விகளிற் சிறந்த கவிஞர்களுண்டா?

—S. S. கந்தையா, காவேட்டி

பதில்:—பிரிட்டிஷ் கயானாவில் வசிக்கும் செங்குந்தர்களனைவரும் இந்தியர்களே. செங்கற்பட்டு, இராமநாதபுரம், தஞ்சை முதலிய ஜில்லாக்களிலிருந்து தொழில், வர்த்தகம், உத்தியோகம் ஆகியவைகளை நாடி அநேக ஆண்டுகளுக்கு முன்பே அங்கு சென்றவர்கள். அநேகமாய் எல்லாம் நிலைத்துவிட்ட குடும்பங்களே. வெளிநாடுகளுக்குச் சென்றவர்களுக்கே பொதுவாக சமூகப்பற்றும், தாய்நாட்டுப் பற்றும் மிக அதிகமாக இருக்கிறது. இந்திய நாட்டையும், தமது சமூகத்தையும், சுற்றத்தார்களையும் அவர்கள் மறப்பதில்லை. இயன்றவரை உதவிசெய்யும் இயல்பினரா யிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் கயானாவிலுள்ள செங்குந்தர்களையும் மித்திரன் தரிசித்து வருகிறான். அவர்களும் அவனிடம் மிக்க அன்பு பாராட்டுகிறார்கள்.

உயர்தரக் கல்வி பயின்றவர்கள் அங்கு ஒருவரும் இல்லையென்றே தெரிகிறது.

*   *   *

கேள்வி:—செங்குந்த சமூகப் பெண்மணிகளுள் பாடசாலை ஆசிரியைகளாக இருப்பவர்கள் யாவர்?

—S. ஆவுடையம்மாள், சங்கான்கோயில்

பதில்:—நமக்குத் தெரிந்த வரையில் எழெட்டு பெண்களே ஆசிரியைகளாக இருக்கிறார்கள். அவர்களும் ஆரம்ப பாடசாலைகளிலேயே இருக்கின்றனர். உயர்தரப் பாடசாலையில் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. சென்னை, செங்கற்பட்டு, சேலம் ஆகிய ஜில்லாக்களில் இவர்கள் ஆசிரியத்தொழில் புரிகிறார்கள்.

*   *   *

கேள்வி:—செங்குந்த மித்திரனைப் போன்று நமது சமூக முன்னேற்றங் கருதி வேறு எதாவது பத்திரிகை வெளி வருகின்றதா? இதற்கு முந்தி எப்போதாவது வெளிவந்து நிறுத்தப்பட்டிருக்கிறதா?

—S. M. திருவுடையா முதலியார், சங்கான்கோயில்

பதில்:—குல முன்னேற்றத்தில் தமக்குள்ள அளவு கடந்த ஆர்வத்தினால், முன்னேற்ற விஷயத்தில் பல பத்திரிகைகள் அவசியம் எனக் கருதி நமது நண்பர் இக்கேள்வியைக் கேட்கிறார். தற்போது நமது சமூக நலனுக்காகத் தோன்றி நடைபெறும் பத்திரிகை 'செங்குந்த மித்திரன்' ஒன்றேயாகும். உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ வேறு பத்திரிகை வெளிவரவில்லை. வெளிவர வேண்டிய அவசியமுமில்லை. ஒன்றே ஒழுங்காய் நடந்துவந்தால் போதுமானது. பல பத்திரிகைகள் துவங்கினால் ஒன்றினுக்கும் சரியான ஆதரவு ஏற்படாமல் எல்லாவற்றையுமே நிறுத்த நேரும். வன்னிய சமூக அபிமானிகளால் அந்த சமூக முன்னேற்றத்தின் பொருட்டு நடத்தப்பட்ட 'வன்னிய குல மித்திரன்' 'க்ஷத்திரியன்' ஆகியவை, தொடங்கிய சில ஆண்டுகளிலேயே ஆதரவின்றி நிறுத்தப்பட நேர்ந்ததே இதற்குப் போதிய உதாரணமாகும்.

பொதுவாகவே, தென்னிந்தியர்கள் ஆரம்ப சூரத்துவம் உடையவர்கள். எந்தக் காரியத்தையும் தொடக்கத்தில் தடபுடலாகச் செய்து இரண்டொரு மாதங்களிலேயே அது இருக்குமிடந் தெரியாதவாறு குழி தோண்டிப் புதைத்துவிடும் சுபாவமுடையவர்கள். 'ஒன்றைப் பிடி, உறுதியாய்ப் பிடி' என்பது தமிழ் மொழியேயாயினும், உறுதியாய் நிற்குங் குணம் தமிழரிடம் அருகிவிட்டது. இக்காரணத்தாலேயே ஒரே ஆசாமி இன்று காங்கிரஸ் வாதி, நாளை ஜஸ்டிஸ் கட்சியினன், அடுத்த நாள் மிதவாதி, மறுநாள் சுயமரியாதைக்காரன் என மாறிக்கொண்டே செல்கிறான். இத்தகைய உறுதியற்ற மக்களின் மனோ நிலையினாலேயே ஒவ்வொரு நாளும் பல புதுப் பத்திரிகைகள் சென்னையில் தோன்றி மின்னென மறைந்து மாய்கின்றன. நமது மித்திரனும் ஆரம்பத்தில் பெற்றிருந்த ஆதரவை இன்று பெறவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

அன்று இருந்த ஆதரவு இன்று இருக்குமானால்—எழு லட்சம் செங்குந்தர்களில் நூற்றுக்கொருவர் ஆதரிக்க உறுதி கொள்வார்களானால், அடுத்த ஆண்டிலேயே மாதம் இரு தடவையாக, சிறந்த முறையில் வெளிவர மிததிரன் காத்திருக்கின்றான். எனவே, இவ்வொன்றினையே உறுதியுடன் ஆதரித்தால் போதுமானது. வேறு பத்திரிகை அவசியமில்லை. வேறு நடைபெறவுமில்லை.

ஆனால், ஸ்ரீநாகலிங்க முனிவரவர்களால் பல ஆண்டுகளுக்கு முன் 'செங்குந்தன்' என்ற பெயருடன் ஒரு பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டதுண்டு. ஆதரவு அதிகமின்மையால் வெகு விரைவில் அது மறைந்து போக நேர்ந்தது. அவரே மீண்டும் 'செங்குந்த மித்திர'னைத் துவக்கினார். அம்மித்திரனே, இன்று, சென்னை 'தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினரால் ஏந்திக் கொள்ளப்பெற்று மாதந்தோறும் அலங்கரித்து அனுப்பப் பெறுகின்ற நமது மித்திரனாகும்.

---

# அதிசயம், அற்புதம், ஆச்சரியம்

## நாய் ஓட்டல்

பாரிசில் நாய்களுக்கெனத் தனியே ஓட்டல்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இவற்றில் நாய்களுக்கேற்ற உணவும், ரொட்டியும், மாமிசங்களும் தயாரிக்கப்படுகின்றனவாம்.

## 15 வருடம் சாப்பிடாத பெண்

ஸ்பெயினில் அமாலியா பிராண்டா என்பவள் 15 வருடகாலமாக ஆகாரம் சாப்பிடாமலே உயிர் வாழ்ந்து வருகிறாள். டாக்டர்கள் அவளைத் தனியே வைத்துப் பரிசோதித்துப் பார்த்தனர். ஆகாரம் சாப்பிடாதது உண்மையென்றும், அவ்வாறு சாப்பிடாததால் உற்சாகக் குறைவின்றி எல்லா வேலைகளையும் செய்து வருவதின் காரணம் என்னவென்றும் விளங்காமல் ஆச்சரியப் படுகிறார்கள்.

## மணலில் ஓடும் மோட்டார்

மணிக்கு 300 மைல் வேகத்தில் மணலில் போகக்கூடிய மோட்டார் ஒன்று அமெரிக்காவில் செய்யப்பட்டிருக்கிறது.

## மணல் மழை

சிக்காகோவில் 12-5-34ல் பெரிய மேகம் எழும்பி 5000 டன் மணலைப் பொழிந்தது. அதனால் அநேக உயிர்கள் இறந்துவிட்டன. விவசாயிகளுக்கும் அதனால் பெருத்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

## ஆகாச ரயில்

ரஷ்யாவில் 'ஆகாச ரயில்' தயாரித்திருக்கிறார்கள். அதாவது ஒரு விமானமானது என்ஜின் இல்லாத மற்ற மூன்று விமானங்களை ஆகாயத்தில் இழுத்துச் செல்லும். ஒவ்வொன்றிலும் ஒரு விமானி இருக்கிறார். வேண்டிய இடத்தில் விமானத்தைப் பிரித்துத் தனியே கீழே இறக்கிக் கொள்ளலாம். இதனால் சீக்கிரமாகவும் சிக்கனமாகவும் போக்கு வரத்து நடைபெறும்.

## ஆடவர்களைத் தின்னும் ராட்சசிகள்

ஆப்பிரிக்காவின் சமீபத்திலுள்ள ஒரு சிறு தீவில் பெண்கள் ஏராளமாய் வசிக்கிறார்கள். ஆடவர்களே அங்கு கிடையாது. அங்குள்ள பெண்கள் ஆடவர்களை வெறுப்பதோடு எவரேனும் ஆடவர் தவறி அங்கு வந்துவிட்டால் அவர்களை வேட்டையாடிக் கொன்று தின்று விடுகிறார்களாம்.

## பெண் சாயலே கூடாது

ஆப்பிரிக்காத் தீவுப் பெண்கள் ஆடவர்களை வெறுப்பதுபோல், கிரீக் தேசத்திலுள்ள கத்தோலிக்க சந்நியாசிகள் பெண்களை வெறுக்கிறார்கள். கிரீஸ் தேசத்தில் அதோஸ் மலைப்பிரதேசம் ஒன்று உண்டு. அது கத்தோலிக்க கிருஸ்தவர்களுக்கும் பாதிரிகளுக்கும் சொந்தமான குடியரசுப் பிரதேசம். அங்குள்ள 20 சந்நியாசி மடங்-

களில் 9000-க்கு மேற்பட்ட சந்நியாசிகள் வசிக்கிறார்கள். இவர்கள் பெண்கள் முகத்தில் விழிப்பதே இல்லை. இவர்களது பிரதேசத்தில் எந்தப் பெண்களும் வரககூடாது. பெண் நாய், பூனை, குதிரை முதலிய மிருகங்களையும் இவர்கள் அனுமதிப்பதில்லையாம்.

### பல நிற வியர்வை

அபூர்வ நோய் ஒன்றை ஒரு டாக்டர் கண்டுபிடித்திருக்கிறார். அந்த நோய் ஒருவனுக்கு ஏற்பட்டால் அவனுடைய வியர்வை நோயின் தன்மைக்கு ஏற்ப பச்சை, நீலம், வைலட், கருப்பு அல்லது வெள்ளை நிறமாக வெளிவருமாம். இதுவும் கலியுக அதிசயங்களில் ஒன்றே.

### பூனையைக் கொல்லும் எலிகள்

தென் ஆப்பிரிக்காவில், வடகிழக்கு மூலையில், பீகான் ஜில்லா முழுதும் ஒருவகை எலிகள் புகுந்து பயிரை அழித்து வருகின்றன. இவை சாதாரண எலிகளைவிட மிகப் பெரியவை. பூனைகளையும் இதர கால்நடைகளையும் கடித்துக் கொன்று விடுகின்றன. அவைகள் மனிதர்கள் தூங்கும் சமயத்தில் கால் கை விரல்களையுந் துண்டித்து விடுகின்றனவாம். இவைகளைக் கொல்ல வகையறியாமல் சுதேசி அரசர்கள் தென்னாப்பிரிக்கா சர்க்காருக்கு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்களாம்.

### விநாடிக்கு 8000 புகைப்படம்

ஜெர்மனியில் ஒருவர் புதிதாகக் கண்டு பிடித்துள்ள சினிமாப் படம் பிடிக்கும் கருவியினால் ஒரு விநாடிக்கு 8000 புகைப்படங்கள் எடுக்கக்கூடுமாம்.

### வாயினுள் அடங்கும் போட்டோ காமிரா

வாயினுள் போட்டு விழுங்கிவிடத் தக்க அவ்வளவு சிறிதாக போட்டோ காமிரா ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது வைத்தியத் தொழிலுக்கு மிகவும் உபயோகமுள்ளது. இதைக் கொண்டு இரைப்பையின் உட்புறத் தோற்றங்களைக் காட்டும் 16 படங்களை ஒரே சமயத்தில் எடுக்கக்கூடும்.

### காதலை அறியும் விநோதக் கருவி

பெல்கிராடிலுள்ள ஒரு விஞ்ஞான சாஸ்திரி காதலை அறிவிக்கும் கருவியொன்றைக் கண்டு பிடித்துள்ளார். அங்கு இக் கருவியால் விவாகம் செய்து கொள்ள விரும்பும் இரு காதலர்களையும் முன்னர் சோதித்து, காதல் சமமாக இருந்தால் மட்டும் கல்யாணம் செய்து கொள்ள அனுமதிக்கிறார்களாம்.

### தாலிகட்ட விறகுக் கட்டு

பஸிபிக் சமுத்திரத்தில் பார்மோஸா என்ற தீவில், ஒரு ஆடவன் ஒரு பெண்ணை விவாகம் செய்துகொள்ள விரும்பினால், அவன் ஒரு விறகுக்கட்டை கொண்டுபோய் பெண்வீட்டின் வாசலில் வைத்து விட்டு வரவேண்டும். அந்த விறகுக் கட்டை வீட்டுக்குள் எடுத்துச் சென்றால் கல்யாணத்திற்கு சம்மதித்ததாக அர்த்தம். அப்படியானால் உடனே அந்தப் பிள்ளைக்கு அழைப்பு ஏற்பட்டு விருந்தும் நடைபெறுமாம்.

## கதம்ப விநியோகம்

பிரிட்டனில் 30 லட்சம் நாய்களும், அமெரிக்காவில் 70 லட்சம் நாய்களும் வளர்க்கப்படுகின்றன.

---

பிரிட்டனில் நாய்களை வளர்ப்பதற்கும், காட்சி நடத்துவதற்குமென சுமார் 600 நாய் சங்கங்கள் இருக்கின்றனவாம்.

---

குயின்ஸ்லண்டில் ஒரு கோழி 152 தினங்களில் 152 முட்டைகள் இட்டதாம்.

---

லெனின் கிராட் என்ற நகரிலுள்ள புத்தகசாலை ஒன்றில் 48 லட்சம் புத்தகங்கள் உள்ளனவாம்.

---

இரு எலிகள் மூலம் ஒரு வருஷத்தில் 100 எலிகள் உற்பத்தியாகின்றனவாம்.

---

கருமயிர் நிறைந்த அழகுள்ள பெண்ணின் தலைமயிர் 1,40,000 முதல் 1,60,000 வரை இருக்குமாம்.

---

உலகிலேயே மிகப் பெரிய முத்து இப்போது டில்லியிலிருக்கிறது. இதன் நீளம் 2 அங்குலம். சுற்றளவு 4 அங்குலம். ஆதியில் இது பிரெஞ்சு ராணிக்குச் சொந்தமானது.

---

ரப்பர் ஆடைகள் தரித்தவர்கள் தேகத்தில் விஷம் ஏறுவது இல்லையாம்.

---

வார்சாவில் ஒரே நாளில் 3000-க்கு மேற்பட்ட மோட்டார் டிரைவர்கள் வேகமாக ஓட்டியதற்காகக் கைது செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டனராம்.

---

உலகத்திலுள்ள ஜந்துக்களிலெல்லாம் மிகப் பெரியது கிரீன் லண்டு திமிங்கிலம். அது சராசரி 100 டன் எடையுள்ளதாம்.

---

**மித்திரன் வளர்ச்சியுற விரும்புகிறீர்களா ?**
**இன்றே ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்து அனுப்புங்கள்**

# கபிலாசலக் குமரேசர் பிள்ளைத்தமிழ்

[போ. முருக முதலியார், மோகனூர்.]

ஒரு மொழியின் சிறப்பினை அம்மொழிக்கு அணிசெய்து நிற்கும் நூல்களால் அறிந்து கொள்ளலாம். ஆங்கிலமொழி இக்காலத்துப் பெருகிப் பரவி வருவதற்குக் காரணம், அம்மொழி தன்பால் எவ்வகை நூல்களையும் பெருக்கிக்கொண்டு போவதுதான். வடமொழி தன்பால் பல் வேறுவகை நூற்றொகுதிகளை உடையதாக இருத்தல்பற்றி அது தேவபாஷை என்னும் சிறப்புற்று இலங்கி நின்றது. தமிழ்மொழி மிகப் பழைய தொன்றாதலின், பல பெருநூல்கள் அதன் உறுப்புக்களாகத் திகழ்ந்தனவென்பது மறுக்கொணாத தொன்றாம். என்றும் இளமைபூண்டு, நல்வாழ்விலும் அல்வாழ்விலும் நனிமலர்ந்து, இற்றைநாள்காறும் உயிர்க்கினிய பொருளை உணர்த்துந் தெய்வத் தீஞ்சொல்லாயிருத்தலின் நந்தமிழ்மொழி கன்னித் தமிழாகத் திகழ்கின்றது. அகத்தியர் முதலிய பெருமுனிவர்களும், கம்பர் முதலிய பெருங்கவிஞர்களும் கருணை மிகுதியின் யாத்த நூல்கள் பல தண்டமிழ் மொழியில் உள. தமிழ் நாட்டார் இயற்றிய தவக்குறைவினால் அவற்றுட் பல அழிந்தொழிந்தன. எஞ்சியவற்றுட் சிலவே இன்று யாம் பெறுதற்குரியனவாக விளங்குகின்றன. இங்ஙனம் தண்டமிழ்த் தாய், தனது பழங் கலன்களுட் பலவற்றை மறைத்துக் கொள்ளினும், அவ்வக் காலத்துப் பெற்றுப் புறந்தந்த புலவர்களால் காலத்துக்கேற்ற புதுச்சுவை கனினும் புத்தணிகளை அணிந்து கொள்கின்றனள். அவ்வகையில் கால அடைவே எழுந்த புராணக் காப்பியங்களும் பிரபந்தங்களும் தமிழ் மகளை அணிசெய்து விளங்குகின்றன.

அப்பிரபந்தங்கள் 96 வகைப்படும். அவற்றுள் பிள்ளைத் தமிழென்பதும் ஒன்று. தலைவனைப் பிள்ளையாக நினைந்து, அப்பிள்ளைமைக் கேற்பப் பத்துப் பருவங்களில் அன்னையரும் செவிலியரும் பிறரும் கூறுவதாக நூறு பாடல்கள் அமைந்து விளங்குவது அது. இன்று ஆராய்ச்சி வாயிலாகத் தெரிந்த பிள்ளைத் தமிழ்களுள், நம் செங்குந்த குலத்தை வாழ்விக்க வந்த பெருமானும், கவிச்சக்கரவர்த்தியும் ஆகிய ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழே பழமை யுடையது. தமிழும் வடமொழியும், பவளமும் மணியுமென இடை விரவி யொளிர, முடிமன்னரும் வியந்தடிபணியக் கவிகலந்தெரிக்கும்



அப்புலவர் பெருமான் ஒரு பிள்ளைத்தமிழ் இயற்றிய பெற்றி, அவ்வகைப் பிரபந்தங்களுக்கு ஒரு தனிச்சிறப்பை அளித்தது. பின்னர் முகிழ்த்த பிள்ளைத் தமிழ்களுள் குமரகுருபர முனிவர் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழையும், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழையும் தமிழுலகு பெரிதும் போற்றி வருகின்றது. பகழிக்கூத்தர் தொடுத்த திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழும், மார்க்கசகாய தேவரது திரிவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழும், திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் யாத்த சேக்கிழார் பிள்ளைத்தமிழும் பிறவும் பிள்ளைத்தமிழ் வரிசைகளில் முன்னணியில் நின்றிலங்குகின்றன. இன்னும், தத்தம் அன்பிற்கும் செய்ந்நன்றி யறிவிற்கும் குறியீடாகப் பல புலவர்கள் புறப்படுத்திய கடவுளர் பிள்ளைத்தமிழ்களும் அறவாணர் பிள்ளைத்தமிழ்களும் பல.

மேற்றலைப்பிற் குறித்துள்ள கபிலாசலக் குமரேசர் பிள்ளைத்தமிழ் என்பது, தமிழ்மொழியில் இதுகாறும் புனையப்பெற்ற பிள்ளைத்தமிழ் மாலைகளில் ஒரு நாண்மலராகும். இதனை இயற்றியவர், திருச்சி ஜில்லா முசிரி தாலூகாவைச் சார்ந்த உன்னியூரில் வாழ்ந்துவரும் ஸ்ரீமான் முருகேச முதலியார் என்பார். செங்குந்த மரபினர். தம்குலக் கடவுளாகிய முருகக் கடவுளை அல்லும் பகலும் வழிபட்டு உருகும் நெஞ்சினர். தமிழ்மொழியின் சுவை நுகர்ந்து அப்பெருமான் திருவடிகளைப் பல பாமாலை கொண்டு புனைகின்ற இயல்புடையார். இப்பொழுது உன்னியூரிலேயே இருந்து தம் குலத்தொழிலை இயற்றி வருகின்றனர்

இப்புதுக் கவிஞர் சூட்டிய பாமாலை புனைந்த பெருமானது தலம் கபிலைமலை அல்லது கபிலமலை என வழங்கப்படுவது. அது, சேலம் ஜில்லா நாமக்கல் தாலூகாவைச் சேர்ந்த ஒரு சிற்றூர். அவ்வூர்க்கண் ஓரழகிய குன்றத்தில் இயற்கையினமைந்த குகை யொன்றுள் குகப்பெருமான் திருக்கோயில் கொண்டிலங்குகின்றான். அத்தலத்திற்கு ஒரு பழைய வடமொழிப்புராணம் உண்டு. ஸ்ரீமான் முருகேச முதலியாரவர்கள் அத்தலத்திற்குப் பன்முறை சென்று வழிபட்டு அங்கெழுந்தருளியுள்ள மூர்த்தியின்பால் ஆராக் காத லமைந்தாராகி "அவன் இன்னருள் குறிக்கொள் அவா"வினாலே (அவை யடக்கம்) இந்நூலை இயற்றினார். இஃது இன்னும் அச்சியற்றப் பெற்றிலது.

இந்நூல் இப்பொழுது வெளிவராமையின், தமிழ் மக்களும் அவருள்ளும் நம் செங்குந்த மரபினரும் இதன்பாலுள்ள செஞ்சுவையை அறியவொல்லா நிலையிலுளர். இந்நூல் பொருளுதவி

முதலிய பெருந்துணைகளை அவாவி நிற்றலின், இதனைப் பெற்ற தந்தை, இதனை வெளிவிட இயலா நிலையி லுள்ளா ரென்பதை அறிந்து, 'முற்றும் மலருங்கால் மலர்க; இதுபோழ்து ஸ்தாலீ புலாக நியாயமாக இந்நூற்கண் மலிந்த சுவைப்பிழம்பில் யாமறிந்த முறையிற் சிறிது வெளியிடுவேம்' என உன்னி இச்சிறு கட்டுரையை எழுதலாயினேன்.

நம் கவிஞர், இந்நாலில் இடையிடையே பல சந்தக்கவிகளையும், சிலேடை முதலிய அணிகளையும் விரவ வைத்துள்ளார். சில பகுதிகள் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப் பெற்றுள்ளன.

முதற்கண் விநாயக வணக்கம் தொடங்குவதைக் காண்மின்

மதிகதி ரிவைநித முலவுறு பொதியிலின்
மலிபுக ழொடுபல வளமிக்கு மோனர் நான்
மறையவ ருயர்தவர் பணிதவ வலிமிகு
மலைமுனி யகமுகை மலர்வித்து மாறன்மார்
கதிபெற நிறுவிய முதுதமி ழவையொளிர்
கவிஞரை யருள்கொடு கனிவித்த வேல்வலோன்
கனிவுறு முமைமகன் மலருறை கலைமகள்
கணவனை யொருபகல் சிறைவைத்த தீரன்மா
சதிபதி மருகனோர் கபிலைம லையின்வளர்
தலைவனென் மனதிடை யருண்முற்றி மேவினன்
தமிழ்தழை தரவொரு கரகமி லகுபுன
றனையிட றிடுகொடி வடிவுற்ற நோன்மையான்
பதிதனி லமர்புரி கவுரவர் சரிதையொர்
பருமலை யெழுதிடும் வளமிக்க சீருளான்
பானிவ ரியாத விருசொடி தரவருள்
பவனடி பணிகுவ லகநட்ப தாகவே.

இதன்கண் நம் புலவர், விநாயகர் விக்கினத்தை ஆக்குதற்கும் நீக்குதற்கும் உரியா ரென்பதனைப் புலப்படுத்தி யிருப்பதைக் காண்க. முருகக்கடவுளுடைய திருப்புகழை யெடுத்தோதப் புகுந்தவர் எழுவாயிலே அவன் தமிழ்ப்புலவர்தமை அருள்கொடு கனிவித்தவன் என்கின்றனர். தமிழ்ப் புலவருக்கு உயரிய சக்திகொடுத்து, நூல்களை 'மலரச் செய்தவன் என்பது பண்டு நிகழ்ந்தது; இன்று இப்புலவரைத்தானும் தன் அருள்

# செங்குந்த யாத்திரைவாசி

(முன் இதழ் 334-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விதமாகப் பலர் தங்கள் தங்கள் அனுபவங்களை, அதாவது சீடனுடைய புத்தக ராக்கில் துண்டு பீடி வைத்துவிட்டுப்போன குருக்களைப் பற்றியும், செங்குந்தர்களுக்கே குருவாக விருந்து அவர்கள் ஆதரவால் ஜீவனஞ் செய்துவந்தும் பிறரிடம் அவர்களைக் கேவலமாகப் பேசித் திரியும் சழக்கர்களாகிய குருமார்களைப் பற்றியும், செங்குந்தரிடத்தில் செங்குந்த ரென்றும், பிறரிடத்தில் வேறினத்தவ ரென்றும் சமயோசிதமாய்ப் பேசித்திரியும் ஆச்சாரியர்களைப் பற்றியும் எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். அவற்றையெல்லாம் ஈண்டு விரித்துரைக்கின் மித்திரன் இடந்தரா னென்றஞ்சி மேற் செல்லுகிறேன்.

'மணி 8 ஆயிற்று, நீங்கள் அனைவரும் இதுவரையில் சொல்லிக் கொண்டு வந்ததன் கருத்துதான் என்ன?' என்று யான் வினவினேன்.

கரும்பாத்தை ஐ:—கருத்தென்ன? நடக்கிற அக்கிரமங்களைச் சொன்னார்கள்.

பழநியப்ப ஐ:—அப்படியல்ல. குருக்கள்மார் நமக்கு வேண்டா மென்பதுதான் கருத்து.

ரங்கப்ப ஐ:—ஆமாம். அப்படியானால் இங்கிருப்பவர்களில் யாராவது வேண்டாமென்று தள்ளிவிடக்கூடிய தைரிய முடையவர்கள் இருக்கிறார்களா?

வெளியூர் வெயிலுகந்த ஐ:—ஆமாம்; தள்ளிவிட்டார்கள் முன்னமே. இப்படி சொல்லிக்கொண்டே போகவேண்டியதுதான். நம்மால் என்னாகும். பெரியவர்கள் ஏற்பாட்டை யாரால் தள்ளமுடியும். அவர்களைவிட நாம் அதிகம் தெரிந்தவர்களா? நரிவாலைக்கொண்டா கடலாழம் பார்ப்பது. கடவுளில்லாமலா பொழுது விடிகிறது பொழுது போகிறது. குருத் துரோகம் செய்தவர்களுக்குத் தண்டனை

---

கொடு கனிவித்தவன் அவனாதலின் தம் அநுபவத்தையே முதல் வைத்தல் சிறப்புற் றமைவதன்றோ. 'என் மனதிடை யருண் முற்றி மேவினன்' என இவரே கூறுதல் இவ்வநுபவத்தைத் தெள்ளத் தெளிக்குதல் காண்க. விநாயகர், கவுரவர் சரிதையாகிய பெருநூலை எழுதி முற்றுவித்தவ ராதலின், இந்நூலையும் முற்றுவிப்பாரென்னும் குறிப்புக்கிடக்கை இக்கவியில் அமைதல் அறிதற்குரியது. (தொடரும்)

என்ன தெரியுமா? அவர்கள் பட்டயங்களைப் படித்துப் பார்த்தால் தெரியும்.

நாகண்ணபூ:—ஆமாங்கோ. ஐயா (என்னைச்சுட்டி) ஊர்லேந்துதா எங்க சாமிகூட வந்தாங்கோ, மூணு மாசத்துக்கு முன்னே. நாங்ககூட தச்சனே அரிசி பருப்பு குடுத்தோம்.

யான்:—உங்கள் சாமி எங்களூரா, அவர் பெயரென்ன?

நாகண்:—பேரா! என்னெ கேட்டா? எனக்கெப்படித் தெரியும். ரொம்ப நல்லவுங்க. ஒங்க ஊர்லேந்து வந்தாபோலதாங் கீது. செவிடி வச்சி என்னென்னமோ படிச்சாங்க எல்லாரியுங் கூட்டிகினு.

யான்:—அவர் ஊர் எது? என் ஊரெது?

நாகண்:—அவுங்க ஊரா? அது எந்த ஊரோ தெரியாது. ஒங்களெ இண்ணிக்கிதா பார்த்தெ. ஒங்க ஊர் எதுலோ சொன்னாதானே தெரியு.

யான்:—சாமியள் சுவடியிலிருந்து என்ன படித்தார்?

நாகண்:—என்னென்னமோ படிச்சாங்க செவிடி வச்சிகினு, அவுங்களுக்கு தச்சனே குடுக்கா போனா அந்த நரகத்துக்குப் போவாங்க இந்த நரகத்துக்குப் போவாங்கண்ணு; வேறொண்ணுமில்லே. சொன்னது நெல்லா ரிந்துதுங்க. அதிலிருந்து நான் தச்சனே குடுத்துட்டேட. நமக்கு ஏ அந்த வம்பெல்லா? இன்னு சொல்ரேங்க.

சாத்தப்பபூ:—அடே நாகா! நீ என்னடா சிவபூஜையில் கரடி புகுந்தாப்போல் வந்து சேர்ந்தாய். சும்மா இரடாபோதும். (என்னைப் பார்த்து) சுவாமிகளே! சொன்னவர்களுக்கே என் சொன்னோமென்றும், அதற்கு என்ன பரிகாரம் சொல்லவேண்டும் என்றும் தெரியாது. யாராவது சொன்னாலும் அவர்கள் புத்தியில் ஏறாது. குறை கூறாமலும் இருக்கமாட்டார்கள். இப்படித்தான் உளறிக் காலத்தைக் கழித்துக்கொண் டிருப்பார்கள். தெளிவிருந்தா லல்லவோ தைரிய முண்டாகும். கல்வி கேள்வி யிருந்தா லல்லவோ தெளிவுண்டாகும். குருக்கள் வந்தால் கடன்பட்டோ, பட்டினி கிடந்தோ, அவர்கள் கேட்பதைக் கொடுத்துவிடுவார்கள். அவர்களால் நன்மையுண்டா தீமையுண்டா வென்று எண்ணியும் பார்க்கமாட்டார்கள். தீமையானால் அதை ஒழிக்கவும் நன்மையானால் அதை விருத்தி செய்யவும் முயலார்கள். என்னைப்போன்ற சிறுவர்கள் இதுபோன்ற விஷயங்களில் ஏதாவது சீர்திருத்தம் செய்ய முன்வந்தால் இந்த கர்நாடகக் கிழங்கள், கலி அதிகரித்துவிட்டது; பெரியோர் சிறியோர் என்ற மதிப்பே கிடையாது. மொட்டைப் பயல்கள் தலைவிரித்தாடுகிறார்கள். பழைய பெரியோர்கள் ஏற்பாடுகளை எல்லாம் தலைகீழாக்க முனைந்து நிற்கிறார்கள். கலியின் கொடுமை இப்படியு மிருக்குமா? என்று பெருங் கூச்சலிட்டு ஊர்கூட்டம் கூட்டி எங்களை ஜாதிப் பிரஷ்டம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். பொது மக்களது ஒழுக்கம், சுகாதாரம், ஒற்றுமை முதலியவற்றிற்காக உழைக்க ஆவல் கொண்டுள்ள எங்களுக்கு இந்தக் கிழங்கள் தடையாய் நிற்கின்றன.



சுயமரியாதை இயக்கம் இவர்களுக்கு அடியோடு பிடிக்கவில்லை. கோயில் வேண்டாம், குளம் வேண்டாம், கண்ணிற்குத் தெரியாத மோக்ஷம் வேண்டாம், கடவுளுக்கும் நமக்கும் மத்தியில் தரகர் வேண்டாம், குருமார்களும் வேண்டாம், அவர் செய்யும் பயனற்ற உபதேசங்களும் வேண்டாம். இவர்கள் மூடமந்திரங்களெல்லாம் வெட்டவெளிச்சமாய் இப்போது அச்சுவாகனமேறி ஊர்ஊராய்ச் சந்துபொந்தெல்லாம் ஆதரிப்பாரின்றி அலைகின்றன. இந்த ஆச்சாரியார்கள் ஏழை மக்களைத் தலைமுறை தலைமுறையாக அடிமைகளாக்கிக் கொள்ளுகிறார்கள். வரும்போதெல்லாம் தக்ஷணை படி கொடுத்தாக வேண்டும். இதைத்தவிர ஏழை மக்களுக்கு ஏதாவது நன்மையுண்டா? சுகாதாரத்திற்குரிய புற ஆசாரங்களையாவது கற்பித்துப் பழக்கத்தில் கொண்டுவரச் செய்கிறார்களா? மன ஒடுக்கத்திற்குரியதும், கடவுள் வழிபாட்டிற் குரியதுமான அக ஆசாரத்தைக் கற்பிக்கிறார்களா? தாங்கள் ஆசாரம் தவறாதிருந்து சீடர்களுக்கு ஆச்சாரம் கற்பிப்பவர்களன்றோ ஆச்சாரியர் எனப்படுவர். தாங்களே ஆச்சாரம் இன்னதென் றறியாது, பொய்யும் புனைமொழியும் பேசி, பாமரர்களை ஏமாற்றி வயிறு வளர்ப்பவர்களா ஆச்சாரியர்கள்? இவர்களை அடியோடு ஒழித்துவிடுவதே நல்லது. எங்கள் சொல் இவர்கள் காதில் நுழையவில்லை. தாங்கள் தற்கால கல்வியும், கொள்கைகளும் உடையவரைப்போல் தோன்றுகிறீர்கள். ஆகையால் தாங்கள் ஒரு முடிவான தீர்மானஞ் சொல்லுங்கள், தங்கள் தீர்மானத்திற்குக் கட்டுப்படுவார்கள்.

யான்:—அப்படியா! வெளியானும் வழிப்போக்கனுமாகிய என்னுடைய போக்கு ஒரு மாதிரி யிருக்குமே; இருதிறத்தாருக்கும் பிடிக்காதே. முதலாவது சீர்திருத்தத்தில் அளவு கடந்த ஆத்திரங்கொண்டுள்ள உம்மைப்போன்ற வாலிபர்களுக்குப் பிடிக்குமா? அவர்கள் ஒரு பக்க மிருக்கட்டும். அதிலும் இங்கு நாம் அனுமத்தாய் இத்திண்ணையில் பேசி முடிக்கும் முடிபு ஊரைக் கட்டுப்படுத்துமா. நீரும் யானும் தெருவே போகும் தாண்டவராயனும் செய்யும் முடிவை யார் மதிப்பார்கள். யார் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருகிறது.

ஏரம்பபூ:—சுவாமிகளே! இதோ பெரிய பெரியதனக்கார அண்ணா இருக்கிறார். அவர் ஒண்டியே போதும். நல்லகாலம் இதோ நல்லாண்டி யண்ணா, அதோ குருநாத அண்ணா, மூட்டுக்கட்டை முருகேச மச்சான் எல்லாம், இருக்கவேண்டியவர்களெல்லாம் இங்கேயே யிருக்கிறார்கள். இதுவே ஊர்தான். அவர்கள் சம்மதத்தை மாத்திரம் கேட்டுக் கொள்ளுங்கள். (தொடரும்)

தென்னிந்திய மகாஜன புத்தகசாலை
எல்லாப் புத்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்
வேண்டியவற்றிற்கு எழுதுங்கள்
செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
151, பவழக்காரத் தெரு சென்னை.

# வர்த்தமானம்

## தமிழ் நாட்டு நடப்பு

பேசும் படங்கள் தயாரிப்பதற்காக பெங்களூரில் 10 லட்ச ரூபாய் மூலதனத்தில் திவான் பகதூர் முனிசாமி நாயுடு தலைமையில் ஒரு கம்பெனி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

---

திருச்சி முனிசிபல் சபையைக் கலைத்துவிடும்படியும், முனிசிபல் கமிஷனரே ஸ்பெஷல் ஆபீசராக இருந்து இரண்டு வருடங்கள் நிர்வாகத்தைக் கவனித்து வரும்படியும் சென்னை சர்க்கார் பிறப்பித்த உத்தரவின்படி கவுன்சில் கலைக்கப்பட்டது.

---

காலஞ்சென்ற டாக்டர் பெசண்ட் அம்மையார் ஸ்தானத்தில் டாக்டர் ஜி. எஸ். அருண்டேல் 21-6-34 முதல் 7 வருட காலத்துக்கு அடையாறு பிரம்மஞான சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவருக்கு 20000 ஓட்டுகளும் இவருக்குப் போட்டியாக நின்ற எர்னஸ்ட் உட்டிற்கு 5000 ஓட்டுகளும் கிடைத்தன. 10000 அங்கத்தினர்கள் ஓட்டுக் கொடுக்கவே இல்லை.

---

பச்சையப்பன் டிரஸ்ட் போர்டிலிருந்து ஜி. நாராயணசாமி செட்டியார் விலகி விட்டதால் அவரது ஸ்தானத்துக்கு ஜி. ஜானகிராம செட்டியாரை கார்பொரேஷன் இந்து கவுன்சிலர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

---

திருவல்லிக்கேணியில் தலைமைக் காரியாலயத்தையும், மதுரை, காஞ்சீபுரம், பம்பாய் முதலிய இடங்களில் கிளைஸ்தாபனங்களையும் வைத்து நடத்திவந்த 'சிவராம அய்யர் பாங்கி' 20-6-34 முதல் அடைபட்டுவிட்டது. ஏழைகள்தான் அதில் அதிகமாகப் பணம் போட்டிருக்கிறார்கள்.

---

24-6-34-ந் தேதி மதுரையில் ஸ்ரீ ஜே. என். ராமநாதன் வீட்டில் 100 பேர்கள் வரையில் புகுந்து அவரை அடித்துக் காயப்படுத்தியதாகத் தெரிகின்றது.

---

ஜஸ்டிஸ் கட்சியில் பிராம்மணர்களைச் சேர்ப்பதைக் கண்டித்து 1-7-34-ல் சென்னை கடற்கரையில் ஸ்ரீ சி. டி. நாயகம் தலைமையில் ஓர் பெருங்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான்கள் மோகனரங்கம், டாக்டர் மாசிலாமணி, டி. வி. சுப்பிரமணியம் முதலியோர் பேசினர்.

---

திருநெல்வேலி ஜில்லா, கனக்காடு கிராமத்தில் 1-7-34-ல் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கட்டுக் கொல்லப்பட்டார்.



சிவகிரி ஸ்ரீசுப்பிரமணியர் கோயில், அய்யனார் கோயில், மீனாட்சியம்மன் கோயில் மற்றும் இரண்டு கோயில்களில் விக்கிரகங்களைப் பெயர்த்தெடுத்து அவற்றின் கீழிருந்த விலையுயர்ந்த நகைகள், கற்கள், தங்கம் ஆகியவற்றை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டனர்.

---

திருநெல்வேலி முனிசிபல் சேர்மன் ஸ்ரீ மேடை. தளவாய். ரங்கநாத முதலியார் தமது சேர்மன் பதவியையும், அங்கத்தினர் பதவியையும் ராஜிநாமா செய்துவிட்டார்.

---

கோவை ஜில்லா தேவஸ்தான கமிட்டிக்கு ஸ்ரீ சி. எஸ். ரத்தின சபாபதி முதலியார் தலைவராகவும், ஸ்ரீ கந்தசாமிக் கவுண்டர் உப தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

---

திருவாங்கூருக்கு 3 மைல் தூரத்தில் 140 ஏக்கர் நிலத்தில் மூலிகைகள் வைத்து பயிரிட திருவாங்கூர் சர்க்கார் முடிவு செய்துள்ளார்கள்.

---

சென்னை சட்டசபையின் அடுத்த கூட்டம் ஆகஸ்டு மாதம் 1, 2, 3-ந் தேதிகளில் நடக்கும்.

---

சின்னகாஞ்சீபுரம் விளக்கடிகோவில் தோப்புத் தெருவில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீ மாணிக்கவாசகர் தேவார பாராயண சபையில் 18-6-34 சோமவாரத்தன்று ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜையை முன்னிட்டு காலையில் இன்னிசைக் கருவிகளுடனும் அலங்காரங்களுடனும் திருவீதி உற்சவம் அழகாக நடைபெற்றது. மத்தியானம் 12 மணி முதல் 2 மணி வரை ஏழைகள் சுமார் 500 பேர்களுக்கு அன்னமளிக்கப்பட்டது. இரவு 7½ மணிக்கு ஸ்ரீ அருணை வடிவேல் முதலியார் அவர்களால் ஸ்ரீ மாணிக்கவாசகர் சரிதம் மிக விரிவாக உபந்யசிக்கப் பெற்றது. அதைத் தழுவி அச்சரித நுட்பங்களை திரு. க. வஜ்ஜிரவேல் முதலியார் B.A., L.T., அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். வந்தனோபசாரத்தின்பின் விழா இனிது முடிவுற்றது. விழா இனிது நடைபெறுமாறு தூண்டுதல் செய்துவந்த சென்னை திரு. தி. மு. அருணாசல முதலியார் அவர்கட்கும், விழாவில் கலந்துகொண்டு உதவிபுரிந்த திருவாளர்கள் D. C. கந்தசாமி முதலியார், சென்னை பி. செ. மாணிக்கவாசக முதலியார் இவர்கட்கும், உபந்யாசகர்கட்கும் எமது நன்றி உரியதாகுக.

ந. சிவந்தபாத முதலியார், து. செ. கச்சபாலய முதலியார்.

---

திருச்சினாப்பள்ளி ஜில்லா, முசிரிதாலூகா, உன்னியூர் கிராமத்தில் ஸ்ரீ மாசடைச்சியம்மன் என்ற பரிவார தேவதையை நம் குலத்தினர் பூஜிப்பது பண்டையகால முதல் வழக்கமாய் வருவதாலும் மேடி அம்மன் உற்சவமானது அநேக ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறுவது வழக்கமாதலாலும், இவ்வருடத்தில வருகிற ஆடித்திங்கள் இறுதியில் உற்சவம் நடைபெறுவதற்குரிய முயற்சிகள் நடக்கிற தென்பதை வெளி ஜில்லாக்களிலும், வெளி நாடுகளிலுமுள்ள அன்பர்கள் விருப்பப்படி தெரிவித்துக்கொள்ளுகிறேன். இத்தேவதையைக்

குலதெய்வமாகக் கொண்டுள்ளவர்கள் இதன் விவரத்தை அறிய விரும்பின் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

P. மாரியப்ப முதலியார்,
காரியதரிசி, செங்குந்தர் சங்கம்,
உன்னியூர், காட்டுப்புத்தூர் Post, S.I.Ry.

---

## இந்தியச் செய்திகள்

மகாத்மா காந்தி நடத்திவரும் ஹரிஜன இயக்கத்தைக் கண்டிப்பதற்காக ஸ்ரீ ஜெய நாராயண சர்மா 31 நாள் உபவாசமிருக்க விரதமெடுத்துக்கொண்டார். ஆனால் விரதம் ஆரம்பித்த 23-ம் நாள் பழரசம் உட்கொண்டு விரதத்தை முடித்துக்கொண்டார்.

---

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் மெட்ரிகுலேஷன் திட்டம் நல்ல பயனளிக்காததால் விவசாய கல்வித்திட்டம் தயாரிக்க நல்ல யோசனை கூறுபவருக்கு 50 ரூபா இனாமளிப்பதாக டெப்டி கமிஷனர் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

---

ராஜாங்க சபை ஆகஸ்டு மாதம் 8-ந்தேதி ஆரம்பமாகிறது. உத்தியோகம் பற்றற்ற விஷயங்களை விவாதிக்க 5 தினங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

---

சமீபத்தில் பெய்த மழை காரணமாக அஸ்ஸாமிலும், வங்காளத்திலும் எங்கும் வெள்ளக் காடா இருக்கிறது. கபிலி, சூர்மா, பிரம்மபுத்திரா நதிகளில் பெருவெள்ளம் ஏற்பட்டதின் காரணமாக சில சிறு கிராமங்கள் அடியோடு மூழ்கிவிட்டன. ஏராளமான சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. சூசாங்க மகாராஜாவின் லாயம் வெள்ளத்தில் மூழ்கியதால் அதிலிருந்த யானைகளும் குதிரைகளும் அடித்துக்கொண்டு போகப்பட்டு மாண்டன.

---

காசி மகாராஜா தன் தாய்மாமனின் கொள்ளுப் பேரனை சந்திரபாலர் என்னும் 17 வயது சிறுவனை 24-6-34-ல் ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டார். அந்தப் பையனின் தகப்பனார் அஜாம்தார் ஜில்லாவைச் சேர்ந்த சுராஜ்புரி ஜமீந்தாராவார்.

---

இம்மாதம் 16-ந்தேதி ஆரம்பமாகும் இந்தியா சட்டசபையில் இளைஞர்கள் சுருட்டு, சிகரெட்டு முதலியன பிடிக்கக்கூடாதென ஸ்ரீ ஹரிவிலாச சாரதாவும், சென்னை நகரிலுள்ள ஹிந்து ஆலயங்கள் செவ்வையாய் நடைபெறுவதற்காக ஸ்ரீ ராமகிருஷ்ண ரெட்டியாரும் மசோதாக்கள் கொண்டு வருகிறார்கள்.

---

கோஹிகாக் மலையிலிருந்து பிரம்மாண்டமான பாறைகள் விழுந்ததால் சகர்க்காஷ் நாலக் என்ற கிராமமே புதையுண்டு நாசமாய்விட்டது. அந்த கிராம வாசிகளில் மூன்றே பேர் உயிர் தப்பினர்.



## வெளியுலகப் போக்கு

சைனாவில் கையாங்சு மாகாண அரசாங்கத்தின் ஆபீசர்கள் சீன பாஷை தெரியாத அன்னியர்களிடம் மட்டும் ஆங்கிலத்தில் பேசலாமென்றும், மற்றவர்களிடம் ஆங்கிலத்தில் பேசக்கூடாதென்றும், சீன பாஷையிலேயே பேசவேண்டுமென்றும், தவறிநடப்பவர்கள் தண்டிக்கப்படுவார்களென்றும் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

---

பெராக்கோவில் பெட்ரோல் ஊற்று ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதில் 10 நிமிஷத்தில் லட்சம் காலன் பெட்ரோல் எடுக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

லண்டனில் பிரெஞ்சு சர்க்கார் ஒரு பிரெஞ்சு கலாசாலை ஸ்தாபிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். அதற்கு 1,20,000 பொன் செலவாகுமாம்.

---

சோவியத் ரஷ்யாவில் 13,00,000 பேர் அடங்கிய ராணுவம் இருக்கிறது. யுத்தம் ஏற்பட்டால் இதில் சேர்ந்துகொள்ள 75,00,000 பேர்கள் தயாராக இருக்கிறார்கள்.

---

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராஜா எடுத்துக்கொண்டதால் ஸ்ரீ பால்ட்வின் ஆக்டிங் பிரதம மந்திரியாகவும், ஸ்ரீ ஆலிவர் ஸ்டான்லி தொழில் மந்திரியாகவும், ஸ்ரீ டப் கூப்பர் உள்நாட்டு மந்திரியாகவும் நியமிக்கப்பெற்றிருக்கிறார்கள்.

---

## சிறுகதைப் பரிசுகள்

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்டவல்ல சிறுகதைகளுக்கு அவ்வவற்றின் தரத்திற் கேற்றபடி ஐந்து ரூபாய் வரையில் பரிசளிக்கப்படும். கதைகள் சொந்தக் கற்பனையாகவும் இரசனை நிரம்பியதாகவு மிருத்தல் வேண்டும். கதையின் அமைப்பு, தமிழ் நடை, இன்பச் சுவை இவைகளைக் கொண்டே பரிசுத்தொகை தீர்மானிக்கப் பெறும்:

# பண்டைத் தமிழ்ப் பெண்கள்

[K. கோவிந்தன், மாணவன், திருவத்திபுரம்]

(சென்ற இதழ் 329-ம் பக்கத் தொடர்ச்சி)

செருக்கும் சிறுமையும் இல்லாது, குற்றமும் சீற்றமும் தன்னைச் சாராது, காட்சிக் கெளியனாய், கடுஞ்சொல்லன் அல்லனுமாய் ஆட்சி நடாத்தும் அரசன் மாட்டும், அவன் தன் நாட்டின் மாட்டும் நம் பண்டைத் தமிழ்ப் பெண்கள் கொண்ட பற்று யாவராலும் வியக்கத் தக்கதேயாம்.

கொக்கின் வெளிய தூவிபோன்று வெளுக்க நரைத்த தலையினையும், தளர்ந்த நரம்புகளையும், மெல்லிய தோலையும், சிறுத்த இடையினையும் உடைய முதியாள் ஒருத்தி அடிக்கும் கோலுக்கு அஞ்சாது எதிர்மண்டும் பாம்பு போன்ற தன் புதல்வன் செருக்களத்துக் கைக்கொண்ட படைக்கலத்தை வீழ்த்திவிட்டுப் புறங்கொடுத்தான் என்று பலரும் கூறக் கேட்டுப் பெரிதும் சினம் கொண்டு, "என்மகன் மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்ட என் தனம் அறுத்திடுவேன் யான்" எனக்கூறிக் கைக் கொண்ட வாளொடும் களம் புகுந்து, ஆங்கு "மானிலம் கூறும் மறை கேட்பவைகளைப் போல்" வீழ்ந்து கிடக்கும் பிணங்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டு வருங்கால் தன் மகன் பகைவர் படைக்கலங்களாற் சிதைவுற்று வீழ்ந்து கிடக்கும் கிடக்கையைக் கண்டு ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளாயின், அவள் தன் வீரத்தையும், மண்டமர்க்குத் தோற்றோடும் தன் மகனையும் மகன் எனக் கருதா சீரிய எண்ணத்தையும் என்னென்று கூறுவது.

அன்றியும் முந்திய நாட்களில் நடந்த போரில் தன் தந்தை யானையெறிந்து களத்துப் பட்டான் ஆகவும், முந்தின நாள் உற்ற போரில் இவள் கொழுநன் ஆநிரையை மறுத்து ஆங்குப் பட்டானாகவும், இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று, பால்மணம் அறாத தன் தனி மைந்தனுடைய பரந்திருக்கும் தலைமயிரில் எண்ணெய் பூசி வாரிமுடித்து, வெள்ளாடையை விரித்து அலைத்து உடற்படப் போர்த்து, கூரிய வேலைக் கையில் கொடுத்து, அரும் பெறற் புதல்வன் தன் குலத்திற்கு ஒருவன் உளன் என்பதையும் உணராது, "செருமுகம் நோக்கிச் செல்க" என விடுக்கும் வீரத் தொல்குல மகளிர் போன்ற பெண்களை என்று நம் தமிழன்னை மீண்டும் ஈன்றெடுப்பாளோ அறியேம்.



இன்னும் இவ்வீர மகளிர் தன் நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் இன்னின்ன கடன்கள் உண்டென விதித்துள்ளார்கள். அதைக் கீழே குறிப்பிட்டுள்ள புறப்பாட்டான் அறிக.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே ;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே ;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

இதனுள் புதல்வனைப் பெற்று வளர்த்தல் தன்கடன் என்றும், "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி யிருப்பச் செயல்." என்பதற் கிணங்க அறிவு ஆண்மை ஆற்றல் இவற்றால் நிரம்பியோனாக்குதல் தந்தைக்குக் கடன் என்றும், வேலைக் கூரி தாக்கிக் கொடுத்தல் கொல்லற்குரிய கடன் என்றும், வீரவொழுக்கமும் நன்னடக்கையும் பெறச் செய்தல் வேந்தற்குக் கடன் என்றும், ஒளி வீசுகின்ற வாளினாலே போரில் பகைவரை அடர்த்து களிறுகளை எறிந்து வாகைசூடுதல் புதல்வற்குக் கடன் என்றும் கூறியதறிக.

இன்னும் இவர்கள் கற்பிற் சிறந்தவர்களாயும், வீரம் மிகுந்தவர்களாயும் இருந்ததோடு அமையாது, மணமுற்ற பொன்மலர் போலக் கல்வியிற் சிறந்த கட்டழகிகளாகவும் திகழ்ந்து வந்தார்கள் என்பதற்கு இவர்களால் பாடப்பெற்று புறநானூற்றில் காணக்கிடக்கும் செய்யுள்களும், ஆத்திச்சூடி முதலிய நீதி நூல்களும், திரு ஆலங்காட்டு மூத்த திருப்பதிகம் முதலிய பக்தி நூல்களும் சாலும் கரியாம்.

இன்னும் இவர்கள் குறிப்பறிந்து பாடும் ஆற்றல் வாய்ந்தவர்களாகவும் இருந்து வந்தவர்கள் என்பதற்கு,

"இவ்வே-பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியனக ரவ்வே
யவ்வே-பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றிய மாதோ வென்றும்
உண்டாயிற் பதங் கொடுத்து
இல்லா யினுட னுண்ணும்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேயே"

என்ற பாட்டே போதிய சான்றாம்.

இது, ஔவையார் அதியமானிட மிருந்து தொண்டைமானிடம் தூதுசென்ற காலத்தில் தொண்டைமான் அவருக்குத்

# நன்கொடை வரவு

## திருவத்திபுரம்

கிரிதரன் பேட்டை திரு. பு. கிருஷ்ணப்ப முதலியார் குமாரன் திரு. கோபாலனுக்கு நடந்த திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 0 12 0

கிரிதரன்பேட்டை செல்ல பெருமா முதலியார் குமாரர் திரு. காங்க முதலிக்கு நடந்த திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 0 6 0

கிரிதரன்பேட்டை திரு. மா. பூங்குமர முதலியார் குமாரர் திரு. செல்வகுட்டி & திரு. சுப்ரமண்யனுக்கு நடந்த திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 2 4 0

ஈஸ்வரபுரம் திரு. கன்னியா முதலி குமாரர் பாவாடை மூர்த்திக்கு நடந்த திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 0 6 0

கிரிதரன்பேட்டை திரு. பன. இரங்கசாமி முதலி குமாரர் திரு. பச்சையப்பனுக்கும், திரு. முருகேசனுக்கும் நடந்த திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 0 8 0

கிரிதரன்பேட்டை திரு. மா. ஆறுமுக முதலியார் குமாரர் திரு. வடிவேலனுக்கும், திரு. ஆதிமூல முதலியார் குமாரர் திரு. கந்தசாமிக்கும் நடந்த திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 1 8 0

கிரிதரன்பேட்டை திரு. இலக்குமண முதலியாரின் சகோதரருக்கு நடந்த திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 0 3 0

கிரிதரன்பேட்டை திரு. திருவேங்கட முதலியார் குமாரர் திரு. சோலைக்கு நடந்த திழிமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 0 8 0

கிரிதரன்பேட்டை திரு. புதூர். சரவண முதலியார் குமாரா திரு.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

தன் அரண்மனையைக் காட்டுவான் போன்று தன் ஆயுத சாலையைக் காட்டின காலத்தில் ஔவையாரால் பாடப்பெற்றது.

இதில் "தொண்டைமானின் படைக்கருவிகள் எல்லாம் (போரில் பயன் படாமையால்) மயிற்பீலி அணியப்பட்டு, மாலை சூட்டப்பட்டுக் காம்பு திருத்தி நெய்பூசி காவலையுடை அரண்மனைக்கண் (வீணே) இருக்கின்றன; அதியமானுடைய படைக்கருவிகள் பன்முறை போரில் பகைவரைக் குத்துதலான் கங்கும் நுனியும் முரிந்து, செப்பனிடக் கொல்லனது பணிக்களரியாகிய சிறிய கொட்டிலை அடைந்திருக்கின்றன." என்ற கருத்தமைத்து தொண்டைமான் படைக்கலத்தைப் புகழ்பவர்போல் இகழ்ந்தும், அதிகமான் படைக்கலத்தைப் பழிப்பவர்போல் புகழ்ந்தும் பாடிய இவருடைய புலமைதான் என்னே!



திருவேங்கடத்திற்கும், திரு. முத்துபெருமாவுக்கும் நடந்த திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 0 6 0

## புதுச்சேரி

புதுவையைச் சார்ந்த கதிர்காமம், க. சி. முத்துசாமி முதலியார் அவர்கள் நூதனமாய்க்கட்டிய இல்லத்தில் கிரஹப்பிரவேசம் செய்த புண்ணிய முகூர்த்த நாள் அன்று நமது சங்கத்திற்கு மனமுவந்து அளித்த நன்கொடை ரூ. 0 4 0

கொடவாசல், பிடாரி கோயில் தெரு, பட்டு ஜவுளி வியாபாரம் திரு சு. ஷ. கு. சண்முக முதலியார் குமாரர்கள் குழந்தைவேலுக்கும், ரத்தின சபாபதிக்கும், ஸ்ரீமுக ஆனி 20௳, (3-7-33) திங்கட்கிழமை தினம் நடந்த கர்ணபூஷண முகூர்த்தத்தில் வழங்கியநன்கொடை ரூ. 1 0 0

## கூனவேலம்பட்டி புதூர்

கூனவேலம்பட்டி புதூர் சி. ஆ. சமுக முதலியார் அவர்கள் தமது இல்லத்தை நூதனமாய்ப் புதுப்பித்து பவ வைகாசி 12௳ கிரகப்பிரவேச முகூர்த்தம் நடத்தியதின் ஞாபகார்த்தமாய் மனமுவந்து வழங்கிய நன்கொடை ரூ. 0 8 0

ஷையூர் காரியக்கார் ஓ. செ. முருகேச முதலியார் அவர்கள் தமது திரிதிய புத்திரன் சீனிவாச முதலியாருக்கும், வெண்ணந்தூர் ரா. பெருமாள் முதலியார் குமாரத்தி சித்தாயம்மாளுக்கும் பவ ஆனி 15௳ நடந்த திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 0 8 0

கரிச்சிபாளையம் அ. பெரியண்ண முதலியார் புதல்வி திருநிறைச் செல்வி அங்காயி அம்மாளுக்கும் எலயாம்பாளையம் ஆறுமுக முதலியார் குமாரர் பெரியண்ண முதலியாருக்கும் பவ ஆனி 11௳ நடந்த திருமண முகூர்த்தத்தில் பெண்வீட்டார் அளித்த நன்கொடை ரூ. 0 4 0

## அசனம்மாபேட்டை

அசனம்மாபேட்டை சா. சாந்தான் முதலியார் மூத்த மகள் திருமதி காமாட்சி யம்மாளுக்கு 29-12-33-ந்தேதி நடைபெற்ற பருவவிழாவை முன்னிட்டு வழங்கப்பட்ட நன்கொடை ரூ. 0 4 0

பவயாண்டு, சித்திரைத் திங்கள் 22௳ நடைபெற்ற ஷையூர் சி. அண்ணாமலை முதலியார் மனைவி திருமதி கல்யாணி அம்மாளின் பருவ விழாவில் வழங்கப்பட்ட நன்கொடை ரூ. 0 4 0

சைதாப்பேட்டை முனிசிபல் சேர்மனும், நமது சங்கத்தின் துணைத் தலைவர்களில் ஒருவருமாகிய ஸ்ரீ சு. சடையப்ப முதலியார் அவர்கள் இவ்வுலகம் நீத்ததின் ஞாபகார்த்தமாக அவரது குமாரர் நடராஜ முதலியார் அவர்கள் சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை ரூ. 5 0

## கிளர்ச்சி

### தென்னாற்காடு ஜில்லா

#### முத்து கிருஷ்ணபுரம்

16-5-34 இரவு 7-மணிக்கு மொ. அண்ணாமலை முதலியார் வீட்டு முன்பாகக் கூடிய கூட்டத்தில் ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் "சமூக முன்னேற்றமும், பத்திரிகையும்," என்பது பற்றி சொற்பொழி வாற்றினார். இரவு 11-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

#### கோணலவாடி

26-5-34 காலை 7-30-மணிக்கு வை. ராமசாமி முதலியார் தலைமையில் அவ்வூர் ஸ்ரீ. திருஞானசம்பந்த சுவாமிகள் திரு மடத்தில் கூடிய பெருங் கூட்டத்தில் சைவ சித்தாந்த தமிழ்ப் புலவர் ச. நா. குமரகுரு முதலியாரவர்கள் "செங்குந்தரும் ஜீவகாருண்யமும்" என்பது பற்றி சுமார் 4-மணி நேரம் சொற்பொழி வாற்றியபின், செங்குந்த மித்திரனை ஆதரித்தல், நன்கொடையீதல், கக்ஷி யொழித்தல் முதலிய தீர்மானங்கள் நிறைவேறியபின் 11-30-மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

#### சரவணப்பாக்கம்

28-5-34 இரவு 7-மணிக்கு திருவாமாத்தூர் கௌமார சபை பக்தருள் ஒருவரும், பிரபல மிராசுதாரரும், மணியக்காரருமாகிய தமிழ்ப் புலவர் மு. கதிர்வேல் முதலியார் அவர்கள் தலைமையில் கிராம பஞ்சாயத்து ஆபீஸ் கட்டடத்தில் கூடிய கூட்டத்தில் தலைவர் முன்னுரையின் பின் சங்கப் பிரசாரகர் ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் "பார்வதி திருமணம்" என்பது பற்றி, சுமார் 3-மணி நேரம் சொற்பொழி வாற்றினார். தலைவர் முடிவுரை கூற அரகர கோஷத்துடன் 11-மணிக்குக் கூட்டம் முடிந்தது.

### தஞ்சை ஜில்லா

#### மாயவரம் தாலுக்கா மேலபாதி

#### ஸ்ரீகலைமகள் செங்குந்த வாலிபர் சங்கம்

1934ஹு ஜுன் மீ 26உ மாலை 6 மணிக்கு உத்ராபதியாருக்கு அபிஷேக ஆராதனை செய்து, அதன் முன்னிலையில் அருணகிரிநாதர் திருநக்ஷத்திர வைபவம் திரு. பெ. சாமிநாத முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கடவுள் வணக்கம் கூறியபின் வை. மு. சொக்கலிங்கம் அருணகிரிநாதர் வரலாற்றைப்பற்றி மிக விரிவாக



சொற்பொழிவு நிகழ்த்தினார். வந்தன உபசாரம் திரு. சு. த. கோவிந்தராசுவினால் கூறப்பெற்றுக் கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது முடிந்தது.

சங்க உத்தியோகஸ்தர்கள்

தலைவர் S. கோவிந்தசாமி முதலியார், உபதலைவர் V. M. சொக்கலிங்க முதலியார், காரியதரிசி M. நாகராசு முதலியார், உதவி காரியதரிசி A. N. முனிசாமி முதலியார், பொக்கிஷதார் S. D. கோவிந்தராசு; நிர்வாகசபை அங்கத்தினர்கள் N. மாரிமுத்து, R. சொக்கலிங்கம், S. மாணிக்கம், S. கோவிந்தராசு, P. பாவாடை, M. உத்திராபதி. மெம்பர்கள் G. முனியன், N. சீனிவாசன்.

V. M. சொக்கலிங்க முதலியார்.

### திருநெல்வேலி ஜில்லா

#### சங்கரநயினார் கோவில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

ஆனிமீ 10உ இரவு பாடசாலை முன் மைதானத்தில் திருவாளர் S. பழனியாண்டி முதலியார் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

சமூக, தேசீய முன்னேற்ற ஆர்வம் படைத்த குடியாத்தம் தாலூக்கா போர்டு தலைவர் திருவாளர் மா. ஆ. வேலாயுத முதலியார் அவர்கள் அகால மரண மடைந்தமைக்கு இக்கூட்டம் அனுதாபப்படுவதுடன் அன்னார் குடும்பத்தினர்களுக்கும் ஏனைய உறவின் முறையார்களுக்கும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருநட்சத்திரம் ஆனி 12 தேதி இரவு 8 மணிக்கு இரவு பாடசாலையில் நடைபெற்றது. திருவாளர் S. பழனியாண்டி முதலியார் அவர்கள் ஸ்ரீ அருணகிரிநாதர் வரலாறு என்பதுபற்றிப் பேசினார்கள். தாம்பூலம் வழங்கப்பட்டு சபை இனிது நிறைவேறியது.

இங்ஙனம்,
S. பிச்சாண்டி முதலியார்.

#### மதுரை செங்குந்தத் தொழிலாளர் அபிவிருத்தி கழகம்
#### அங்குராம் வாசகசாலைத் திறப்பு விழா

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் கல்வி பயின்ற காலஞ்சென்ற நம் குலாபிமான காளையர் M. அங்குசாமி, C. ராமலிங்கம் இருவர்களின் ஞாபகார்த்தமாக ஷை கழகத்தின் ஆதரவில், 1-6-34 மாலை 6 மணிக்கு தல்லாகுளம் கொண்டா பாப்பய்யர் அவர்கள் மண்டபத்தில், மதுரை ஜில்லா கல்வி இலாகா தலைவர் (Dt. educational Officer) ஸ்ரீமான் R. M. Savur Esq., B. A. அவர்கள் தலைமை வகித்து "அங்குராம்" வாசகசாலையைத் திறந்து வைத்தார்கள். அவ்வமயம் ஆசிரியர் S. V. வீரப்பன் அவர்கள், C. ராமலிங்கம், M. அங்குசாமி இருவர்களின் குணாதிசயங்களைப் பற்றியும், திரு. P. ஆதிமுத்து B. A. அவர்

கள் வாசகசாலை என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் பின்னுரை கூறியபின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு சந்தன தாம்பூலம் வழங்கி கூட்டம் இனிது முடிவுற்றது.

அடியிற் கண்டவர்கள் வாசகசாலைக்கு இனாமாக புஸ்தகம் அளித்தார்கள்.

திரு. M. R. சேவுர், B. A., மதராஸ் அட்வகேட் V. ரெத்தினமுதலியார், திரு. P. V. முத்துக்கருப்ப முதலியார், K. V. ராமசாமி முதலியார், K. பேக்ஷிமுத்து முதலியார், R. N. திருவாசகம், M. மாயாண்டி முதலியார், S. M. தங்கவேலு.

## செங்கற்பட்டு ஜில்லா

### உத்திரன்மேரூர்

இவ்வூர் தேவார பக்தஜன சபையில் அநேக ஆண்டுகளாக திருநட்சத்திரங்களில் ஏழைகளுக்கு அன்னமளிப்பது வழக்கம். ஆனால் இடவசதி இல்லாததால் பல கஷ்டங்கள் இருந்து வந்தன. இந்தக் கஷ்டம் தீர செங்கற்பட்டு ஜில்லாபோர்டு மெம்பரும், சபையின் தலைவருமாகிய திரு V. M. துரைசாமி முதலியார் அவர்களால் திருமடம் ஒன்று புதிதாய்க் கட்டப்பட்டது. அதில் அப்பர் சுவாமிகள் திருநட்சத்திரத்தன்று 1000 ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. அன்று இரவு சுவாமிகள் சரிதம் ஸ்ரீ ப. வெ. தங்கவேல் முதலியார் அவர்களால் உபந்யசிக்கப்பட்டது. பின்பு தலைவர் திரு. துரைசாமி முதலியாரவர்கள் சன்மார்க்கத்தைப்பற்றி அங்கத்தினர்களுக்கு எடுத்துக்கூறி உபந்யாசகருக்கு வந்தனம் கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

8-5-34-ல் குஷ்டரோக நிவாரண சங்கத்தில் சிகிச்சைக்கு வந்தவர்களுக்கு ஷை சங்க உபதலைவர் திரு. துரைசாமி முதலியாரவர்கள் அன்னமளித்தார்.

30-5-34-ல் திருஞான சம்பந்த சுவாமிகள் திருநட்சத்திரத்தன்று திரு. வெ. முருகேச முதலியார் பொருளுதவியால் 700 ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. இரவு பாராயணமும் வீதிவல உற்சவமும் நடந்த பின் திரு. துரைசாமி முதலியார், மாணிக்க முதலியார் இவர்களுக்கு வாழ்த்துக்கூறி கூட்டம் இனிது நிறைவேறியது.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

# நிர்வாக சபைக் கூட்டம்

11-7-34-ந் தேதி கூடிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.

(1) அரசாங்கமும்—உபகாரச் சம்பளமும்: கல்வியில் பிற்போக்குடைய சமூக மாணவர்களுக்கு அரசாங்கத்தார் அளித்துவரும் உபகாரச் சம்பளத்தில் அடுத்த ஏப்ரல் மாத முதல் சிக்கனம் செய்வதாக பிறப்பித்துள்ள 1934-ம் வருடத்து 47-ம் நெம்பர் உத்தரவைக் கண்டு இக்கூட்டம் மிக வருந்துவதுந் தவிர, அநேக சமூகத்தவர்கள் வருமானக் குறைவினால் ஜீவனோபாயத்திற்கே வகையற்று நாங்கொணாத் துன்பம் அனுபவித்து வருகின்ற இக்கஷ்ட காலத்தில் பிற்போக்கான சமூகத்திலுள்ள பெற்றோர்களால் பூராச் சம்பளமும் செலுத்துவதற்கு சாத்தியப்படாதென்பதையும், இவ்வுத்தரவைக் கேள்விப்பட்டவுடன் இவ்வாண்டிலேயே அநேக மாணவர்கள் பாடசாலையினின்றும் விலகிவிட்டார்களென்பதையும், அடுத்த ஆண்டில் பூராச் சம்பளம் செலுத்துமாறு வற்புறுத்தப்படுவராயின் இன்னும் பலர் விலகிக்கொள்வார்களென்பது நிச்சயமென்பதையும், அதனால் கல்வியில் பிற்போக்கான சமூகத்தவர்களின் கல்வி யபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்படுமென்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு இவ்வுபகாரச் சம்பள விஷயத்தில் சிக்கனம் செய்யாமல் வழக்கம்போல் வழங்கி வரவேண்டுமென்றும் 47-ம் நெம்பர் உத்தரவை அடியோடு ரத்து செய்துவிட வேண்டுமென்றும் இக்கூட்டம் சென்னை அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளுகிறது.

வெளியிடங்களிலுள்ள ஒவ்வொரு கிளைச்சங்கமும் கூட்டங்கூடி இதே மாதிரி தீர்மானஞ் செய்து சென்னை அரசாங்கத்திற்கும், கல்வி இலாகாத் தலைவருக்கும், ஜில்லா கல்வி சபையாருக்கும் அனுப்பவேண்டுமென எல்லா கிளைச்சங்கங்களும் வேண்டிக்கொள்ளப் பெறுகின்றன.

(2) சென்னை அரசாங்க உள்நாட்டு மந்திரியாக நியமனம் செய்யப்பெற்றுள்ள ராவ்பகதூர் A. T. பன்னீர் செல்வம் அவர்களுக்கு இக்கூட்டம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்நியமனம் செய்த சென்னை அரசாங்கத்தையும பாராட்டுகின்றது.

(8) குடியேற்றம் தாலுக்கா போர்டு தலைவராகவும், முனிசிபல் அங்கத்தினராகவும், வடாற்காடு ஜில்லா போர்டு மெம்பராகவும் இருந்தவரும், நமது சங்க அங்கத்தினரும், குலாபிமானியுமாகிய திரு. மா. ஆ. வேலாயுத முதலியார் அவர்களும், சைதாப்பேட்டை முனிசிபல் சேர்மனும் நமது சங்கத்தின் துணைத்தலைவர்களில் ஒருவருமாகிய திரு. சடையப்ப முதலியார் அவர்களும் அகால மரணமடைந்

தமை கேட்டு இக்கூட்டம் மிக வருந்துவதோடு தனது அனுதாபத்தை அவர்களது குடும்பத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

## செங்குந்தர் கல்விநிதி

(1) வழக்கப்படி 1934-35-ம் வருடத்திற்கு உபகாரச் சம்பளம் வழங்குவதென்றும், மாணவர்கள் உபகாரச் சம்பள மனுக்களை 31-7-34-ந்தேதிக்குள் வந்து சேருமாறு அனுப்பிவிடவேண்டு மென்றும் முடிவு செய்யப்பட்டது.

(2) திரு. ம. சண்முகசுந்தர முதலியாரிடமுள்ள கல்விநிதி மூலதனத்தை வாங்கி பாங்கியில் அமைச்சர் பொருட்காப்பாளர் பெயர்களில் கரெண்டு அக்கவுண்டில் நிதியின் பெயரில் சேமித்து வைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

---


## மதனசுந்தரி மாத்திரைகள்

பால்ய சேஷ்டைகளாலும், மிதமிஞ்சின ஸ்திரீ சம்போகத்தாலும் பலஹீன மடைந்துள்ளவர்களுக்கு இது ஓர் கற்பகம் போன்றது. மாத்திரை சாப்பிட்ட அரைமணி நேரத்திற்குள் இழந்த பலத்தை மீண்டும் தருவதால் ஸ்திரீபுருஷ அன்யோன்ய சங்கமமும் அதனால் புத்திர சந்தானமும் உண்டாகிறது. ஒரு முறை வாங்கிப் பார்த்தால் உண்மை தெரியும்.

போஜனத்திற்குப் பின் ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகள் சாப்பிடவும்.

தபால் செலவு வேறு. டப்பி 1-க்கு ரூபா 1—0—0.

ஆநந்த ரசாயனு என்கிற

## யதேச்சா சுகபேதி மாத்திரை

பத்தியமில்லை. பாலர்களும் விருத்தர்களும் சாப்பிடலாம். நமக்கு வேண்டுமளவு பேதியாகவும், வேண்டாமென்றால் நிறுத்திக் கொள்ளவுங் கூடியது. இளைப்பு இல்லாமல் பேதியாகும். மலச்சிக்கலை ஒழிக்கும். ஜுரம் உள்ள சமயத்தில் ஜுரம் நிவர்த்தியாகும். மிகவும் அனுபோகமானது.

50 மாத்திரைகள் கொண்ட டப்பி 1-க்கு ரூ. 1—0—0
25 ,, 1-க்கு ரூ. 0—8—0

தபால் செலவு வேறு.

தி ரூபி ஸ்பெஸிபிக் பார்மஸி,
மதராஸ்.






எல்லாவிதமான தலைநோய், இடுப்பு கைகால் வலி, ஜலதோஷம், சளி, மூடக்குவாதம், கீல்வாதம், திமிர்வாதம், இழுப்பு, வீக்கம், சுளுக்கு, கட்டி, ரணம், தேள்கடி முதலியவைகளுக்கு சஞ்சீவி போன்றது.

டின் 1-க்கு அணு 7

## வென்லோட்

எல்லாவிதமான கண் வியாதிகளைக் கண்டிப்பதிலும், கூளைக் கொதிப்பினை நீக்கி குளிர்ச்சியைத் தருவதிலும், மூலச்சூடு, பித்தமயக்கம், நமச்சல், தூக்க மின்மை யாகிய உஷ்ண வியாதிகளைப் போக்குவதிலும் நிகரற்றது. சரீரத்திற்கு ஓர் பொன்னிறத்தையும் வழங்கும்.
6 அவுன்ஸ் புட்டி 1க்-கு ரூ. 1—4—0

## வைடாலிங்

க்ஷயம், பாண்டு, பித்தம், வயிற்றுப்புசம், எரிச்சல் இவற்றை நீக்கி, பசி தீபனத்தையும் தாது விருத்தியையும் வழங்கவல்லது.
1 பவுன் டின் 3—0—0 ½ பவுன் 1—10—0 ¼ பவுன் 0—14—0

## வாரோ

இது தங்க சம்பந்த முடையது. நரம்புத் தளர்ச்சி, அசுத்த ரத்தம், இந்திரிய ஒழுக்கு, ஸ்திரீ சம்பந்தமான எல்லாவித வியாதிகளுக்கும் ஓர் ஒப்பற்ற ஔஷதம். 20 வேளை மருந்து ரூ. 4—0—0

## கஸ்தூரி மாத்திரை

ஜுரம், ஜன்னி, இருமல், குழந்தைகள் மாந்தம், இழுப்பு முதலியவற்றைக் கண்டிப்பதில் நிகரற்றது. புட்டி 1க்கு 0—8—0

## கோடம்பாக்கம் சர்வமேக சஞ்சீவி எண்ணை

திமிர், குன்மம், மூலம், பௌத்திரம், மேகம், லிங்கப்புத்து, பித்த வெடிப்பு ஆகிய சகல மேகரோகங்களுக்கும் சஞ்சீவி போன்றது.
3 அவுன்ஸ் புட்டி 1க்கு ரூ. 1—0—0

## டென்டால்

பல் வலி, பல் புழு, ஈறுகரைதல், ரத்தம் வடிதல், ஆகியவைகளை நீக்கி பற்களை பள பளப் புடையன வாக்கும் டப்பி 1க்கு 0—2—0

## படை மருந்து

எல்லாவித படைகளையும் கண்டிக்கத்தக்கது. டப்பி 1க்கு 0—8—0

எல்லாவற்றிற்கும் தபால் செலவு வேறு.
இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஏஜண்டுகள் தேவை.

மண்ணடி, சென்னை.

Regd. No. M. 1514

# பெண்டுகளின் உணர்ச்சியே

# குடும்ப வாழ்க்கையின் மகிழ்ச்சி

நாட்டின் செல்வம் பெருக, மாதர்களின் பொருப்பு முந்தவேண்டும்.

ஏழைகளும் சுலபமாய் பணம் மிச்சப்படுத்தவும், அத்துடன் பெருத்த குடும்ப ஆதாரம் கற்பித்துக் கொள்ளவும் மேலான வழி.

"ஒன்றேன்று நூருகி நூறே ஆயிரமாகும்"

# ரூபாய் 500 பெறலாம்

பேட்ரியாட்டிக் அன்னியோன்னிய உதவி திட்டத்தில் (The Patriotic Mutual Benefit Scheme) 18 முதல் 55 வயது வரையுள்ள ஆண்பெண் யாவரும் மெம்பராகச் சேர்ந்து ரூபாய் 500 வரை உதவி பெற முந்துங்கள். பிரவேச கட்டணம் ரூபாய் 4—8—0 மாத்திரம். மாத சந்தா ரூபாய் ஒன்று. வருஷாந்திர கட்டணம் ரூபாய் ஒன்று. வைத்தியப் பரீக்ஷை கிடையாது. எவருக்கும் அதிகச் செலவில்லை. எல்லாருக்கும் உதவி.

சாதாரணமாய் இன்ஷியூரன்ஸ் கம்பெனியின் பங்குகளுக்குத் தகுந்த லாபம் கிடைத்து வருவது சகலருக்கும் நன்றாய்த் தெரியும். முதல் வருஷத்தில் 100-க்கு வருஷம் 1-க்கு. 15 ரூ. முதல் 20 ரூபாய் வரை லாபம் கிடைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. 30-8-34 வரையில் மட்டும் பங்குகள் கொடுக்கப்படும். பங்கு 1-க்கு 5 ரூபாயும் பிரவேச தனம் பங்கு 1-க்கு நாலணு வீதமும் பங்குகள் தேவையுள்ளவர்கள் உடனே பணம் அனுப்பித் தேவையான பங்குகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தியா, பர்மா, சிலோன், மலேயா பகுதிகள், தென் ஆப்பிரிக்கா இவைகளிலுள்ள சகலமான டவுன்களுக்கும், கிராமங்களுக்கும் ஏஜண்டுகள் தகுந்த சம்பளத்தின்பேரில் தேவை.

சாதாரணமாய் ஏஜண்டுகள் 30 ரூ. முதல் 200 ரூ. வரையில் சுலபமாய் அவரவர்கள் திறமைக்குத் தகுந்தவாறு சம்பாதிக்கலாம். கலக்ஷன் பவர் கொடுக்க ஒவ்வொரு ஏஜெண்டுகளும் 105 ரூபாய் 20 பங்குகளுக்காக செலுத்திவிட வேண்டும்.

இராஜலக்ஷிமி & கோ.,
மானேஜிங் ஏஜண்டுகள்.

The Patriotic Providend, Insurance Co., Ltd.,
Mylapore.

பேட்ரியாடிக் பிராவிடெண்டு
இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்